கலைக்கதிர்

நந்தன ஆவணி

OFFICE OF THE REGISTRAR ...
11 SEP 952
MADRAS

உணவு உற்பத்தியின் முன்னணியில் நிற்பவை

DPF பம்புகள்



'DPF' பம்புகளின்

விசேஷ அம்சங்கள்

- ☆ குறைந்த செலவில் அதிக தண்ணீர்
- ☆ நீடித்த உழைப்பு
- ☆ நிசப்தமான ஓட்டம்
- ☆ குறைந்த கவனிப்பு

மோட்டாருடன் இணைக்கப்பட்ட 'DPF பம்பு

பால் பேரிங்குகள் பொருத்தப்பட்ட 'DPF' பம்புகள் 2" முதல் 6" வரை எல்லா சைஸ்களிலும் கிடைக்கும்.



DPF பெல்ட் டிரைவ் பம்பு

தண்டாயுதபாணி பவுண்டரி

பாப்பநாயக்கன் பாளையம்

போன் 219 கோயமுத்தூர் தந்தி மோட்டார்பம்பு.

இன்ஷ்யூரன்ஸ்

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார் விபத்து

முதலிய இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள், மற்றும் லாபகரமான ஏஜன்சி நிபந்தனைகள் பற்றிய விவரங்களுக்கு எழுதவும்.

பயனீர்

பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்.

தலைமை ஆபீஸ்: ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.

தந்தி: "PROTECTION" போன்: "121"

OFFICE OF THE REGISTRAR OF ... 1 SEP 1952 MADRAS

"கலைக்கதிர்"

கலையின் களஞ்சியம்
சிந்தனைச் செல்வம்

★

- கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து.
- கலை நலம் மிக்கது; எழில் மிகப்பெற்றது.
- பார்த்தால் படிக்கத் தூண்டும்.
  படித்தபின் பாதுகாக்க எண்ணம் வரும்.

ஆண்டுச் சந்தா ஆறு ரூபாய்

கலைக்கதிர்

பீளமேடு போஸ்ட் :: கோயமுத்தூர்.

டெலிபோன் நே. 17 தந்தி: "ரங்கவிலாஸ்

ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜின்னிங், ஸ்பின்னிங்

அண்டு

வீவிங் மில்ஸ், லிமிடெட்.

[ஸ்தாபிதம் 1922-ல்]

★

ரிஜிஸ்டர் ஆபீஸ்: பூளைமேடு, கோயமுத்தூர்.

மூலதனம், ரூ. 16,00,000

வெளியிடப்பட்டு வசூலான ரூ. 15,02,500

வேலை செய்யும் மொத்த கதிர்கள் 30,000

20- நெ. முதல் 100 நெ. வரை ஜவுளி நூல் தினுசுகள், பனியன் வகையருக்களுக்கு உபயோகப்படும் கோன் நூல் தினுசுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இன்னும் அதிக யந்திரங்களை வைப்பதற்கு கட்டிடங்கள் தயாராயிருக்கின்றன.

மானேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு பாங்கர்ஸ்:

பி. எஸ். கோவிந்தசாமி நாயுடு அண்டு சன்ஸ்,
பூளைமேடு — கோயமுத்தூர்.

இந்திய மூலதனம், இந்தியக் கதைத்தொலாகிய
இந்த சுதேசித் தொலை ஆதரியுங்ள்.

கலைக்கதிர்

மலர்—4 செப்டம்பர் - 1952 இதழ்—9

ஆசிரியர்:
ஜி. ஆர். தாமோதரன்,
B. Sc. Elec. B. Sc. Mech. (Durham) A. M. I. E. E. (London). M. P.

இந்த இதழில்

சுரங்கங்களின் ஆவி	... திரு. பி. ஆர் கிருஷ்ண மூர்த்தி நாயுடு	2
பனிப்புகை ...	... திரு. வீ. இராசமாணிக்கம்	5
சிலப்பதிகாரச் செய்யுள்	... திரு. போ. குருசாமி	9
பிரளயம் (அட்டைப்படம்)	... திரு. அ. கறுப்பண்ணன்	18
கேசின் ...	... திரு. அ. ராம்கோபால்	22
அச்சம் ஒரு தொத்து நோய்	... திரு. க. இராமதாஸ்	25
ஞானோதயம்	... 'வல்லிக்கண்ணன்'	28
சமையலில் சஞ்சீவி	... திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி	30
உயிர் வாழ்வின் தோற்றம்	... திரு. ப. இராமலிங்கம்	33
வினாக்களும் விடைகளும்	...	35
தேரை ...	... திரு. கோ. வ.	36
மனத்தின் சமாதியிலே	... 'குரு'	41
பெண்மகன் ...	பண்டிதர். திரு. அ. கிருஷ்ண சாமி நாயுடு	50
காதல் படும் பாடு (தொடர் கதை)	... திரு. தா. ஏ. ஞானமூர்த்தி	51
தமிழ் வளர ...	... 'மணிவண்ணன்'	58
சூரியன் ...	... திரு. D. சுப்பிரமணிய செட்டியார்	61
எகிப்தில் இராணுவப் புரட்சி	... 'ஹெராடாடஸ்'	65
பறவைகளின் இல்வாழ்வு	... திரு. ம. ச. ஆனந்தன்	68
பலசரக்கு ...	...	72

'கலைக்கதிர்' இதழில் வெளியிடும் கட்டுரை, கதை முதலியனவற்றின் கருத்துக்கள் அவற்றை எழுதிய நேயர்களுக்கே உரியன.

சுரங்கங்களின் ஆவி

திரு. பி. ஆர். கிருஷ்ணமூர்த்தி நாயுடு, M. A., L. T.

நிலக்கரி உலகத்திற்கு ஓர் அவசியமான பொருள். நிலக்கரி இல்லாதிருந்தால் உலகம் இன்று பல துறைகளில் முன்னேற்றமடைந்திருக்காது. எதிர்காலத்திலும் உலகம் இயங்காது. நமக்கு வேண்டிய எரிபொருளில் (Fuels) நிலக்கரி 100-க்கு 95 சதவீதம் அமைந்திருக்கிறது. நிலக்கரியால்தான் ரயில் ஓடுகிறது; நீராவிக் கப்பல்கள் நாடுகளிடையே வியாபாரத்தைப் பெருக்குகிறது. இந்த முக்கியமான நிலக்கரி எங்கிருந்து வருகிறது? இது நிலத்தின் சுரங்கங்களிலிருந்து தோண்டி எடுக்கப்படுகிறது. இவ்வாறு தோண்டி எடுப்பதில் பல நெருக்கடிகளும் இன்னல்களும் இருக்கின்றன. கனிகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஆயிரக் கணக்கில் ஆண்டுதோறும் மடிகிறார்கள். பலர் காயமடைகிறார்கள். யுனைடெட் ஸ்டேட்ஸில் சென்ற ஆண்டில் நிலக்கரிக் கனிகளில் காயமடைந்தவர்களும் மடிந்தவர்களும் 37,000 என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.

மற்றும் நிலக்கரிக் கனிகள் சுற்றுப்புறத்திலுள்ள வட்டாரத்தைப் பாழ்படுத்திவிடுகின்றன. கனிகளிலிருந்து வெளிவரும் தண்ணீர் ஆறுகளைக் கெடுத்துவிடுகிறது. நிலக்கரியால் இயங்கும் ஆலைகள் புகையை வெளிவிட்டு நாட்டின் சுகாதாரத்திற்குப் பங்கம் விளைவிக்கின்றன.

நிலக்கரியைத் தோண்டி எடுப்பதிலும் பயன்படுத்துவதிலும் தோன்றும் இன்னல்களைத் தவிர்க்க எஞ்சினீயர்கள் திட்டமிட்டார்கள். நிலக்கரியைத் தோண்டி எடுக்காமலேயே அதன் சக்தியைப் பெறும் வழிகளை வகுத்தார்கள். சோவியத் அரசாங்கத்தில் பல ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து சில பயன் தரும் முறைகளைக் கையாண்டு வருகிறார்கள். யுனைடெட் ஸ்டேட்ஸ், இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி முதலிய நாடுகளில் இதனை ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். நிலக்கரியைக் கனிகளிலேயே எரித்து அதன் ஆவியைக் (gas) கொண்டு எவ்வாறு ஆலைகளை இயக்குவது என்பதுதான் அவர்களின் பிரச்சினை.

இந்தப் பிரச்சினை பார்ப்பதற்கு எளிதாக இருக்கிறது. ஆனால் விசித்திரமானது. சமீப காலம் வரை இந்த முயற்சியில் எந்த நாடும் ஈடுபடவில்லை. இங்கிலாந்தில் குடியேறிய ஸர் வில்லியம்ஸ் என்ற ஜெர்மானிய அறிஞர் முதல் முதலாகக் கனிகளில் எஞ்சியிருக்கும் நிலக்கரியைப் பயன்படுத்துவதற்கு வழி கண்டுபிடித்தார். நிலக்கரியை இயன்றவரையில் தோண்டி எடுத்த பிறகு, அக்கனியை அடைத்து அக்கனியில் சிதறி உடைந்துகிடக்கும் நிலக்கரிக்குத் தீ வைத்து, நிலக்கரி ஆவியை உற்பத்தி செய்தார். இருபது ஆண்டுகள் கழித்து ரஷ்ய விஞ்ஞானி ஒருவர், கனியில் காணப்படும் நிலக்கரியை எரித்து ஆவியை உண்டாக்க முனைந்தார். இதனைப் பின்பற்றி ஸ்காட்லாந்து அறிஞர் ஸர் வில்லியம் ராம்சே சில முடிவுகளைக் கண்டார். உப்புக் கனிகளில் உப்பினைத் தோண்டி எடுப்பதில்லை. குழாய்களின் வழியாகத் தண்ணீரை இறக்கி உப்பு (brine) எடுக்கிறோம். அதனைப் போலவே நிலக்கரியைத் தோண்டி எடுப்பதற்குப் பதிலாக கனிகளின் அடித்தளத்தில் ஆலைகளை அமைத்து, ஆவியை உற்பத்தி செய்யலாம் என்று

துணிந்தார். இந்த முயற்சியில் ஈடுபடுவதற்குள் முதல் உலகப் போர் ஆரம்பமாகிவிட்டது.

ஜெர்மனியில் ஸ்பிட்ஸ்பர்கன் (Spitsbergen) என்ற நிலக்கரிச் சுரங்கம் 1908-ம் ஆண்டில் தீபிடித்துக்கொண்டது. அந்தத் தீயை அணைக்கச் சாத்தியமில்லாமல் போய்விட்டது. பக்கத்திலுள்ள நகரத்திற்கு இந்தக் கனியிலிருந்து வெளிவரும் ஆவியைக் குழாய்களின் வழியாகச் செலுத்தினார்கள். ஏழு ஆண்டுகள் கழிந்தும் இந்தக் கனி எரிந்துகொண்டே இருந்தது. ஆவி கிளம்பிக்கொண்டே இருந்தது.

முதல் முதலாகச் சுரங்கத்திலிருந்து ஆவியை முறையாகப் பயன்படுத்தியது சோவியத் அரசாங்கம். இது 1930-ம் ஆண்டில் நிகழ்ந்தது. இதற்கு முக்கியக் காரணமாக இருந்தவர் நிக்கோலா லெனின் என்ற அறிஞர் ஆவார். சோவியத் தொழிற்சாலைகளுக்கு இந்த ஆவி பயன்படுத்தப்பட்டது. இரண்டாவது உலக யுத்தம் துவங்கிய பொழுது சோவியத் அரசாங்கத்தில் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து ஆவி எடுக்கும் நிலையங்கள் பல தோன்றிவிட்டன. ஆனால் சோவியத் அரசாங்கம் கையாண்ட முறைகளையும், பயன்களையும் உலகம் அறிந்துகொள்ள முடியவில்லை.

இங்கிலாந்து, யுனைடெட் ஸ்டேட்ஸ் முதலிய நாடுகளில் இத்தகைய நிலையங்கள் ஏன் ஆதியில் தோன்றவில்லை எனின், ஒவ்வொரு நிலையத்திற்கும் ஏராளமான பொருள் தேவையாயிருந்தது. ஐந்து வருஷங்களுக்கு முன்பாகத்தான் யுனைடெட் ஸ்டேட்ஸில் இதைப் பற்றியதொரு புதிய உணர்ச்சி தோன்றியது. பல சந்தர்ப்பங்கள் இதற்குக் காரணமாயிருந்தன. நிலக்கரிச் சுரங்கங்களில் ஈடுபட்டிருக்கும் கம்பெனிகளில் தென்பாகத்தில் மிகச் சிறந்தது அலபாமா பவர் கம்பெனி (Alabama Power Co.) இந்தக் கம்பெனி இன்னும் அதிகமான நிலக்கரியை எடுக்க முயற்சி செய்தது. நிலக்கரி கிடைக்கும் எல்லையும் நெருங்கிற்று. பெட்ரோல் கிடைப்பதும் அரிதாக இருந்ததால் நிலக்கரியிலிருந்து ஏதாவது எரிபொருள் நீராக எடுக்க முடியுமா என்பதனை ஆராய்ச்சி செய்ய யுனைடெட் ஸ்டேட்ஸ் சுரங்க அதிகாரிகள் முனைந்தார்கள். அலபாமா கம்பெனியாரும், சுரங்க அதிகாரிகளும் சேர்ந்து 10 லட்.சம் டாலர் செலவில் ஒரு நிலையத்தை நிறுவினர். பிரத்தியேகமான ஆலைகளில் சில ரசாயனப் பொருள்களை எடுக்கும் முறைகளைத்தான் நிலக்கரிச் சுரங்கத்தில் கையாளவேண்டும். ஆனால் நிலக்கரிச் சுரங்கத்தின் அடித்தளம் பிரத்தியேகமான சூளையைப் போல் அமையாது. எரிப்பதையும் சில கட்டுப்பாடுகளுடன் எரிக்க வேண்டும். நிலக்கரி எளிதில் தீப்பிடித்துக் கொள்ளும். தீப்பிடித்து எரிவதற்கு வேண்டிய காற்றைக் குழாய் வாயிலாகச் செலுத்தவேண்டும். மற்றொரு குழாயில் உற்பத்தியாகும் ஆவியைச் சேகரிக்கவேண்டும். சிறந்த ஆவியைப் பெறுவதற்கு, உள்ளே செலுத்தும் காற்று தகுந்த அழுத்தத்திலிருக்க வேண்டும். இதில் பல இடர்ப்பாடுகள் உண்டு. காற்று நிலத்திலுள்ள சந்துபொந்துகளில் சென்றுவிடும்.

அலபாமா கம்பெனியாரும் சுரங்க அதிகாரிகளும் ஜார்கார் (gorgai) என்றும் இடத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். அங்கு நிலக்கரி 46" அங்குல கனத்தில் 1200 ஏகராவிற்கு இருக்கிறது. நீளமான (horizontal) குகை ஒன்று குடைந்து, அதனுடன் செங்குத்தான குழாய்களைத் தரைமட்டத்திற்கு அமைத்தார்கள். முதலில் பலவிதமான குழாய்களைச் சோதித்தார்கள். காற்றைச் செலுத்துவதற்குக் குழாயும், ஆவி வெளி வருவதற்குக் குழாயும் அமைத்தார்கள். 1949-ம் ஆண்டில் மார்ச்சு மாதத்தில் தீ வைத்தார்கள். ஆவி வெளியே கிளம்பிற்று. அந்த ஆவி எரியும் (combustible)

தன்மையுடையதா யிருந்தது. அந்த ஆவி சூடாக இருந்தபடியால் பாய்லர் (gas turbines) களுக்கும், சக்கரங்களைச் சுழற்றுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. இதற்குப் பிறகு ஆவி குளிர்ந்ததும் எரி பொருளாக உபயோகமாகிறது. ஆனால் இந்த ஆவிக்குப் பன் மடங்கு சூடாக்கும் பண்பு அதிகமாக இருக்கிறது. நாளடைவில் ஆராய்ச்சியின் விளைவாக அமெரிக்கர் வெற்றி பெறலாம்.

இவ்வகையாக நிலக்கரிச் சுரங்கங்களில் ஆவி உற்பத்தி செய்யும் முறைகள் பக்குவமடைவதால் மக்கள் சமுதாயத்திற்குச் சிறந்த நன்மைகள் உண்டாகும். நிலத்தில் காணப்படும் கரியிலிருந்து அதிகமான இயந்திரங்களை இயக்கும் சக்தியைப் பெறலாம் (Mechanical emergy). மற்றும் இலேசாக அமைந்திருக்கும் நிலக்கரியும், மட்டமான நிலக்கரியும், சுரங்க முறைகளில் தோண்டி எடுப்பதற்கு லாயக்கற்றவை. செலவிற்கு ஈடான நிலக்கரி கிடைக்காது. உலகத்தில் எல்லா நாடுகளிலுமுள்ள கனிகளில் கிடைக்கும் பலவகையான நிலக்கரி பல லட்சக்கணக்கான டன்கள் எனக் கணக்கிட்டிருக்கிறார்கள். தற்போது செலவிடும் அளவைக்கொண்டு கணக்கிட்டால் இன்னும் 3000 ஆண்டுகளுக்குத்தான் போதுமானது. இங்கிலாந்து, ஐரோப்பாவிலுள்ள மற்ற நாடுகளில், கனிகளில் சிறந்த நிலக்கரியைத் தோண்டி எடுத்துவிட்டார்கள். எஞ்சி இருப்பவை மட்டமானவைத்தான். மற்றும் சில கனிகள் குறைந்த செலவில் தோண்டி எடுப்பதற்கு லாயக்கற்று அமைந்திருக்கின்றன. சுரங்கத் தொழிலாளிகளின் சம்பளம் அதிகரிக்க அதிகரிக்கக் கனிகளில் இயந்திர சாதனங்கள் அதிகமாகப் புகுத்தப்படுகின்றன. இதற்கு மூலதனம் அதிகமாக வேண்டியதா யிருக்கிறது. பெருத்த செலவில் இயந்திர சாதனங்களை, பெரிய கனிகளில் அமைத்தால்தான், தகுந்த வருமானம் எதிர்பார்க்க முடியும். சிறிய கனிகள், மட்டமான நிலக்கரி உடைய கனிகள் இவை யாவிற்கும் பெருத்த மூலதனம் செலவிட முடியாது. இத்தகைய கனிகளில் ஆவியை உற்பத்தி செய்ய வசதியாக இருக்கும்.

உற்பத்தி செய்யப்படும் ஆவியைக் கொண்டு மின்சார சக்தியைப் பெருக்கலாம். எரி பொருளாக உபயோகிக்கலாம். சிறந்த முறைகள் கையாளப்பட்டால் இந்த ஆவி நாட்டின் தொழில் ஆக்கத்திற்குச் சாதகமாக இருக்கும்.

வாசகர்களுக்கு

★

இனி, கலைக்கதிர் ஆங்கில மாதம் முதல் தேதியில் வெளிவரும். இது செப்டம்பர் இதழ்; அடுத்த இதழ் அக்டோபர் முதல் தேதி வெளிவரும்.

'பனிப்புகை'

திரு வீ. இராசமாணிக்கம், B. A. (Hons.)

உலகின் கண் வாழும் உயிரினத்திற்கும் உணவு இன்றியமையாதது. எனவேதான், அறத்திற்கு விளக்கங் கூற வந்த புலவர் ஒருவர், "உண்டி முதற்றே உணவின் பிண்டம், உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே," என்று கூறிப்போயினர். எனினும் உணவைக் காட்டிலும் உயிர்க்குத் தேவையானது காற்றே. உணவின்றியும் நாட்கள் சில கழிக்கலாம். ஆனால் காற்றின்றிச் சில மணித்துளிகளும் இருப்பது கடினம். ஒவ்வொரு மனிதனும் நாளொன்றுக்கு $2\frac{3}{4}$ பவுண்டு உணவையும், $4\frac{1}{2}$ பவுண்டு நீரையும், 30 பவுண்டு காற்றையும் உட்கொள்ளுகிறான் என்று கணக்கிடப்படுகிறது. இவை மூன்றிலும் முதற்கண் கூறிய இரண்டையும் அடைய மனிதன் முயற்சியை மேற்கொள்கிறானேயன்றி காற்றைப்பற்றிக் கவலைப் படுவதில்லை. உணவும், நீரும், மனிதனுடைய உழைப்பால் பெறக்கூடியன. காற்றுக்கு உழைப்புத் தேவையில்லை. மற்றும் தன்முயற்சியால் கிடைக்கும் உணவும், நீரும், நல்லுணவா, நோய்க்கிருமிகளற்ற நீரா என்று ஆராய்ந்து உட்கொள்வதில் கவனஞ் செலுத்துகின்றவன், அவற்றினும் உயிர்க்குத் தேவையான காற்றில் கவனஞ் செலுத்துவதில்லை. எனவே, நாம் உட்கொள்ளும் காற்று எவ்வெவ் வகைகளில் கெடுகிறது, அக்கெட்ட காற்றால் உடல் நலம் எவ்வாறு கேடுறுகிறதென்று ஆராய்வது இன்றியமையாதது. அவற்றை அறிய மேனாட்டு ஆராய்ச்சியேடுகளைப் புரட்ட வேண்டும்.

தலைப்பிற்கு ஓர் விளக்கம். வான வெளியிலே, ஓரிடந் தங்காது ஓர்நிலை நில்லாது சுற்றிச் சுழன்று திரியும் காற்றில் எவ்வகைப் பொருள்கள் கலந்துள்ளன என்றறிவது கடினமானதொரு செயலாகும். தொழிற் கலையும், இரசாயனப் பயிற்சியும், வளர்ச்சியுற்ற காரணத்தால் காற்றின் தூய்மைத் தன்மை பெரிதும் பாதிக்கப் பெற்றது. சுமார் 600 ஆண்டுகட்கு முன்னர், சில பொருள்களை எரிப்பதால் வெளிப்படும் புகையும், ஆவியும், துர்நாற்றத்தையும், கேட்டையும் தரவல்லன வென்றறிந்து அவற்றை எரிப்பதை ஆங்கிலப் பட்டணத்து மக்கள் நீக்கி விட்டனர். எனினும், ஆராய்ச்சியாளர் இப்பொழுது புதிதான ஒரு சொல்லைச் சேர்த்துள்ளனர். அது ஆங்கிலத்தில் 'SMOG' என்று கூறப்படுகிறது. அச்சொல்லிற்கு Smoke, Fog ஆகிய இரண்டும் கலப்புற்றது என்று பொருள். அதைத்தான் 'பனிப்புகை' என்று கூறினோம். இன்று, மூடுபனியும், புகைக்கரியும் (soot) தவிர நுண்ணிதான, கடின, நீரிய, வாயுத் தன்மைகளில் பல்வேறு பொருள்களும் காற்றில் கலந்துள்ளன.

1948ம் ஆண்டில், டொனோரா, பா, எனும் இடங்களில் பனிப்புகையால் ஏற்பட்ட அழிவு, ஆய்வாளரைச் சிந்தனைக் குள்ளாக்கியது. நகரங்களில் காணப்பட்ட கருநிறப்புகை கலந்த காற்று, தொல்லை தரத்தக்கதோடல்லாது, உடல் நலத்தைக் கெடுக்கக்கூடியதாகவு மிருந்தது. தொழிற்சாலைகளினின்றும் வெளிக்கிளம்பிய புகையானது ஒரு காலத்தில்

தொழில் வளப்பெருக்கத்தையும், தொழில் திறமையையும், காட்டவல்ல சின்னமாக விளங்கியது. இப்பொழுதோ, விரும்பத்தகாத ஒரு காட்சியாக இருக்கிறது.

காற்று கெடுவதற்கு அடிப்படையாயமைந்த காரணங்கள் பல. அவற்றில் எரித்தலைப் பற்றிப் பார்ப்போம். நிலக்கரி எரிக்கப்படுவதால், புகைக்கரி, சாம்பற்றூள், நீராவி, கரியொருதீயதை (carbon-mon-oxide), கரியிருதீயதை (carbon-di-oxide) நைட்ரஜன் ஆக்ஸைடுகள், கந்தக இருதீயதை (sulpher-di-oxide) ஹைட்ரோகார்பன், மற்றும் அங்கக அமிலங்கள் (organic acids) போன்றவை காற்றில் கலக்கின்றன. எடுத்துக் காட்டாக, டெட்ராய்ட், விண்ட்சர் பகுதிகளில் நிலக்கரி போன்ற பொருளகள் எரிவதால் ஆண்டொன்றிற்கு 4,30,000 டன் கந்தக இருதீயதை காற்றில் கலப்பதாகக் கணக்கிட்டுள்ளனர். கரியாவி (coal gas) போன்ற ஆவிகள் புகையை வெளியாக்காது எரிந்தாலும், மீதேன், அசிடிலின், அல்டிஹைட்ரைட், ஃபினல், அமோனியா போன்ற எல்லா வகையான அங்கக வாயுக்களையும் வெளிப்படுத்துகின்றன. இவற்றின் அளவுகளைக் காண, லாஸ் ஏஞ்சல்ஸ் (Los Angels) என்ற நகரத்தை எடுத்துக் காட்டாகக் காட்டலாம். அந்நகரில், நாள் ஒன்றுக்கு மோட்டாரின் வகையைச் சேர்ந்த இரண்டு லட்சம் ஊர்திகள் நான்கு லட்சம் காலன் எண்ணெய்யை எரிக்கின்றன. இவை 40,00,00,00,00,000 கன அடி வாயுவைக் காற்றில் கலக்கின்றன. அதாவது, ஒவ்வொரு நாளும் 1,25,000 டன்களுக்கு மிகுதியான கெட்ட காற்று ஆகாயத்தில் கலக்கிறது. இவ்வொரு வழியே யன்றி அந்நகரில் 21,000டன் வாயுவும் 7,300டன் எண்ணெயும், 260 டன் டீசெல் எண்ணெயும், 170 டன் கல்கரியும் (coke) எரிக்கப்படுகின்றன.

மற்றும், இரசாயன வேலைகள், பெட்ரோலியம் தூய்மை யாக்கல், போன்ற இன்னும் பிறவழிகளாலும் காற்று கெடுகிறது. வர்ணம், வார்னிஷ் போன்ற பொருள்கள் உலருவதாலும் பெருவளவிற்கு இரசாயன வாயுக்கள் காற்றில் கலக்கின்றன. இவ்வகையான கணக்கற்றப் பொருள்கள் காற்றில் ஒன்று சேர்ந்து நமக்குத் தெரியாத பல புதுப் பொருள்களையும் உண்டாக்குகின்றன. கடைசியாக இயற்கையாக எழும் தூசு, மகரந்தம், போன்ற பொருள்கள் எப்பொழுதும் காற்றில் நிறைந்துள்ளன.

காற்று கெடுக்கப்படுவதை யறிய மூன்று பிரிவுகளுண்டு. (1) காற்றில் கலந்துள்ள பொருள்களை யறிதல் (2) அவை ஒவ்வொன்றின் அளவையும் அறிதல் (3) அவை எவ்வளவிற்கு மனிதனுக்கும், அவன் கொள்ளும் உணவிற்கும் அல்லது மற்ற பொருள்களுக்கும் கேடு பயக்கின்றன என்றறிதல். இவை மூன்று பிரிவிலும் ஆய்வாளர்க்கு மிகக குறைந்த அளவில் தான் உதவி கிடைக்கிறது. மாற்றமுறும் வெப்பநிலையாலும், காற்றோட்டத்தாலும், எப்பொழுதும் ஒரு நிலை நில்லாது சுழன்று கொண்டேயிருக்கும் காற்றில் கலந்திருக்கும் நுண் பொருள்களைச் சேகரித்து, ஒவ்வொரு வகையையும் தனித்தனியே பிரித்துக் கணக்கிட வேண்டியிருக்கிறது.

எனினும், பல ஊர்களிலே மாதிரி அளவிலே தூசும், புகைக்கரியும் அளவிடப்பட்டிருக்கின்றன. சுமார் இருபது ஆண்டுகளாக, கிராஃப்டன் என்ற நகரில் ஒரு ஆண்டிற்கு ஒரு சதுர மைலுக்கு 1,876டன்களும், பால்டிமோர் நகரில் 1,800டன்களும், பிட்ஸ்ட்பர்க்கில் 1,301 டன்களும், சிகாகோவில் 782 டன்களும், க்ளீவ்லண்டில் 780 டன்களும், டெட்ராய்ட் நகரில் 688 டன்களும், லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 332 டன்களும், தூசுப் பொருள்கள் காற்றில் கலந்

திருப்பதாகக் கண்டுள்ளனர். எனினும், காற்றில் கலந்துள்ள பொருள்களில், தரை மட்டத்தில் வந்து படியும் அளவிற்குப் பெரிய பொருள்களாயில்லை. பெரும்பான்மையும், எப்பொருளும் காற்றோடு காற்றாய்க் கலந்து ஆகாயத்திலேயே சுழன்று கொண்டிருக்கும் நுண் தூசாகக் காணப்படுகின்றன. மனித சுவாச மண்டலம் 90% பொருள்களை நுரையீரலுக்குள் செல்லாது வடிகட்டி விடுகின்றது. அதாவது ஒரு அங்குலத்தின் ஐயாயிரத்தில் ஒரு பாகம் விட்டமுடைய (diameter) பொருள்கள் தடுக்கப்பட்டுவிடுகின்றன. ஆனால் ஒரு அங்குலத்தின் இரண்டு கோடியில் ஒரு பாகம் குறுக்களவுடைய நுண் பொருள்கள் நுரையீரலையடைந்து விடுகின்றன. எனவே அந்நுண் பொருள்களின் அளவுகளையும் கண்டு பிடித்தாக வேண்டும்.

காற்றிலுள்ள பொருள்களால் ஏற்படும் கெடுதிகளைக் குறித்து மனிதர்க்கிருக்கும் பொறுமை எவ்வளவென்று கூறமுடியாது. அது மிகச் சிறிய அளவில் இருந்த போதிலும், நம் முடல் நலத்தைப் பாதிக்கும் என்பதை யறிகிறார்கள். ஃபார்மல்-டிஹைட்ரைடு, பத்துலட்சத்திற்கு ஒரு பாகம் கலந்திருந்தாலும், கண்ணெரிச்சலை யுண்டாக்குகிறது. மணத்தை நுகரும் தன்மையில் நமது புலன் மிகவும் உணர்ச்சியுள்ளதாயிருக்கிறது. இரசாயனப் பொருள்களும், தூசும், எந்த அளவிற்கு மிஞ்சினால், நம்மைப் பாதிக்கும் என்பதை ஆய்வாளர் அறிந்துள்ளனர். எடுத்துக் காட்டாக, பத்து லட்சத்திற்கு, கரியொருதியதை 100 பாகத்திற்கு மேலும், க்ளோரின் ஒருபாகத்திற்கு மேலும் ஃப்ளோரின் 3 பாகத்திற்கு மேலும், நைட்ரஜன்-ஆக்ஸைடு 25 பாகத்திற்கு மேலும், கந்தக இருதீயதை 10 பாகத்திற்கு மேலும், காட்மியம் தூள் (Cadmium dust) ஒரு கன மீட்டருக்கு .1 மில்லி கிராமிற்கு மேலும், ஈயம் .15 மில்லி கிராமிற்கு மேலும், மாங்கனீஸ் 60 கிராமுக்கு மேலும், துத்த நாகம் 15 மில்லி கிராமுக்கு மேலும் கலக்கப்பட்டாலும், நம் உயிருக்குக் கேடு பயக்கும் என அளவிட்டுக் கூறுகின்றனர். நல்ல காலமாக எந்த நகரமும், டொனுரா பட்டணம் உட்பட இந்த அளவிற்கு மேல் இதுவரை மீறியதில்லை. ஆனால், காற்றில் கலந்துள்ள எல்லா வகைப் பொருள்களையும் அறிவதில் ஆய்வாளர்கள் இன்னும் இருட்டில் தானுள்ளனர். சில பொருள்கள் உணவுப் பொருள்களையும், பயிர்களையும் அழித்து விடுகின்றன என்பதை அறிவோம். 200 மில்லியன் பாகத்தில் ஒருபாகம், ஹைட்ரஜன் ஃப்ளோரைட் கலந்திருப்பின் அதுவே ஒரு மணியில் பயிர்களை நாசமாக்கிவிடுகிறது.

லாஸ் ஏஞ்சல்ஸ் என்ற நகரில் பனிப்புகையைப் பற்றி நடந்து வரும் ஆராய்ச்சியைப் பற்றிச் சிறிது பார்ப்போம். ஐக்கிய நாட்டின் பல பெரிய பட்டணங்களைப் போலவே லாஸ் ஏஞ்சல்ஸ் பட்டணமும் வெப்பக் கட்டுப்பாடுள்ள (Air-conditioned) பட்டணமாகும். எனினும் அந்நகர், ஆண்டில் 30 நாட்களுக்குப் பனிப் புகையால் சூழப்பட்டு மக்கட்குத் துன்பந்தருகிறது. இதற்குக் காரணம், அந் நகரின் வெப்பநிலையே யாகும். இந்நகரம் மூன்று பக்கங்களில் மலைகளாலும், நான்காவது பக்கத்தில் கடலாலும் சூழப்பட்டுள்ளது. பெருங் காற்று அருகியே இந்நகரில் வீசுகிறது. இருந்த போதிலும், பசிபிக் கடலிலிருந்து உண்டாகும் சூடுள்ளதும், உலர்ந்தது மானக் காற்று இந்நகரத்தில் பரவி நிற்கிறது. இவ்விதக் காற்று அதைச் சூழ்ந்துள்ள மலைகளுக்குத் தாழ்ந்துள்ள நாட்களில் மலைகளுக்கு அப்பாலுள்ள காற்று உள்ளே வரவொட்டாது தடுக்கப்பட்டு விடுகிறது. அவ்வித நாட்களில் இந்நகர மக்கள் நல்ல

காற்றோட்டமின்றித் தவிக்கின்றனர். பொருள்கள் தெளிவாகத் தெரிவதில்லை. கண்களுக்கு எரிச்சலைத் தருகிறது. இந்நகரில் ரப்பர்ப் பொருள்கள் குறுகிய நாட்களில் நாசமடைகின்றன. சில தாவரவகைகளும், அழிந்து விடுகின்றன.

நான்கு ஆண்டுகட்கு முன்னர், இதைபொட்டி ஆராய்ச்சியாளர் குழு ஒன்று ஆராயத்தொடங்கியது. அவர்கள் ஆராயாத வழி இல்லையென்றே சொல்லலாம். இறுதியாக அவர்கள் காற்றைக் கெடுக்கும் இரு பொருள்களைக் கண்டு பிடித்தனர். அவை அங்ககக் கூட்டுப் பொருளான ஹைட்ரோ கார்பனும், ஏரோசாலும் (Aereosol) ஆகும். இந்நாள்வரை ஹைட்ரோ கார்பனைப் பொருட்படுத்தாது விட்டதனால், இப்பொழுது ஆரய்க் கடினமாக இருக்கிறது. புதிய கருவிகளும் தேவைப்படுகின்றன. ஏரோசால் நமது சுவாச மண்டலத்தில் உள்ள தடுப்புச் சக்திகளையும் கடந்து நுரையீரலை அடைகிறது. மற்றும் காற்றில் கலந்துள்ள மற்றப் பொருள்களோடும் கலந்து புதுப் பொருள்களையும் உண்டாக்குகிறது.

மீண்டும் லாஸ் ஏஞ்சல்ஸ் மக்கட்குக் கண்ணெரிச்சலைத் தரக்காரணம் யாதென ஆராயப்பட்டது. கந்தக இருதீயதையே இதற்குக் காரணம் என நம்பப்பட்டு வந்தது. இது, கதிரவன் வெப்பத்தில் காற்றுடன் சம்பந்தப்பட்டு கந்தகத் திரிதீயதையை யுண்டாக்கி, மீண்டும் நீராவியுடன் சம்பந்தப்பட்டு கந்தக அமிலப் புகையை யுண்டாக்குகிறது. எனவே, கண்ணெரிச்சலுக்குக் காரணம் கந்தக-இருதீயதையா யென்பதை யறிய, சிலர் பனிப்புகை நிரப்பப்பட்ட அறைக்குள் சோதிக்கப்பட்டனர். ஆனல் ஒருவருக்கும் கண்ணெரிச்சல் ஏற்படவில்லை. எனினும் ஆராய்ச்சியாளர், லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் காணப்பட்ட பனிப்புகையைப் போல செயற்கை முறையில் ஒன்பது வகை இரசாயனப் பொருள்கள் அடங்கிய தொகுப்புப் பனிப்புகையை யுண்டாக்கினர். அது இயற்கையாக உண்டான பனிப் புகையின் நாற்றத்தையும் தந்தது. கண்களுக்கு எரிச்சலையும் தந்தது.

பனிப் புகையானது, திண்மையான ஆக்ஸிகரணச் சக்தி (Oxidising Power) யாகிய பண்பைக் கொண்டுள்ளது. A. J. ஹாகன்-ஸ்மிட் எனும் பெயருடைய ஆய்வாளர் பனிப்புகையிலிருக்கும் ஆக்ஸிகரணப்படுத்தும் பொருள் காற்றில் ஹைட்ரோகார்பனுடனும், மற்ற அங்ககக் கூட்டுப் பொருள்களுடனும் சம்பந்தப்பட்டு கண் எரிச்சலையும், உடல் நலனைப் பாதிப்பதுமான பொருள்களை யுண்டாக்குகின்றது, என்ற கருத்தை வெளியிட்டார். அப்படியாயின் காற்றில் கலந்திருக்கும் ஆக்ஸிகரணப் பொருள் யாது? பலர் பலவகையாகக் கூறினும் அவற்றில் ஒன்றே பொருத்தமுடைத்து. லாஸ் ஏஞ்சல்ஸ் நகரம் பனிப் புகையால் சூழப்பட்டபோது ஓசோனது (Ozone) நாற்றம் பெறப்படுகிறதாம். ஓசோனது பண்புகளில், ரப்பர்ப் பொருள்கள் குறுகிய காலத்திலேயே வெடிப்புற்று உடைந்துவிடுவதாகும். லாஸ் ஏஞ்சல்ஸ் நகரிலும் இதே நிகழ்ச்சிகள் நடைபெறுவதாகக் கூறப்பட்டது. எனவே, பனிப்புகையால் சூழப்பட்ட நகரங்களில், கண்ணெரிச்சலுக்கும், ரப்பர்ப் பொருள்கள், தாவரங்கள் ஆகியவற்றின் அழிவிற்கும் முக்கிய காரணம் அப்பனிப்புகையில் கலந்துள்ள ஓசோன் என்ற வாயுவேயாகும்.

ஆனல் இதைப்பற்றிய முழு ஆராய்ச்சி நடத்த விஞ்ஞானப் பகுதியின் ஒரு துறையைச் சார்ந்த ஆய்வாளரால் மட்டும் முடியாது. பௌதீகம், இரசாயனம், உடலியல், வானவியல் போன்ற பல துறைகளிலும் கற்றுத் துறைபோய ஆய்வாளரின் ஒத்துழைப்பே வேண்டியிருக்கிறது.

சிலப்பதிகாரச் செய்யுள்

போ. குருசாமி

●

உரிமையும் உறவும்

முன் வரைந்த கட்டுரையில், சிலப்பதிகாரம் எங்ஙனம் ஒற்றுமைக் காப்பியமாக ஒளிர்கின்றது என்பதைக் கண்டோம். ஓர் இனத்தாரிடையே ஒற்றுமை நிலவுதல் நலமென்றும், அப்பண்பால் அவ்வினம் பல்லாற்றானும் முன்னேற்றம் அடையும் என்றும் அறவுரைகளைக் கூறிச் செல்லுதல் எவர்க்கும் எளிதாம். ஆயின், அப்பண்பினை மக்கள் வாழ்க்கையில் அமைத்தல் எங்ஙனம் என்பதனைக் குறித்துக் காட்டுவதே சீரிய பணியாகும். அத்தகைய நற்பணியினை இளங்கோவடிகள் சிறப்புற ஆற்றியுள்ளார்.

ஓர் இனத்தார் தம்முள் ஒன்றுபட்டு வாழ்தல் இன்றியமையாததே. ஆயின், ஒன்றுபட்ட இனத்தார் பிறரொடு முரணியோ மோதியோ வாழாதிருத்தல் அதனினும் சிறப்புடையதாகும். தமிழர் தம்முள் ஒன்றுபட்டு வாழ்தல் வேண்டும் என்ற விழுமிய எண்ணங்கொண்டவர் இளங்கோவடிகள். எண்ணத்தை வெறும் அறவுரை வடிவில் அவர் சொல்லிச் செல்லவில்லை. தம் எண்ணத்தைத் தக்க காட்சி நிகழ்ச்சிகளால் செயற்படுத்திச் சென்றுள்ளார்.

தமிழர் தம்முள்ளும் பிறரொடும் ஒன்றுபட்டு, நல்லுறவுடன் வாழ அவர் காட்டிய வழிகள் யாவை, அந்நெறிகளை எத்தகைய காட்சிகளால் நமக்கு அறிவுறுத்துகின்றார் என்பவற்றை இக்கட்டுரையிற் காணலாம்.

விதிவிலக்கான கலைஞர் :

உணர்ச்சியின் உச்ச நிலையில் பிறர் காண்டற்கரிய காட்சிகளைக் கலைஞர்கள் காணுகின்றார்கள். ஆயின், உணர்ச்சி வயப்பட்ட அவர்தம் படைப்புகளால் கலையுலகுக்கு ஒரு குறை உளது. உணர்ச்சியின் சார்புக்கு இரையாகிப் போவதால், நெறியின் எல்லைக்கோட்டினைக் கலைஞர்கள் அடிக்கடி நண்ணுகின்றார்கள்; பலர் அந்த எல்லையைக் கடந்து விடுதலும் உண்டு. கவிஞர்கள் இந்த விதிக்கு விலக்கானவர்கள் அல்லர். கவிஞர்கள் ஏதேனும் ஒரு பொருளால் கவரப்பட்டால், அதன்கண்ணேயே திளைத்துத் திளைத்து, கரந்து கரைந்துவிடுவார்கள். இந்நிலையில், நடுவுநிலை பிறழ்ந்து ஒரு சார்பான தீர்ப்புத் தருதல் இயற்கையே. கலைஞர்களைப் பின்பற்ற முனைகின்றபோது இந்த எச்சரிக்கையை மனத்தில் இருத்திக்கொள்ளுதல் வேண்டும். இன்றேல், கலைஞர் வாழ்வில் உள்ள ‘கோணல்’, எங்கணும் உள்ள கோணலாக மாறிவிடும்.

கவிஞருட் சிலர் விதிவிலக்குப் பெற்ற கலைஞர்களாக இருக்கின்றார்கள். அவர்களும் உணர்ச்சி என்ற

பரியைச் செலுத்துகிறவர்களே. ஆயின், அந்தக் குதிரை நினைத்தபடி 'பறக்க' முடியாது. அறிவு என்ற 'கண் மறைப்பும்' அற உணர்ச்சி என்ற கடிவாளமும் இடப்பட்டிருக்கும். அறிவுக்கும் அற உணர்வுக்கும் மதிப்புத் தரும் கவிஞர்களே, மக்களிடையே ஒற்றுமையும் ஒருமையும் நிலவுவதற்கான நெறி வகுத்துக் காட்டும் திறம் உடையவர்கள்.

இளங்கோவடிகள் மேற்குறித்த விதி விலக்கான கவிஞர்களில் ஒருவராவர். ஒற்றுமைக் காட்சியை ஒப்பற்ற காவியக் காட்சியாக அவர் காட்டிச் சென்றுள்ளார்.

மூவர்க்கும் உரிய கதை:

தமிழ் நாட்டில் அரசோச்சிய முடியுடை மூவேந்தரும் ஒருவருக்கொருவர் பூசலிட்டுப் பொருவதிலேயே பெரும்பான்மையான காலத்தைக் கடத்தியிருக்கின்றனர். அந்த முடி மன்னர் மூவரையும் இனிய உறவுடன் ஒரே இடத்தில் காண்டல் அரிது. சேர சோழ பாண்டியர்கள் அவ்வளவு 'நல்லுறவு'டன், தமிழ் கூறு நல்லுலகத்தை அரசாண்டு வந்தார்கள். சோழருக்குள் இரு பிரிவுகள் ஏற்பட்டுப் போர் செய்வதும், அங்ஙனமே வனை இருவரும் பிரிந்து பிளவுபடுவதும் உண்டு. நெடுங்கிள்ளி, நலங்கிள்ளி இருவரும் சோழர்களே; ஆனால் பகைவர்கள்......இப்படியெல்லாம் ஒற்றுமைச் சிதைவே தமிழகத்தின் பெருங்குறையாக இருந்தது என்பதைச் சங்க இலக்கியங்களால் நாம் அறிகிறோம்.* இந்தக் குறையினைக் கண்டு மனம் புழுங்கிய கோவூர் கிழார், ஔவையார், காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார் போன்ற சங்ககாலப் புலவர்களின் பாடல்களை இன்றும் காணலாம். இந்தப் பின்னணியோடு சிலப்பதிகாரத்தைப் படித்தால்தான், தமிழ் வேந்தரிடையே இளங்கோவடிகள் காட்டிய ஒற்றுமைக் காட்சியின் சீர்மை புலப்படும். சேர சோழ பாண்டியர்கள் மூவரையும் வேற்றுத் தாழ்வின்றி ஒப்பப் புகழ்கின்றது சிலப்பதிகாரம் என்பதை முன்னரே நாம் அறிந்துள்ளோம்.

கதையின் அமைப்பே இந்த அரிய செய்தியினைச் செப்புதற்கு மிகவும் வாய்ப்பாக அமைந்து துணைபுரிகின்றது. சோழ நாட்டில் தொடங்கிப் பாண்டி நாட்டினுள் பரந்து, சேர நாட்டில் முடிகின்றது சிலம்பின் கதை. இங்ஙனம் முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியதாகிய கதையை வெறும் மண்ணளவில் நிறுத்தி விடாமல் மன ஒருமைக்கும் உரியதாக்கிய பெருமை இளங்கோவடிகளையே சேரும்.

அரசியல் துறையில் ஒற்றுமை:

திருச் செங்குன்றிலுள்ள குறவர் காணக் கண்ணகியைத் தேவர் வந்து அழைத்துச் சென்றனர். இந்த அரிய காட்சியைக் காணும் பேறு பெற்ற குறவர்கள் தங்கள் மன்னனாகிய சேரன் செங்குட்டுவனிடம் தெரிவிக்கின்றனர். கண்ணகி வரலாற்றின் மதுரைச் செய்திகளை மன்னனுக்கு, மதுரையிலிருந்து வந்த சாத்தனார் என்னும் புலவர் தெரிவிக்கின்றார். கண்ணகி சேரநாட்டை வந்தடைந்ததை அவர் குறிப்பிடும்போது,

> கொற்ற வேந்தன்
> கொடுங்கோல் தன்மை
> இற்றெனக் காட்டி
> இறைக்கு உரைப்பனள்போல்
> தன்னாட்டு ஆங்கண்
> தனிமையில் செல்லாள்
> நின்னாட் டகவையின்
> அடைந்தனள் நங்கை

எனக் கூறுகிறார். 'பாண்டியனுடைய கொடுங்கோன்மை இப்படிப்பட்டது என்பதை மூவேந்தருக்கும் தலைவனாய செங்குட்டுவனுக்குத் தெரிவிப்பதற்காகவே தன்னுடைய சோழநாட்டுக்குச் செல்லாமல் சேர

---

* இதன் விரிவினை முன் கட்டுரையில் காண்க.

நாட்டுக்குக் கண்ணகி வந்தாள்' என்பது சாத்தனார் கருத்து. இந்தச் செய்தியைச் சிலப்பதிகாரத்தில் அமைத்துப் பாடியவர், சேர அரச குலத்தைச் சேர்ந்த இளங்கோவடிகள். அற உணர்ச்சி அவரிடத்து இல்லாமல் போயிருப்பின், "ஆகா! சேரர் புகழே புகழ்! பாண்டியன் கொடுங்கோன்மையை நிலை நாட்டிய கண்ணகி தேவியார் வாழ்க!" என்ற நெறியில் பாடியிருத்தல்கூடும். ஆயின், இளங்கோவடிகளின் சிலம்பு சாத்தனார்க்குச் 'சூடு' கொடுக்கிறது, செங்குட்டுவன் வாயிலாக. "யான் நீதியினின்றும் வழுவிய செய்தி என்னைப் போன்ற மன்னரைச் சென்று சேருமுன் உயிர் விடுத்த செய்தி சேரட்டும் எனக் கூறுவான் போல வினைப்பயன் வளைத்தகோலைத் தன் உயிர்விடுத்து நிமிர்த்தினான்" என்று பாண்டியனைப் பாராட்டுகிறான், சேரன்.*

கண்ணகியின் கதையைச் சாத்தனார் வாயிலாகவே இளங்கோவடிகள் முதன் முதல் அறிந்தார்; அறிந்த அப்பொழுதே தமிழரிடையே நல்லுறவு நிகழ்வதற்கு ஏதுவான கரு நிகழ்ச்சி அதன்கண் அமைந்திருப்பதையும் கண்டுகொண்டார். சாத்தனாரும் புலவரே; ஆயின், அவர் சேரனுக்குச் சிறப்பும் பாண்டியனுக்கு இழிவும் தரும் கதையாகக் கண்ணகி வரலாற்றைக் கண்டார். அறவழிப்பட்ட இளங்கோவடிகளோ ஒற்றுமைக் காப்பியமாய் உருவாக்க வழி கண்டார். இந்த மனப்பான்மையின் வேறுபாடு நம் சிந்தனைக்குரியது. 'சிலப்பதிகாரக் கதையின் தலைவியாகிய கண்ணகி' யாரும் படாத பெருந்துயரம் பட்டாள். அவள் அத்துயர் அடைவதற்குக் காரணமாயினான் பாண்டிய மன்னன். எனவே அவனைக் கொடுங்கோலன் என்று சாத்தனார் பழிப்பதில் என்ன தவறு' என்று சிலர் வாதாடக் கூடும். ஆயின், இளங்கோவடிகள் அத்துணை எளிதாக ஒரு மன்னனைப் பழிக்கிற புல்லிய மனம் படைத்தவரல்லர். சோழன் செங்கோன்மை பற்றியோ சேரன் செங்கோன்மை பற்றியோ மிக விரிவாக அவர் பேசவில்லை; அவ்வாறு விரித்துரைப்பதற்குரிய தேவையும் கதையில் இல்லை. பாண்டியன் தவறு இழைத்தான்; எனவே, அவனுடைய ஆட்சிமுறை பற்றி ஆராய வேண்டியுள்ளது. இதனை எதிர்பார்த்தே இளங்கோவடிகள் தம் காப்பியத்தை இயற்றியுள்ளார்.

மதுரைக் காண்டத்தின் முதற் காதையில் ஒரு மறையவன் வருகின்றான்; அவன் வாயிலாக மதுரைக்குரிய வழியைக் கேட்டுத் தெரிந்துகொள்கின்றார்கள் கோவலன் முதலான மூவரும். அந்த மறையவன் 'பாண்டி நாட்டுச் சீரும் சிறப்பும் கண்குளிரக் கண்டவனாதலின், தீதுதீர் சிறப்பினை யுடைய பாண்டியனை வாழ்த்தி வந்திருந்த' தாகக் கூறுகின்றான். மேலும், இரவுக் காலப் பயணம் மேற்கொள்ள நினைத்த போது,'பாண்டியரின் காவற் செம்மையால் கரடி, வேங்கை, பாம்பு போன்ற கொடிய பிராணிகளும் கொடுமை செய்வதில்லை என்ற புகழ் படைத்தது பாண்டிய நாடு' என்று கோவலனை புகழ்கின்றான். 'அவன் நாட்டிலே தனியே செல்லினும் வழியில் தடுத்து நிறுத்துவார் இலர்' என்று சில பாணர்களைக் கூறச் செய்கின்றார் ஆசிரியர். மதுரை நகரம் எரிகிறபொழுது கண்ணகியின் அருளை நாடிவந்த மதுராபதி தெய்வமும் அவன் செங்கோன்மையை விரித்துரைப்பதாகக் குறிப்பிடுகின்றார். 'வேதமுழக்கம் தவிர முறையீட்டு மணி ஓசை கேட்டறியாதது அவன் காது; அவன் அடிபணிகின்ற சிற்றரசர்கள் பழிக்கலாம்; ஆனால், குடிமக்களின் பழிப்புரை கேட்க முடியாது' என்றெல்லாம் மதுராபதித்

*சேரன் கூற்றை முன் கட்டுரையிற் காண்க. தொடர்பு கருதி ஈண்டுச் சுருக்கமே தரப்பெற்றுள்ளது.

தெய்வம் கூறுகிறது. அம்மன்னனின் ஆட்சிக்குட்பட்டிருந்த மதுரை நகரத்து மக்களும்,

கலையாத துன்பம்இக்
காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல்
வளைந்ததே.....

என்று மயங்கியதாக இளங்கோவடிகள் பாடுகிறார். கவிக் கூற்றாகவும் 'வளையாத செங்கோல் வளைந்ததற்கே பண்டை விளைவாகி வந்த வினை' எனப் பாண்டியனுக்கு இரக்கம் காட்டுகிறார். இவையெல்லாம் போதா என்று கருதிய இளங்கோவடிகள் கண்ணகியையே தெய்வ வடிவில் தோன்றச் செய்து, 'தென்னவன் தீதிலன்' என்று முடிவிலே கூறச் செய்கிறார்.*

இவ்வளவு ஏற்பாடுகளும் எதற்கு? தமிழ் மன்னருள் ஒருவனை மற்ற மன்னர்கள் பழிப்பதற்குக் காரணமான ஒரு நிகழ்ச்சி நடந்துவிட்டது. 'ஒற்றுமை வேண்டும்' என்ற உணர்ச்சி அற்றவர்களுக்கு இவ்வளவு போதும்; உடனே 'பாண்டியன் கொடுங்கோலன்' எனப் பழிபரப்பத் தொடங்கிவிடுவார்கள். சாத்தனார் போன்ற புலவர்களே விதிவிலக்கானவர் அல்லர் எனின், பொது மக்களைப் பற்றியும், பொருதலும் பொறுமையுமே கொண்டிருக்கும் ஏனைய மன்னர்களைப் பற்றியும் என்ன குறை சொல்லக் கிடக்கிறது! அங்ஙனம் தவறு செய்யக்கூடியவர்களுக்கு நல்லுறவு நிலவும் ஒற்றுமைக்கு வழி காட்டுவதே இளங்கோவடிகளின் நோக்கம். சேரன் செங்குட்டுவன் பாண்டியனைப் பழிப்பதற்குப் பதிலாகப் போற்றினான் அன்றோ? அவ்வாறு, குறைகண்ட விடத்துக் குணங்கண்டு மறப்பதும் போற்றுவதும் மக்களிடையே நல்லுறவு நிலவுதற்கான ஒரு வழி.

சமயத் துறையில் ஒற்றுமை:

உலகத்து மக்களிடையே நல்லுறவு நிலவாமல் இருப்பதற்குரிய காரணங்கள் பல; அவற்றுள் இரண்டு தலைமையானவை. ஒன்று, அரசியல்; மற்றொன்று, சமயப் பிணக்கு. அரசியல் தலைவரிடையே மறந்து மன்னித்தும், புரிந்து போற்றுதலும் நிலவுமாயின் ஒற்றுமை நீடிக்க முடியும். அதனை முன்னே சேரன் செங்குட்டுவன் செயலால் கண்டோம். சமயத் துறையிலும் நல்லுறவு நிலவுதற்கான வழிகளை இளங்கோவடிகள் காட்டியுள்ளார்.

இளங்கோவடிகள் வாழ்ந்த காலம் ஒரு மாறுதல் காலம். அவருக்கு முன்பிருந்த சங்க காலத்தில் நிறுவன வடிவமைந்த சமயங்கள் தமிழ் நாட்டில் இருந்த தில்லை. கடவுள் நம்பிக்கையும் வழிபாடும் இருந்தன; எனினும் இன்று நாம் கொண்டிருப்பது போல் சைவம், வைணவம், கிறிஸ்தவம், பௌத்தம்......போலச் சமய நிலையங்கள் கிடையா. இளங்கோவடிகள் காலத்தில் அத்தகைய நிலையங்கள் ஏற்படலாயின. அவ்வாறு சமய நிலையங்கள் தோன்றுவதால் ஏற்படக் கூடிய நன்மை தீமைகளை அவர் ஆராய்ந்து பார்த்திருக்கிறார். சமயக் கருத்துக்களைப் பரப்புகிற குரவர்கள் கடும்பற்றுள்ளம் கொண்டு பணி செய்தால், சமயப் பிணக்கும் பூசலும் பெருகும் என்பதை உணர்ந்திருக்கிறார். பூசலும் பிணக்கும் எத்துறையில் இருந்தாலும் பரவாயில்லை; உயிர்கள் யாவும் இறைவன் மக்கள் என்று கொள்ளும் சமயத் துறையில் அவை ஏற்படக்கூடாதன. ஆனால், அவை எல்லா நாடுகளிலும்போல நம் நாட்டிலும் தோன்றின. சமயப் பிளவால் எவ்வளவு பெரிய துயரம் ஏற்படக் கூடும் என்பதை நம் தலைமுறை மிக

*இவற்றின் விரிவுகளை அறிய விரும்புவோர் இக்கட்டுரைத் தொடரின் தொடக்கக் கட்டுரைகளைக் காண்க. இங்கே தொடர்பு கருதிச் சுருக்கமாகத் தரப்பெற்றன.

நன்றாக உணர்ந்திருக்கிறது. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு ஒரு முறை காணக்கூடிய காந்தியடிகளையே நாம் பலிகொடுத்தவர்களல்லவா? இவ்வளவு பெருங்கேடு நிகழக்கூடும் என்பதை இளங்கோவடிகள் உணர்ந்திருக்கமுடியாது. எனினும், சமயப் பிணக்கால் வேண்டாத தொல்லைகள் ஏற்படும் என்பதை மிகத் தெளிவாக அறிந்திருக்கிறார். ஆதலால், சமயப் பிணக்குக்கு ஒரு சிறிதும் இடம் இல்லாமல் தம்முடைய சிலப்பதிகாரத்தை இயற்றியுள்ளார்.

பிறவா யாக்கைப் பெரியோன்

என்று சிவபிரானைப் புகழும் அவரே

பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத
நா என்ன நாவே
நாராயணா என்னா
நா என்ன நாவே

என்று செங்கண் நெடியோன் ஆகிய திருமாலைப் புகழ்கிறார். இப்படியே பௌத்தர், அருகர் எவராயினும் அவ்வச் சமயத்தார் போலவே அவ்வச் சமயங்களைப் போற்றுகின்ற பான்மை மிகப் பெரிதும் போற்றத் தக்கது.

இளங்கோவடிகளுக்கும் ஒரு சமயத்தில் பற்று உண்டு; அச்சமயக் கொள்கையைப் பரப்பும் நோக்கமும் அவர்க்கு உண்டு. ஆயினும், தம் கருத்தைப் பரப்புதற்காக மற்றவர்களைப் பழிக்கவேண்டும் என்று அவர் கருதவில்லை. அவர் சமண சமயத்தைச் சார்ந்தவர். அதனையும் அவர் தெளிவாக — வெளிப்படையாகக் கூறிக்கொள்ளவில்லை. சிலப்பதிகாரத்தைப் பல முறை ஊடுருவிப் படித்தால்தான் உணர முடியும். அந்த அளவுக்கு ஏனைய சமய நெறிகளையும் அவர் போற்றியிருக்கிறார். கதைத் தலைவன் தலைவியர்க்கு வழித்துணையாகக் கவுந்தியடிகள் என்ற சமண சமயத் துறவியைப் படைக்கிறார். வழிநெடுகிலும் சமண சமயக் கொள்கைகளை அவர் ஓதி வருகிறார். இடையே வானில் இயங்கும் சமண சாரணர் வருகின்றனர்; அருகன் புகழ் பாடப்படுகிறது. எனினும், பிற சமயப் பழிப்புக்கு அணு அளவும் அங்கே இடம் இல்லை. ஆக்க நெறியில் கருத்தைச் செலுத்தும் அறச் செல்வர்களுக்கு எள்ளளவும் அழிவுச் சிந்தனை இருத்தலாகாது. அழிவுக்கும் எதிர்ப்புக்கும் இடம் கொடுத்தால் மக்களிடையே நல்லுறவு நிலவுதல் இயலாது. இதனைத் தெளிவாக உணர்ந்தவர் இளங்கோவடிகள். கோவலன் சமண சமயத்தவன்; ஆயினும் பாய்கலைப் பாவை ஆகிய கொற்றவை மந்திரம் சொல்லுகிறான். இளங்கோவடிகள் சமண சமயத் துறவியாக இருந்தும் அவருடைய காப்பியத்தில் வருகின்ற கோவலனின் தந்தை பௌத்தத் துறவி ஆக்கப்படுகிறான். மாதவியும் மணிமேகலையும் பௌத்தத் துறவிகள் ஆகின்றனர். சிலப்பதிகாரத்தின் தொடக்கத்தில் மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத் தீவலம் செய்யும் திருமணம் வருகிறது. மாடல மறையவன் கூற்றுப்படி சேரன் செங்குட்டுவன் வேத வேள்வி செய்தல் சிலப்பதிகாரத்தின் இறுதியில் வருகின்றது, ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையுடன் செவ்விய நெறிப்பட்ட சமய சமரசக் காட்சியே இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தில் காண்பது.

வேங்கடத்துக்கு அப்பாலும்......

மக்கள் நல்லுறவுடன் வாழும் வாழ்க்கை தமிழகத்துக்கு மட்டுமே வேண்டும் என்று இளங்கோவடிகள் கருதவில்லை. வேங்கடத்துக்கு அப்பாலுள்ளவர்களும் மக்களே என்ற மதிப்பு அவருக்கு உண்டு. தமிழ் மன்னர்களைக் கனகன், விசயன் என்ற இரண்டு வடநாட்டு மன்னர்கள் பழித்தனர். இச்செய்தி செங்குட்டுவனுக்குச் சினத்தை ஊட்டிற்று. 'பத்தினிப் படிமத்துக்கு உரிய இமயக் கல்லை

அவர் தலையிலேயே ஏற்றிக் கொணர்வேன்' என்று வஞ்சினம் மேற்கொண்டான். அங்ஙனமே வெற்றியும் பெற்றனன். தமிழரசரின் வீரத்தைப் பழித்ததால் அவமானம் அடைந்த மன்னர்களைச் சோழனுக்கும் பாண்டியனுக்கும் காட்டிவர அனுப்பினன், சேரன் செங்குட்டுவன். சோழனும் பாண்டியனும் பாராட்டியிருப்பார்கள் என்றுதான் பொதுவாக எதிர்பார்ப்போம். ஆனல், சிலப்பதிகாரத்தின் செய்தி அதுவன்று. "தமிழரின் பொது எதிரிகள் ஒடுக்கப்பட்டது சரிதான். ஆனல், போர்க்களத்திலிருந்து மாறுவேடம் பூண்டு அஞ்சி ஓடிய இவர்களைப் பிடித்து வருவதா வெற்றி!" என்று கூறிவிட்டனர். இந்தச் செய்தி என்ன அறிவிக்கின்றது? 'பகைவர்கள் என்றல் அவர்கள் அவமானத்துக்கு உள்ளாகவேண்டியவர்களே' என்ற கருத்தை மறுக்கிறது. பகையை ஒடுக்கலாம்; போரில் வென்றதே ஒடுக்கியதாகிவிட்டது. வஞ்சினம் நிறைவேறுதற்காக அவர்களைப் பிடித்துக் கல்லை அவர்கள் தலையில் சுமத்தியிருக்கலாம். ஆனல், அவர்களை மற்ற மன்னர்களிடமும் காட்டிவரச் சொல்வது அவமான மன்றோ? அவர்களும் மக்களின் தலைவராகிய மன்னரல்லரோ? —இவ்வாறு எண்ணியது அன்றைய மன்னர் மனம். பொறுப்புணர்ச்சியோடு மற்றவர்க்கு உரிய மதிப்பைக் கொடுப்பது மக்களிடையே நல்லுறவு நிலவுதற்கான வழி என்பதை இதன் வாயிலாக இளங்கோவடிகள் குறிப்பிடுகிருர்.

உரிமை போற்றும் உறவு:

பல்வேறு கூட்டத்தாரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பது சிலப்பதிகாரத்தின் சிறப்பான செய்தி. ஒற்றுமை என்றல், உரிமையைப் பறிகொடுத்துவிட்டு அடிமையாய் வாழ்கின்ற ஒற்றுமை யன்று. அவரவர் எல்லையில், அவரவர் அளவில் உரிமையோடு வாழ்கின்ற ஒற்றுமையே சிலப்பதிகாரத்தில் நாம் காணுகின்றேம். உறவுக்காக உரிமையைப் பறிகொடுக்கச் சொல்லவில்லை இளங்கோவடிகள்.

நெடியோன் குன்றமும்
தொடியோள் பௌவமும்
தமிழ் வரம்பறுத்த
தண்டமிழ் வரைப்பு

என்று தமிழினத்தின் உரிமைக்கு எல்லை வரையறை செய்கிருர். உரிமைக்கு எல்லை வகுத்த இளங்கோவடிகள் உறவுக்கும் அதே எல்லையை வரையறுக்கவில்லை. செங்குட்டுவன் வடநாட்டின்மீது படையெடுத்துப் போகும்போது, சில முனிவர்கள் அவனை வந்து காண்கின்றனர். கண்டு, அவனை நோக்கி,

மலயத்து ஏகுதும்
வான்பே ரிமய
நிலயத்து ஏகுதல்
நின்கருத் தாகலின்
அருமறை அந்தணர்
ஆங்குளர் வாழ்வோர்
பெருநில மன்ன
பேணல்நின் கடன்என்று

அவர்கள் கூறுகின்றனர். இமய மலையில் வாழும் முனிவர் தென்னாட்டு மலய மலைக்கு வருதலும், தென்னாட்டு மன்னன் இமய மலையின் அந்தணரைப் பேணுதலும் பேசுகிற சிலப்பதிகாரத்தின் கருத்து ஆராயத் தக்கது. கனக விசயர் மீது படையெடுத்துச் செல்லுகின்றான் செங்குட்டுவன். அவனிடம் இமயத்து அந்தணரைப் பேணவேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கின்றனர். இது உதவி நாடும் உறவு; ஆதலால் ஏற்றுக் கொள்ளத்தக்கது.

ஆனல், தமிழ் இனத்தாரின் வீரத்தைப் பழித்த பேச்சு, உரிமைப் புகழுக்கு மாசு தருவது; அந்தப் பேச்சைக் கேட்ட பின்னும் வாளாவிருப்பது உரிமையைப் பறி கொடுத்து உறவு தேடும் இழிதகவுடையதாக முடியும். இத்தகைய உறவை இளங்கோவடிகள் ஏற்றுக்கொள்ள வில்லை. ஆதிக்கமும் அடிமைத்தனமும் வாழ்கிற உறவு, உண்மையில் நல்லுறவாக முடியாது.

பத்தினிப் படிமத்துக்குக் கல் எடுப்பது ஒன்றே நோக்கமாயின் சேரன் செங்குட்டுவன் தன்னுடைய வடநாட்டு நண்பர்கள் வாயிலாக அந்தச் செயலை முடித்துக் கொள்ளலாம். நூற்றுவர் கன்னர் என்ற நட்பரசர் அங்ஙனமே தெரிவிக்கின்றனர். அப்போது செங்குட்டுவன் வடநாட்டுப் படையெடுப்புக்கு உரிய காரணத்தைச் செப்புகிறான்:

காவா நாவின்
கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர்
தம்மொடுங் கூடி
அருந்தமி ழாற்றல்
அறிந்தில ராங்கெனச்
சீற்றங் கொண்டுஇச்
சேனை செல்வது

தமிழாற்றலைப் பழித்தவர்க்குப் 'பாடங் கற்பிக்க'வே சினங்கொண்டு சேனை செல்வதாகச் செங்குட்டுவன் கூறுகிறான். மக்களிடையே நல்லுறவு நிகழ்வதற்கான செய்திகளைக் கூறும் சிலப்பதிகாரத்தில், இந்தச் சினமும் சேனையும் எதற்கு வருகின்றன என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

ஒருவரை ஒருவர் பழிக்கும் பழக்கம் இருக்கும் வரையில் பகைமையும் இருக்கும். நல்லுறவு நிலவ வேண்டுமாயின் அவரவர்க்கு இயற்கையான உரிமையை மதித்துப் போற்றவேண்டும். உரிமை இல்லாத இடத்தில் உறவும் இருக்க முடியாது. தமிழரைப் பழித்தால், ஆற்றல் உடைய தமிழன் படையெடுக்கிறான்; அப்படியே பிறரும். ஒருவரும் பிறரைப் பழிக்கவில்லையென்றால், நல்லுறவு தானே நிலவும்.

சமயத் துறைக்கும் இந்த உண்மை பொருந்தும். மதுரைக்குப் போகும் வழியில் கவுந்தியடிகள், கோவலன், கண்ணகி, ஆகிய மூவர்க்கும் வழி சொல்லுகிறான் ஒரு மறையவன். அவன் வழி உரைக்கும்போது மூன்று பொய்கைகளைப் பற்றிக் குறிப்பிட்டு, அவற்றிலே மூழ்கி எழுந்தால் என்னென்ன பயன் கிட்டும் என்பதை விரித்துச் சொல்கிறான். அவன் குறித்த பொய்கைகளும் பயன்களும் வைதிக நெறிக்கு உரியவை. கவுந்தியடிகளாகிய சமணத் துறவி இருப்பதைத் தெளிவாக அறிந்துகொண்டும், தன் வைதிகப் பற்றை அவன் காட்டிக் கொள்கிறான். கவர்ச்சியான பயன்களைச் சொல்லி, தம் மதத்துக்கு ஈர்க்கும் முறைபோல அவன் கூற்று அமைகின்றது. ஒரு வகையில் இது பிறர் உரிமையில் தலையிடுவதுதானே? எனவே, உரிமையை இழக்க விரும்பாத கவுந்தியடிகள் அவன் கருத்தை மறுக்கிறார்; வேறு வழியில்லை. அவ்வாறு மறுக்குமிடத்தும் 'நலம் புரி கொள்கை நான்மறையாள' என அவனை மிக்க மதிப்புடன் நடத்துகின்றார். இம்முறையில், மறுப்பிலும் பிறர் உரிமைக்கு மதிப்பும் உயர்வும் தந்தால் நல்லுறவு நிலவுவது திண்ணம்.

சேரன் செங்குட்டுவன் வடநாடு நோக்கிப் படையெடுக்குமுன், தன் வழிபடு கடவுளாகிய சிவபிரானை வணங்கி, அப்பெருமானின் திருவடிகளைத் தன் முடிமீது சூடிக் களிற்றின் மீது ஏறிப் புறப்பட்டான். புறப்படும் பொழுது ஆடகமாடம் என்ற திருமால் கோவிலிலிருந்து பிரசாதம் வருகிறது. சைவனாகிய செங்குட்டுவன் திருமாலுடைய பிரசாதத்தை மறுத்தனனா? இல்லை; ஏற்றுக்கொண்டான். ஆனால், தான் வழிபட்ட சிவபிரானுக்கு அடுத்த நிலையே தருகிறான். தன் நெறிக்கு இழிவின்றிப் பிறர் நெறிக்கு மதிப்புத் தருதல் வேண்டும் என்பதே ஆசிரியரின் கருத்தாதல் வேண்டும்.

உலகுபொதி உருவத்து
உயர்ந்தோன் சேவடி
மறஞ்சேர் வஞ்சி
மாலையொடு புனைந்து
இறைஞ்சாச் சென்னி

இறைஞ்சி வலங்கொண்டு

....

கடக்களி யானைப்
பிடர்த்தலை ஏறினன்
குடக்கோக் குட்டுவன்
கொற்றம் கொள்கென
ஆடக மாடத்து
அறிதுயில் அமர்ந்தோன்
சேடம் கொண்டு
சிலர்நின் றேத்தத்
தெண்ணீர் கரந்த
செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி
மணிமுடி வைத்தலின்
ஆங்கது வாங்கி
அணிமணிப் புயத்துத்
தாங்கின னாகி.........

என்பது சிலப்பதிகாரம். சிவபிரான் அருளால் தோன்றி அவரையே தன் வழிபடு கடவுளாகக் கொண்ட செங்குட்டுவன், சிவபிரான் திருவடிக்குத் தன் முடியும், திருமால் பிரசாதத்துக்குத் தன் புயமும் கொடுத்த காட்சி சிந்தனைக்கு உரியது. பிறரை மதித்து ஒற்றுமைக்கு வழி கோலுவதாயின் தன் மதிப்பை இழக்கவேண்டுமெனவோ, தன்மதிப்பை இழந்தே நல்லுறவைத் தேட இயலும் எனவோ கருத இடமில்லை யன்றோ?

அன்புரிமையும் அருளுறவும்:

சமுதாயத்தின் பொறுப்பேற்பவர் அரசியல் தலைவர்களும் சமய குரவர்களும் ஆவர். அத்தகைய பெரியோர்களின் செயல்களாலும் சொற்களாலும் ஒற்றுமைக்கும் உறவுக்கும் உரிய நெறிகளை இளங்கோவடிகள் காட்டியதை இதுகாறும் கண்டோம். ஆயின், சிறுபான்மையராகிய தலைவர்களே சமுதாய முழுமை ஆகிவிட மாட்டார்கள். அன்றாட வாழ்க்கையிலும் இத்தகு பண்புகள் அமையுமாறு செய்தல் மேலும் சிறப்புடையதாகும்.

மதுரை நகரத்து மாதரியினிடத்து நாம் காணும் ஒரு பண்பு எவர் உள்ளத்துக்கும் நல்விருந்தாம். கண்ணகி மாதரிக்குப் புதுவதாக அறிமுகம் செய்யப் பெற்றவள். ஆயின், மாதரியின் உள்ளத்தில் உரிமையோடு உறவுறும் இடத்தினைக் கண்ணகி பெறுகின்றாள். கவுந்தியடிகள்பால் கண்ணகியை அடைக்கலமாகப் பெற்று ஆயர் சேரியினுட் புகும் மாதரியைப்பற்றிக் குறிக்குமிடத்து இளங்கோவடிகள்,

அரும்பெறற் பாவையை
அடைக்கலம் பெற்ற
இரும்பேர் உவகையின்
இடைக்குல மடந்தை

என்று வரைந்துள்ளார். முன் அறிமுகமும் தொடர்புமில்லா ஒருத்தியைத் தன் அடைக்கலமாகப் பெறுவதில் மிகப் பேருவகை கொண்ட மாதரியின் அன்பு மலர் முதிர்ச்சியுற்று விளைக்கும் பயனை நாம் அறிதல் வேண்டும். உள்ளத்து மலர்ந்த உவகை உரையினிமையாய்க் காய்த்து அரிதின் ஓம்பும் அருட்கனியாய் முதிர்கின்றது. "உமக்கு அடித்தொழிலாட்டி இல்லை யென்று கருதற்பாலீ ரல்லீர்; என் மகள் ஐயை காணும் அடித்தொழிலாட்டி; யான் உம்மைப் பொன்போலப் பொதிந்து கொள்வேன்..." என்று அடியார்க்கு நல்லார் உரைவகுக்குமாறு அமைந்தன அம்மாதரி நல்லாளின் இன்னுரைகள். ஐயையைக் கண்ணகியொடு உறவின் முறையின ளாக்கும் அளவுக்கு மாதரியின் மாசற்ற அன்பு சிறக்கின்றது. ஐயையைக் குறிக்கும் மற்றோர் இடத்தில் 'நாத்தூண் நங்கை' எனப் பேசுகின்றாள். தன் மகட்குக் கோவலனுடன் பிறந்த உறவின்முறை கொண்டாடுமகத்தான், அயலுணர்வு அடியற்றொழியச் செய்கின்றாள் அவ்வன்பின் தெய்வதம். அயன்மை, புதுமை உணர்வுகளால் கண்ணகியின்

உள்ளம் அலைவுற்றுத் தொல்லையுறு வண்ணம் மாதரியின் இனிய சொற்களும் செயல்களும் அமைகின்றன.

கண்ணகி தன் கரங்களாலும் ஐயை துணையாலும் சமைத்த உணவினைக் கோவலற்குப் படைக்கின்றாள். துயர் போக்கும் துணைவியாம் கண்ணகி பரிமாற, அப்பெறலரும் அமுதுண்ணும் பேறு பெற்ற கோவலன் உணவருந்தினான். அந்தக் காட்சியை மாதரியும் ஐயையும் கண்டு மகிழ்கின்றனர்.

“ஆயர் பாடியின்
அசோதைபெற் றெடுத்த
பூவைப் புதுமலர்
வண்ணன் கொல்லோ
நல்லமு துண்ணும்
நம்பி ஈங்குப்
பல்வளைத் தோளியும்
பண்டுநம் குலத்துத்
தொழுனை யாற்றினுள்
தூமணி வண்ணனை
விழுமம் தீர்த்த
விளக்குக்கொல்லென”

ஐயையும் அவள்தன் தவ்வையாம் மாதரியும் விம்மிதம் எய்தினர் என இளங்கோவடிகள் வரைகின்றார். இவ்வரிய காட்சியில் இடம் பெறும் இவ்வெளிய மக்களால் இளங்கோவடிகள் தெரிவிப்பது யாது? அன்புரிமையால் அருள் உறவு கொண்டாடும் களங்கமற்ற உள்ளம் எவர்பாலும் இருக்குமேல், உலகில் தொல்லை ஏது? எளிய குடிப்பிறந்து, உழைத்தே பிழைக்கும் வாழ்விலும்கூட மாதரி இத்துணை உயரிய உண்மையினை நமக்கு அறிவுறுத்துகின்றாள். அன்பு செலுத்தும் திறம் உடையார்க்கு — அவ்வன்புரிமை காரணமாக — எவரும் உறவுடையராவர் என்பது இளங்கோவடிகள் செப்பும் செய்தியாகும். அன்றாட வாழ்க்கையில் - ஏழை எளியவரும் — இந்நெறியினைப் பின்பற்றுதல் வேண்டும் என்பதே அவர்தம் இதய ஒலியாம். தன் மகள் ஐயையைக் கண்ணகியின் நாத்தூண் நங்கையாக்கி, கரவும் களங்கமு மற்ற அன்பு செலுத்தி, அகம் பூரிக்கும் மாதரி தமிழர்க்கும் — பிற இனத்தினர்க்கும் - ஒப்பற்ற விளக்காக ஒளிர்கின்றாள். *

உரிமை > உறவு:

இதுகாறும் இக்கட்டுரையில் விவரித்த சிலப்பதிகாரக் காட்சிகளின் வாயிலாக அடிகள் அறிவுறுத்துவன யாவை? சுருங்கச் சொன்னால் ‘உரிமை > உறவு’ என்னும் வாய்பாடாக அமையக் காணலாம். இவ்வாய்பாடு இரண்டு விளக்கங்களுக்கு இடம் தருகின்றது. ஒன்று: அவரவர் உரிமை போற்றின் உறவு நிலைக்கும். இரண்டு: அன்பாகிய உரிமையால் அயலவரும் உறவாவர்.

*கண்ணகி, கோவலன், கவுந்தியடிகள் முதலாயினோர் வாழ்க்கையிலும் அன்பு முதிர்ந்து அருளாய்ப் பரிணமிக்கும் காட்சியினை அடிகள் விளக்கியுள்ளார். ஆயினும், அவ்வவர் வாழ்க்கைத் திறம் முழுவதையும் விவரித்திற்குரிய இடம் இஃதன்று. பின்வரவிருக்கும் கட்டுரையில் விவரிப்போம்.

பிரளயம்

திரு. தி. அ. கறுப்பண்ணன்

இதென்ன, சூரியமண்டலத்தில் ஏதாவது கோளாறு ஏற்பட்டுவிட்டதா! இத்தனை நாட்களாக நம்முடன் அன்னியோன்யமாய் இருந்த இந்தச் சந்திரன்கூட நமக்கு எதிரியாகிவிட்டானே! அட, இதென்னப்பா இது, சந்திரன் தன் இருப்பிடத்தைவிட்டு நம்மை நோக்கி நெருங்கி நெருங்கி வருகிறானே. ஒரு சமயம் தன் தாயகமான பூமியின்மேல் அன்பு அளவு கடந்து போனதால், இவ்வளவு நாட்களுக்குப்பின் அப்படி, ஒரு 'பிளையிங் விஸிட்' (Flying visit) கொடுத்துவிட்டுப் போகலாம் என்று வருகிறானோ! அடேயப்பா! அவன்தான் எவ்வளவு பெரிய கோர உருவத்தினனாயிருக்கிறான்! வானத்தின் அரைப் பகுதியையே மறைத்துவிட்டானே!

இப்போது சந்திரன் இருக்கும் நிலையில், எந்த ஒரு கவியாவது அவனைப் புகழ்ந்து பாடுவானா, அல்லது அவனுடைய நா தான் எழுமா!!

கடல்களின் அலைகள் எல்லாம் இமயம் போல் எழும்புகின்றன. நிலப் பரப்பு எல்லாம் தண்ணீர் மயம். நகரங்களெல்லாம் தவிடு பொடியாகின்றன. பூமியின் உள்ளகத்தில் உருகிக் கொதித்துக் கொண்டிருக்கும் எரிமலைக் குழம்புகளெல்லாம், பல துவாரங்கள் வழியாக வெளிக்கிளம்ப ஆரம்பித்துவிட்டன. கடல்கள் மேல் எழும்பிப் போடும் சப்தமும், நகரங்கள் தண்ணீரால் சூழப்பட்டு நசுங்குவதும் பார்ப்பதற்கு, ஆஹா! என்ன கண்கொள்ளாக் காட்சி!!

அடகடவுளே! இதென்ன சந்திரனே தூள்தூளாக உடைந்து சிதறி விட்டானே! ஆமாம் பூமிக்கு வெகு அருகில் வந்துவிட்டதால, பூமியின் இழுக்கும் சக்தியைப் பொறுக்க முடியாமல்தான் இப்படி பொடியாகிவிட்டான்! சப்தத்திற்குமேல் சப்தம் போட்டுக்கொண்டு இந்தத் தூள்கள் எல்லாம் செந்நிற வானில் இன்னும் சிறிய தூள்களாக உடைகின்றன. பூமியின் இழுக்கும் சக்தியால் இவையாவும் ஒரு அழகான வளையமாக பூமியைச் சுற்றிச் சுற்றி வருகின்றன! ஏன், இவையெல்லாம் கட்டுக்கதைபோல் தோன்றுகிறனவா? வெகு காலமாகவே வானிலே ஆராச்சியாளர்கள், இன்று இல்லாவிடினும், அநேக மில்லியன் ஆண்டுகளில், எப்படியும் ஒருநாள் சந்திரன் பூமியால் கட்டாயம் இழுக்கப்பட்டுவிடும் என்று கருதி வந்திருக்கின்றனர். அப்படி இழுக்கப் பட்டால் என்ன நேரிடும் என்பதைத் தான் நம் அட்டைப்படம் சித்தரிக்கின்றது. அன்றுதான் உலகத்தின் அழிவுநாள்—இதற்கிடையில், இதைவிட பயங்கரமான வேறு அழிவுகள் எதுவும் நேரிடாமலிருந்தால்!!

அப்படி வேறு என்ன அழிவுகள் ஏற்படலாம் என்பதை ஒன்றன்பின் ஒன்றாகக் காணலாம்.

அநேகமாக எல்லோரும் பூமியோ அல்லது சூரியனோ வேறு ஏதாவது ஒரு நட்சத்திரத்தின்மேல் மோதிவிடலாம் என்று பயப்படுகின்றனர். இப்படி பயமுறுவதற்கும் நியாயமிருக்கின்றது. ஏனெனில் வெகு காலத்திற்குமுன் தற்போது இருப்பதைவிட மிகப்பெரிதாயிருந்த நமது சூரியன், வேறொரு நட்சத்திரத்தின்மீது

மோதியதாலோ அல்லது அதற்கு வெகுசமீபத்திலே வந்ததாலோதான் உடைந்து, தற்போதைய சூரியனும் அதன் சகாக்களும் உண்டாயின என்று நம்பப்படுகிறது. ஆகையால், மறுபடியும் சூரியனோ, அல்லது பூமியோ ஏன் வேறொரு நட்சத்திரத்தின்மேல் மோதக்கூடாது! பூமி மோதினால் என்ன, சூரியன் மோதினால் என்ன? இரண்டும் ஒன்றுதான்; எப்படியும் உலகம் அழிந்தே தீரும்!

ஆனால் இவ்வாறு உலகத்திற்கு அழிவு ஏற்படுவது அவ்வளவு சுலபமான காரியமன்று. எப்படி என்று பார்ப்போம். அண்டமானது அநேக மில்லியன் நட்சத்திர மண்டலங்களால (Galaxies) ஆனது. ஒவ்வொரு மண்டலத்திற்கும் இடையில் வெகு தொலைவான சூன்யப்பிரதேசம் இருக்கின்றது. உதாரணமாக ஒன்றுக்கொன்று வெகு அருகாமையிலிருக்கும் இரு நட்சத்திர மண்டலங்களை எடுத்துக்கொள்வோம். நமக்கெல்லாம் தெரியும் ஒளியானது வினடிக்கு 1,86,000 மைல்கள் பிரயாணம் செய்கின்றதென்று. அப்படியிருக்கையில் மேற்கூறிய இரண்டு மண்டலங்களில் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு ஒளிச்செல்ல எவ்வளவு காலம் பிடிக்கும்? 7,50,000 ஆண்டுகள்.

இதை எதற்குக் கூறினோமென்றால், வானில் நட்சத்திர மண்டலங்கள் ஒன்றுக்கொன்று எவ்வளவு தூரத்தில் விலகி இருக்கின்றன என்பதையும், அண்டமானது (Universe) எப்படி பரந்து கிடக்கின்றதென்பதையும் குறிப்பதற்கேயாம். ஒவ்வொரு நட்சத்திர மண்டலமும் அநேக கோடி நட்சத்திரங்களாலானது. அப்படிப்பட்ட ஒரு நட்சத்திர மண்டலத்தின் மையத்தைவிட்டுச் சற்று தூரத்தில் தான் நாம் இருக்கிறோம். இம்மாதிரி நட்சத்திரமண்டலத்தின் விளிம்பைத் தான் நாம் ஒளிப்பாதை (Milky way) என்கிறோம். இந்த ஒளிப்பாதையில் நமது சூரியனைப்போன்று கோடிக் கணக்கில் உருவத்தில் பெரியதான எண்ணற்ற பல நட்சத்திரங்கள் இருக்கின்றன. ஆகவே நட்சத்திர மண்டலத்தி லுள்ள நட்சத்திரங்கள் ஒன்றோடொன்று மோதாவண்ணம் இயங்க பரந்தவெளி இருக்கின்றது. சூரியனுக்கு வெகு அருகாமையிலிருக்கும் 'பிராக்ஸிமா' (Proxima) என்னும் நட்சத்திரமானது சுமார் $4\frac{1}{2}$ ஒளி-வருடத் தூரத்தில் இருக்கின்றது. இன்னமும் சூரியனோ அல்லது பூமியோ வேறு ஒரு நட்சத்திரத்துடன மோதலாம் என்று சந்தேகப்பட்டால், நீங்கள் பரந்த வெளியைப்பற்றி சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றுதான் முடிவு கட்ட வேண்டும். ஆகவே, சூரியனோ, பூமியோ வேறு நட்சத்திரத்துடன் மோதிவிடலாம் என்பதற்கு ஒரு ஏதுவும் இல்லை. அப்படியேயாயினும், அதற்குமுன் நமக்குப் பல எச்சரிக்கைகள் விடப்படும்.

ஏதாவது ஒரு நட்சத்திரம் சூரியனுடைய பாதையில் வரும் என்றிருந்தால், விஞ்ஞான வளர்ச்சியால் புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட தொலைநோக்கியால் முன்கூட்டியே அறிந்து, அதற்குள் நாம் ஒரு சூரிய மண்டலத்திற்குக் குடியேறிவிடலாம்! அப்படி வேறு ஒரு நட்சத்திரத்தின்மேல் மோதினால் என்ன ஆகும் தெரியுமா! என்ன ஆகும் என்பதைப் பார்ப்பதற்கு நாமிருக்கப்போவதில்லை. சூரியனும், அந்த நட்சத்திரமும் மோதிய பின்பு அவை தூள் தூளாக உடைந்து எல்லாத்திசைகளிலும் சிதறிவிடும். பூமியும், அதோடு சேர்ந்த மற்ற கிரகங்களும் வெப்பத்தைத் தாங்கொணாது உருகிவிடும். அல்லது சூரியன் நம்மை இழுத்துப் பிடித்துக்கொண்டிருக்கும் சக்தியை இழந்துவிடுவதால் நாமெல்லாம் வானவெளியில் பிடிப்பின்றி மிதக்கவேண்டியது தான்.

அடுத்தபடியாக இன்னும் ஒரு அழிவைப்பற்றிப் பார்ப்போம். வெகு காலத்திற்கு முன்பிருந்தே மக்கள் வால் நட்சத்திரத்தைப்பற்றித் திகிலடைந்து வந்திருக்கின்றனர். ஏன் இந்த வால் நட்சத்திரமானது பூமியின் இழுக்கும் சக்திக்குக் கட்டுப்பட்டு, அதனால் வேகமாக இழுக்கப்பட்டு, பூமியின்மேல் மோதி, பூமியை அழித்துவிடக்கூடாது?" என்று அவர்கள் பயப்பட்டு வந்தனர். மேலும் சில வால் நட்சத்திரங்கள் சூரியனுக்குச் சுமார் 100,000 மைல்கள் தூரத்திலேகூட வருவதால், எப்பொழுதாவது ஓர் சமயம் பூமியின் பாதையில் கட்டாயம் இவைகள் குறுக்கிட நேரிடும்.

ஆனால் இவ்வாறு ஏதாவது ஓர் வால் நட்சத்திரம் பூமியைத் தாக்கினாலும், அதனால் ஏற்படும் அழிவானது அவ்வளவு பயங்கரமானதல்ல. வால் நட்சத்திரத்தின் தலைப்பாகமானது பூமியின் அளவு பெரியதாகயிருப்பினும், பூமியைப்போன்று அவ்வளவு திண்மை வாய்ந்ததன்று. ஆகையால் இத்தாக்குதலால், இவ்வாறு தாக்கப்பட்ட அந்த குறிப்பிட்ட பூமியின் மேற்பரப்பில் மாத்திரம் அழிவு ஏற்படும். ஆயினும் பூமி முழுவதும் ஆட்டம் கொடுத்துவிடும். பூமியால் இழுக்கப்பட்டு, அதை நோக்கி வேகமாக, பூமியின் மேற்பரப்பி லுள்ள காற்றைக் கிழித்துக்கொண்டு வரும்போது வால் நட்சத்திரத்தின் தலைப்பாகமானது நினைக்க வொண்ணாத அவ்வளவு வெப்பத்தை யடைகிறது. ஆகவே அருகாமையி லுள்ள எல்லா நகரங்களும் அழிக்கப்பட்டுவிடும்; ஆயினும் பூமியின் பெரும்பாகம் அழியாது.

இவை எல்லாவற்றையும் விட, சூரியனோ அல்லது சந்திரனோ இதுகாறும் ஆற்றிவரும் செயல்களி லிருந்து வழுவி, திடீரென்று நெருப்புப் பிழம்பாக மாறி, நெருப்பைக் கக்க ஆரம்பித்தால் என்னவாகும்? பூமியின்கண் இருக்கும் எல்லா உயிரினங்களும், பொருளகளும் எரிந்து சாம்பலாக வேண்டியதுதான்.

பழங்காலத்தி லிருந்தே வானிலை விற்பன்னர்கள் வானில் மிகமிகப் பிரகாசமான பல நட்சத்திரங்கள் திடீரென்று தோன்றுவதைக் கவனித்து வந்திருக்கின்றனர். தற்காலத்தில் தொலைநோக்கிகளைக் கொண்டு இம்மாதிரியான நட்சத்திரங்கள் ஆண்டிற்குச் சுமார் 30 திடீரென்று காணப்படுவதாகக் கணக்கிட்டிருக்கின்றனர். இவை யாவும் புதிய நட்சத்திரங்களல்ல. ஏற்கனவே இருந்த நட்சத்திரங்கள்தான். யாதொரு அறிவிப்போ அல்லது காரணமோ யின்றித் திடீரென்று இவை நெருப்பைக் கக்கி ஏராளமான சக்தியை வெளியிட்டுப் பின்பு எப்போதும்போல் உள்ள சாதாரண நிலையை அடைகின்றன. சிற்சில சமயங்களில் இப்படி பயித்தியக்காரத்தனமாக நெருப்பைக் கக்கி சில நட்சத்திரங்கள் அழிந்தும் விடுகின்றன. ஆகவேதான் ஒரு சிலர் ஏன் நமது சூரியனும் இம்மாதிரி திடீரென்று நெருப்பைக் கக்கி நம்மை அழித்துவிடக்கூடாது என எண்ணுகின்றனர். சூரியனின் மேற்பரப்பின் வெப்பநிலை சுமார் 11,000°F என்றும் அதன் உள்ளகத்தின் வெப்பநிலை சுமார் 70,000,000°F என்றும் கணக்கிடப்பட்டிருக்கின்றன. அப்படிச் சூரியன் திடீரென்று உஷ்ணப் பிழம்பாக மாறி நெருப்பைக் கக்க ஆரம்பித்தால் அப்போது வெப்பநிலை, அதன் உள்ளகத்தின் வெப்ப நிலைக்குச் சமமாக இருக்கும். அப்போது பூமியின் எப்பாகத்தில் பகலாயிருக்கிறதோ அப்பாகத்திலுள்ள யாவும் எரிந்து சாம்பலாகிவிடும். பூமியின் இரவுப் பாகத்திலுள்ளவர்கள் என்ன நடக்கிறதென்பதே தெரியாமல் சாம்பலாகிவிடுவர். ஏனெனில் சூரியன் நெருப்பைக் கக்க ஆரம்பித்த $8\frac{1}{2}$ நிமிடங்களில் பூமியும் அதனைச் சார்ந்த கிரகங்களும் எரிக்கப்பட்டு காற்று மயமாக்கிவிடும்!

ஆனால் இப்படிச் சூரியன் திடீரென்று நெருப்பைக் கக்கும் பயித்தியக்காரத்தனமான செய்கையைச் செய்யும் நட்சத்திரக் கூட்டத்தைச் சேர்ந்ததல்ல; மேலும் ஒரே வகையான நட்சத்திரங்கள்தான் மறுபடியும், மறுபடியும் நெருப்பைக் கக்குவன என இடைவிடாத ஆராய்ச்சியின் வாயிலாகத் தெரியவருகின்றது. ஆகவே, நமது சூரியன் அப்படி நெருப்பைக் கக்கும் இனத்தைச் சேர்ந்ததானால் இதற்கு முன்பே இது நெருப்பைக் கக்கியிருக்கவேண்டும். இல்லாவிடில் இனிமேல்தான் நெருப்பைக் கக்க வேண்டுமானால் அதற்கு எப்படியும் அனேக மில்லியன் ஆண்டுகள் பிடிக்கும்.

எல்லா வகையான அழிவுகளைக் காட்டிலும் இரண்டு வகை அழிவுகள் கட்டாயம் நேர்ந்தேதான் தீரவேண்டும். ஏனெனில் இவை அண்டத்தின் வேகமானது தற்போதைய வேகத்தைக் காட்டிலும் சிறுகச் சிறுகக் குறைந்துகொண்டே போவதைப் பொறுத்திருக்கின்றன. பூமியின் வேகம் உராய்தலினால் (Friction) ஒரு நூற்றாண்டிற்குச் சுமார் $\frac{1}{1000}$ வினாடி குறைந்துகொண்டே வருகிறது. இப்படி இதன் வேகம் குறைவுபட ஆரம்பிக்கும்போது சூரியனின் சுழலும் வேகமானது இன்னும் அதிகரிக்கின்றது; அவ்வமயம் சந்திரன் பூமியை விட்டு விலகிவிடுகின்றது. ஆகவே அக்காலத்தில் ஒரு நாளானது ஒரு மாதமாக நீண்டுவிடும்; சந்திரனும் பூமியை நோக்கி வர ஆரம்பித்துவிடும்.

அப்படிச் சந்திரன் பூமியை நோக்கி வருமானால் என்ன நேரிடும் என்பதை முன்னமேயே பார்த்தோம். ஆனால் அதுசமயம் நாம் ஒருவரும் இப்பரந்த பூமியின் கண் வாழப்போவதில்லை. ஏனெனில் ஒருநாளானது ஒரு மாதமாக நீளும்போது பகலில் உஷ்ணத்தைத் தாங்கமாட்டாமல் பொசுங்கிவிடுவோம்; அல்லது அந்தச் சூட்டிலிருந்து தப்பித்துக்கொள்ள ஓடிஓடிக் களைத்து இறப்போம்!

ஆனால் பூமியைச் சந்திரன் தாக்கி அழிவை உண்டாக்குவான் எனக்கிஞ்சிற்றும் ஐயுற அவசியமில்லை. ஏனெனில் சந்திரன் பூமிக்கு 10,000 மைல்களுக்கு அருகாமையில் வரமுடியாது. அப்படிவந்தால் மிதமிஞ்சிய பூமியின் இழுக்கும் சக்தியால் சந்திரன் தூள்தூளாகப் போய்விடும்.

இவை எல்லாவற்றையும் விட ஒன்று மாத்திரம் கட்டாயம் நடந்தே தீரும். அதுதான் சூரியன் தன் ஆற்றல் எல்லாவற்றையும் இழந்து, தன் செயலாற்ற முடியாமல் போய்விடுவது; இது கட்டாயம் நேரிடும். ஏனெனில் சூரியன் நாளுக்கு நாள் தன் ஆற்றலை இழந்து வருகின்றது. ஆனால் இம்மாதிரி மிக மெதுவாகவே நடைபெறும். அப்படி ஏற்படும் காலத்தில் பூமியிலுள்ள யாவும் பனியாக உறைந்துவிடும்; வானத்திலிருந்து உறைபனி மழையாகப் பெய்த வண்ணமே இருக்கும்.

ஆனால் இக்கண்கொள்ளாக் காட்சியைச் காணவும் இங்கு ஒருவரும் இருக்கப் போவதில்லை. எல்லோரும் இதற்கு முன்பேயே எரிக்கப்பட்டு சாம்பலாகிவிடுவர். ஏனெனில் எந்த ஒரு நட்சத்திரமும் தன் சக்தியையெல்லாம் இழந்து தன் செயலாற்ற முடியாமல் போவதற்கு முன்பே, தன்னாலான மட்டும் நெருப்பைக் கக்கிவிட்டுத்தான் மறையும். அதுபோல நம் சூரியனும் தன் சக்தியை இழப்பதற்கு முன் நம்மை எல்லாம் ஒருகை பார்த்துவிட்டுத்தான் மறையும்: அப்படி அது நெருப்பைக் கக்கும்போது வெப்பநிலை சுமார் 20,000 அல்லது 30,000 டிகிரிகள் இருக்கும். இந்த வெப்பத்தை எதுதான் தாங்கும்

இவையெல்லாம் எப்போது நேரிடும்? பல கோடிக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்புதான். ஆக நாம் இவைகளைப்பற்றிப் பயப்படவேண்டிய அவசியமேயில்லை. ★

கேசின்

திரு. அ. ராம்கோபால்

•

நம் வீடுகளில் பால் மிஞ்சிப் போனால் அதை தயிர், மோர், வெண்ணெய், கோவா, திரட்டுப்பால் போன்று ஏதாவதொன்றாக மாற்றிப் பயன் படுத்துகிறோம். ஆனால் நம் கிராமங்களில் பொதுவாகப் பாலை இவ்விதம் பயன் படுத்துவதில்லை. அங்கே பாலுக்கோ பால் பண்டங்களுக்கோ நகரங்களைப் போல் அவ்வளவு கிராக்கியு மிருப்பதில்லை. ஆனால் நகரங்களை விட நாட்டுப் புறங்களிலேயே பால் மாடும் பால் உற்பத்தியும் அதிகம். ஆகையால் நம் கிராம மக்கள் தனிப்பட்ட முறையிலோ கூட்டுறவு முறையிலோ பாலிலிருந்து கேசின் தயாரிக்கும் தொழிலை மேற்கொண்டால் தங்கள் ஊர்களில் வீணாகும் பாலைப் பணமாக மாற்றித் தங்கள் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளுவதோடு நாட்டின் செல்வ நிலையைப் பெருக்கிக் கேசினை நம்பி வாழும் பற்பல தொழில்களையும் வளர்க்கலாம். பாலிலிருந்து கேசின் தயாரிக்கத் தொழில் நுட்பப் பயிற்சி ஏதும் தேவையில்லை. தொழில் துறையில் ஆர்வமுள்ள எவரும் மேற்கொண்டு லாபமடையலாம்.

கேசின் வகைகள்:-

பாலிலிருந்து கேசினை மூன்று வகையாகத் தயாரிக்கலாம்.

(1) கன்றுகளின் வயிற்றிலிருந்து "ரென்னெட்" என்னும் ஒரு வகை ரசாயனம் தயாரிக்கப்படுகிறது. இதைப் பயன் படுத்திக் கேசின் தயாரிக்கலாம். இப்படித் தயாராகும் கேசினுக்கு "ரென்னெட் கேசின்" (Rennet Casein) அல்லது "பாரா கேசின்" (Para Casein) எனப்பெயர்.

(2) பாலோடு "டைலூடட் சல்பியூரிக் ஆஸிட் (Diluted Sulphuric Acid) "டைலூடட் ஹைட்ரோகுலோரிக் ஆஸிட் (Diluted hydrochloric acid) அல்லது டைலூடட் அஸடிக் ஆஸிட் (Diluted Acetic Acid) கலந்து தயாரிக்கலாம். இப்படித் தயாராகும் கேசினுக்கு "ஆஸிட் கேசின் (Acid casin) எனப்பெயர்.

(3) தானாகவே பாலில் புளிப் பேறும் படி விட்டுவைத்து அதன் மூலம் கேசின் தயாரிக்கலாம். இப்படித் தயாராகும் கேசினுக்கு "லாக்டிக் கேசின்" (Lactic casein) எனப் பெயர்.

மேலே கூறிய மூன்று வகைகளில் பிந்திய இரண்டு வகைகளே நம் நாட்டில் கேசின் தயாரிக்க அதிகமாகப் பயன்படுத்தப் படுகிறது. இரண்டாவது வகை தான் மற்றவைகளை விட அதிகமாகக் கையாளப்படுகிறது.

வேண்டிய சாதனங்கள் :-

(1) "க்ரீம் செப்பரேடர்" (cream separator). கடைகளில் இதை வாங்கிக் கொள்ளலாம். (2) மண் பானைகள் (3) கோணிப்பைகள் (4) இரண்டு அகலமான பலகைகள் (5) சல்லடை.

தயாரிக்கும் முறை :-

கேசின் தயாரிக்கப் பாலிலிருந்து முதலாவதாக வெண்ணெய் சத்தைத் தனியாகப் பிரித்தெடுக்கப் பயன்படும்

கருவியே "க்ரீம் செப்பரேட்டர்" என்பது. ஆகையால் அதன் உதவியால் முதலில் பச்சைப் பாலிலிருந்து வெண்ணெயைத் தனியாகப் பிரித்தெடுத்துவிட வேண்டும். 27 ராத்தல் (4 ராத்தல்=1 பட்டணம் படி) பச்சைப்பாலிலிருந்து ஒரு ராத்தல் பச்சை வெண்ணெய் கிடைக்கும். மேல் நாடுகளிலிருந்து இங்கே வரும் "பட்டர் (Butter) எனப்படும் வெண்ணெய் பச்சைப் பாலிலிருந்து இவ்விதம் பிரித்தெடுக்கப் பட்டதே. இவ்வெண்ணெய் நம் வெண்ணெயைப் போல் சீக்கிரம் கெட்டுப் போவதுமில்லை. வெண்ணெய் எடுத்த பச்சைப் பாலுக்கு "ஸ்கிம் மில்க்" (skim milk) எனப் பெயர்.

இப்படி ஏடெடுத்த பாலை ஒரு மண் பானையில் கொட்டி அதில் இரண்டரைப் படி பாலுக்கு ஒரு அவுன்ஸ் டைலூடட் ஹைட்ரோ குலோரிக், சல்பூயூரிக் அல்லது அஸடிக் ஆஸிட் வீதம் விட்டுக் கலக்க வேண்டும். ஆஸிட்டை கொஞ்சம் கொஞ்சமாக மெதுவாக விடவேண்டும். இப்படி விடும்போது ஒரு மரத் துருப்பு அல்லது துண்டால்பாலை ஓயாமல் கலக்கிக்கொண்டே இருக்க வேண்டும். 15 நிமிடத்துக்குள் பால் முழுவதும் பூரணமாக முறிந்துவிடும். பால் முழுவதும் முறிந்ததும் கலக்குவதை நிறுத்திவிடலாம்.

சிறிது நேரம் கழித்து மேலே தேங்கியுள்ள தண்ணீரை வடித்து விட்டு அடியில் தங்கியுள்ள தயிர் போன்ற பொருளை ஒரு மண் பாத்திரத்தில் போட்டு இரண்டு மூன்று முறை சுத்த நீர் விட்டு நன்றாக அலம்பவேண்டும். பிறகு ஒரு கோணிப் பைக்குள் கொட்டி அப்பையை இரண்டு பலகைக்கிடையே வைத்து மேலே பாரமான கல் ஒன்றைத் தூக்கி வைக்கவேண்டும். ஒரு மணி நேரம் கழித்து மறுபடியும் மற்றொரு கல்லைத் தூக்கி வைக்கவேண்டும். அதேபோல் மறுபடியும் ஒரு மணி நேரம் கழித்து மற்றொரு கல்லைத் தூக்கிவைக்கவேண்டும்.

நான்கைந்து மணி நேரம் சென்றதும் கற்களைத் தள்ளிவிட்டுக் கோணிப் பையை எடுத்து அதிலுள்ள கேசினை வெயிலில் கொட்டிக் காயவைக்க வேண்டும். கொஞ்சம் கூட ஈரப் பசை இல்லாமல் ஆகும் வரை அதாவது சுமார் ஒருவாரம் தினசரி வெயிலில் காயப்போட்டுப் பிறகு அதை அரைத்து மாவாக்கிச் சலித்து கோணிப்பைகளில் அடைத்து விற்கலாம். நன்றாகத் தயாரித்துக் காயவைத்த கேசின் மூன்று வருடம் வரை கெட்டும் போவதில்லை.

"க்ரீம் செப்பரேட்டர்" வாங்க வசதி இல்லாதவர்கள் பாலைக் காய்ச்சி பிரைக்குத்தி அடுத்த நாள் காலை வழக்கம்போல் கடைந்து வெண்ணெய் எடுத்துவிடவேண்டும். பிறகு நூற்றுக்கு ஒன்று வீதம் தயிரில் காஸ்டிக் சோடா கலந்து அடுப் பேற்றி இலேசாகச் சூடாக்கிக் கலக்கினால் எஞ்சியுள்ள வெண்ணெய் முழுவதும் தயிரிலிருந்து வெளியேறி விடும். பிறகு அதை மேலே கூறிய முறைப்படி கேசினைகத் தயாரிக்கலாம்.

ஏடெடுத்த பச்சைப்பாலில் ரென்னட்டைக் கலந்து முறித்து ஆஸிட் கேசின் தயாரிக்கக் கூறிய முறையைப் பின்பற்றி ரென்னட் கேசின் தயாரிக்கலாம்.

குணம்:

சுத்தமான கேசின் பார்க்க வெள்ளையாக இருக்கும். ருசியோ மணமோ ஒன்றுமிருக்காது. ரசாயனக் கூறுபாடு செய்து பார்த்தால் கார்பன், ஹைட்ரஜன், பாஸ்பரஸ்,

கந்தகம் முதலியவை அடங்கியிருக்கும். இதுமட்டுமல்ல. 15 வகையான அமினோ ஆஸிட் (amino-acids) களும் விட்டமின்களும், இறைச்சியில் அடங்கியுள்ளதைப் போன்ற புரொட்டீன் சத்தும்கூட உள்ளன. காஸ்டிக, மெட்டல் அல்கலிகள் (caustic and metal alkalies) கார்பனேட்கள் (carbonates) பொரேட்கள் (Borates) முதலியவைகளில் கரையும். தண்ணீர் பட்டால் உப்பிக்கொள்ளும். நெருப்பில் போட்டால் பற்றிக்கொள்ளாது. தண்ணீரைப்போல் 1.26 பங்கு கனமானது.

உபயோகங்கள்:

கேசின் மனித உடலுக்கு ஊட்டம் கொடுக்கும் பொருள்களில் ஒன்று. நாம் சாப்பிடும் தயிரிலும் மோரிலும் 3% கேசின் கலந்து இருக்கிறது. கேசின் பௌடர் மிட்டாய்கள், பேடன்ட் உணவுகள், முக கிரீம்கள், மேல் பூச்சு மருந்துகள், அழகுப் பொருள்கள், பூட் பாலிஷ், கோந்துகள், வஜ்ஜிரங்கள், தண்ணிரில் கரைக்கும் பெயிண்டுகள் முதலியன தயாரிக்கப்பயன் படுகிறது. கொய்னா, லீதியம் உப்புக்கள் (Lithium salts) அயோடைடு உப்புக்கள் (iodide salts) போன்று சாப்பிடக் கஷ்டமான இங்கிலீஷ் மருந்துகளோடு கலக்கவும் இது பயன்படுகிறது. ஆஸிட்கேசினை ஏதாவதொரு அல்கலி நீரில் கரைத்து வேண்டிய சாயத்தை அதோடு கலந்து பிறகு அதோடு ஏதாவது ஒரு ஆஸிட்டைக் கலந்து முறித்து பிரஸில் வைத்து அமுக்கித் தண்ணீர் அம்சத்தை வெளியேற்றிவிட்டு அச்சுகளில் வைத்து அழுத்தி வேண்டிய வடிவங்களாக மாற்றி எடுத்து அதைப் பலதடவை பார்மல்டிஹைடு (formal de hyde) நீரில் நனைத்தெடுத்தால் அவை கவர்ச்சி மிக்க பொருள்களாக மாறிவிடும். இதே மாதிரி ரென்னட் கேசினோடு அதன் எடையில் மூன்றிலொரு பங்கு தண்ணீர் கலந்து உஷ்ணப் படுத்திய ஸ்க்ரூபிரஸ் (Screw press) களில் வைத்து அமுக்கிப் பிறகு வேண்டிய அச்சுகளில் வார்த்து கவர்ச்சிமிக்க பொருள்களாக்கலாம். செயற்கை பிளாஸ்டிக் பொருள்கள், தந்தப் பொருள்கள், செயற்கை ஆமை ஓடு, தந்தம், கொம்பு, போர்சலின், பொம்மைகள், எரோப்லேன் இறக்கைகள்; முதலியவைகளை மேல்நாடுகளில் இவ்விதமே தயாரிக்கிறார்கள். கடந்த மகாயுத்த காலத்திலிருந்து வெடிமருந்துகள் செய்யவும் கேசின் பயன்படுத்தப்படுகிறது!

★

‘கலைக்கதிர்’

ஆண்டுச் சந்தா 6—0—0

கலையின் களஞ்சியம்

சிந்தனைச் செல்வம்

அச்சம் ஒரு தொத்து நோய்

திரு. க. இராமதாஸ், B. A. (Hons).

சூத்த வீரன் தன் வாழ்வில் ஒரு தடவைதான் இறக்கிறான்; ஆனால் கோழையோ ஒவ்வொரு விநாடியும் இறந்துகொண்டிருக்கிறான் என்றான் ஒரு ஆங்கில அறிஞன். இது முற்றிலும் உண்மை. பயந்த மனத்தினன் தன் அபாயங்களைக் கற்பனை செய்துகொண்டு அவதிப் படுவதை நாம் பார்க்கிறோம். கற்பனையில் தோன்றும் அபாயங்கள் உண்மையில் இருக்கும் அபாயங்களைவிட அதிகப்; மிகவும் ஆபத்தானவை. நமக்கிருக்கும் அச்சங்களில் பெரும்பாலானவை நம்முடைய கற்பனையில் விளைந்தவையே.

இரவுக் காலத்தில் சாலை வழியே தனிமையில் நடக்கிறோம். மனத்தில் பயமிருந்தால் சாலையின் வளைவில் இருக்கும் சுண்ணும்படித்த மைல்கல், வஞ்சகத்தை உள்ளடக்கிய நம் எதிரி வெள்ளை முக்காடிட்டு உட்கார்ந்திருப்பதாக நம் கண்களுக்குத் தோன்றும். தென்றலில் நடனமாடும் முல்லைக் கொடியை சீறும் நாகப்பாம்பாக நாம் கற்பனை செய்வோம்.

இந்த அச்சம் ஒரு தொத்து நோய். இது தொத்து வியாதிகள் எல்லாவற்றையும்விட மிக எளிதிலும், அதிக விரைவிலும் பரவுகிறது. பயந்தவனின் பக்கததில் நாம் உட்கார்ந்தாலே போதும், அவனுடைய அச்சங்கள் எல்லாம் நமக்கும் பரவிவிடும். அவர்களின் பக்கத்தில் நாம் இருக்க வேண்டுமென்று கூடத் தேவையில்லை. அவர்களின கவலை தோய்ந்த பேச்சுக்களை ஒலிப்பதிவு மூலம் நாம் கேட்டாலும் போதும்; உடனே அவர்களுடைய அச்சங்கள் எல்லாம் நம்மைப் பிடிக்கின்றன.

அண்மையில் அமெரிக்காவில் உள்ள காலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் நடந்த ஒரு விசாரணை இதைத் தெளிவாக்குகிறது. நரம்புத் தளர்ச்சியுடைய நோயாளிகள் தங்களுடைய ஆழ்ந்த கவலைகளையும், அச்சங்களையும் தங்களுக்குள் விவாதித்துக்கொண்டிருப்பதை முதலில் ஒலிப்பதிவு எடுத்தார்கள். பிறகு, மனநோயாளிகளில் பலரை அந்த ஒலிப்பதிவைக் கேட்கும்படி செய்தனர். இதன் விளைவு என்னவென்றால், அந்த நரம்புத் தளர்ச்சி நோயாளிகளின் அச்சங்களும், கவலைகளும் இந்த மன நோயாளிகளுக்கும் வந்து விட்டன.

அச்சம் முதலில் நம்மிடத்தில் உண்டாவதில்லை. இதைப் பிறரிடமிருந்து நாம் பெறுகிறோம். தாயின் பயந்த முகத்தைப் பார்த்ததும், அவள் மடியில் உள்ள குழந்தை தானுகவே வீறிடுகிறது. இரவில் குழந்தைக்கு ஏதாவது நேரிடுமோ என்று பயந்தால் அந்தப் பயம் உடனே குழந்தைக்கும் பரவி அழுகத்தத் தொடங்குகிறது. இது காரணமாகத்தான் சில குழந்தைகளை இரவில் தூங்கவைப்பது கடினமாகிறதென்று டாக்டர் பிரீஸ்டன் (Dr. Preston) கூறுகிறார்.

நியூயார்க்கில் உள்ள மருத்துவ விஞ்ஞானிகள், (New york Academy of Medicine) அச்சம் நம்முடைய இரத்தத்தில் ஒரு ரசாயனப் பொருளைச் சேர்க்கிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த இரசாயனப் பொருள் நம் உடலில் உள்ள கேந்திர உறுப்புக்களைச் சுருங்கச் செய்கிறது. விஞ்ஞானிகளால் இந்த இரசாயனப் பொருளின் முழு விவரங்களையும் இதுவரை கண்டுபிடிக்க முடியாவிட்டாலும், இது நம் உடலின உள்ளுறுப்புக்களை, குறிப்பாக

நம் உடலின் குடல் பகுதியைப் (Gastro-Intestinal Tract) பாதிக்கிறது என்பதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்த இரசாயனப் பொருளின் ஒரு வியப்பான தன்மை என்னவென்றால் நாம் அச்சமோ, அல்லது கவலையோ அடையும்போது இது நம் இரத்தத்தில் கலக்கிறது. நமக்கு அச்சம் நீங்கியதும் இந்த இரசாயனப் பொருளும் நம் இரத்தத்திலிருந்து நீங்கி விடுகிறது.

அச்சம் காரணமாக நம் தசைநார்கள் சுருங்கி, அதன் மூலம் இரத்தக் குழாய்களும் சுருங்குகின்றன. பிறகு இருதயம் பலமாகச் சுருங்குகிறது. இதன் கடைசி நிலையில் உடலுறுப்புகள் முடமாக்கப்பட்டு (Paralysis) மனிதர்கள் இறக்கவும் நேரிடுகிறது. இருதய நோய், நீரிழிவு, ரத்த அமுக்கம், ஆஸ்த்துமா போன்ற நோய்களுக்கெல்லாம் இந்த அச்சம் ஒரு காரணமாய் இருக்கிறது என்று மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

இந்த அச்சம் என்ற வியாதியின் விளைவுகள் பல. முதலாவதாக, இது நம் எண்ணங்களையும், நினைவுகளையும் பாதிக்கிறது. சில வேளைகளில், இந்த வியாதி நம் முழு அறிவையும் இழக்கச் செய்கிறது. அச்சம் நம்முடைய மூளையைத் தாக்கும்போது நம் சுயநினைவை இழக்கிறோம். அச்சம் அதிகமானால் எல்லாம் ஒரே சூன்யமாகப் போய் விடுகிறது. இரண்டாவது மகாயுத்தத்தின் போது, கப்பல் விபத்தில் அகப்பட்டுக் கொண்ட ஒருவர் சுமார் பதினைந்து நாட்கள் ஆழ்கடலில் மிதந்து நினைவு தவறிய நிலையில் அலைகளால் மோதப்பட்டுக் கரையில் ஒதுக்கப்பட்டார். மருத்துவ உதவி கிடைத்ததும் அவருக்கு உடலில் வலுவேற்பட்டது; ஆனால், ஞாபக சக்தியை மட்டும் அவர் அறவே இழந்தார். தம்முடைய பெயர்கூட அவருக்கு நினைவில் இல்லை. இது அளவுக்கு மீறிய அச்சத்தால் ஏற்படும் விளைவு.

அச்சத்தின் விளைவாகப் பலர் இறந்திருக்கிறார்கள். இருதயக் கோளாறினால் (heart failure) இறந்து விட்டதாகச் சொல்லப்படுபவர்களில் பலர், உண்மையில் அச்சத்தினால் இறந்தவர்களே. விஷமற்ற பாம்பு கடித்துப் பலர் இறப்பதைப் பார்க்கிறோம். இவர்களுடைய மரணம், தங்களைப் பாம்பு கடித்து விட்டதே என்ற பயத்தால் ஏற்பட்டதே தவிர, பாம்புக் கடியால் ஏற்பட்டதன்று.

அச்சத்தால் சிலருக்கு மரணம் உடனே ஏற்படுவதில்லை. சில நாட்கள் சென்ற பிறகுதான் அவர்கள் இறக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, மார்கரெட் என்ற பெண் கடைக்குச் சாமான் வாங்கச் சென்றாள். சாலையின் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்குச் செல்ல முயற்சிக்கையில், வேகமாக வந்த காரின் ஹாரன் ஒலி அவளை திடுக்கிடச் செய்தது. அவள் வீட்டிற்குத் திரும்பியபோது அவள் உடலில நடுக்கமிருந்தது. தலை வலிக்கிறதென்று முணுமுணுத்துக் கொண்டே அவள் படுத்துக்கொண்டாள். இரண்டு மணி நேரம் கழித்து அவள் தகப்பனார் அவளைப் பார்த்த போது அவளுக்குத் தன் நினைவில்லை. மார்கரெட்டை மருத்துவ இல்லத்திற்கு எடுத்துச் சென்றார்கள் ஆனால் சில மணி நேரத்தில் அவள் மருத்துவ இல்லத்திலேயே உயிர் துறந்தாள். அவளுடைய பிரேதத்தைப் பரிசோதனை செய்ததில், சிறு மூளையில் உள்ள இரத்தக் குழாய்கள் வெடித்து இரத்தம் வெளிவந்திருப்பது தெரிய வந்தது. மார்கரட்டின் மரணம் அச்சத்தால்தான் ஏற்பட்டது என்று மருத்துவர்கள் தீர்ப்புக் கூறினார்கள்.

அண்மையில், இங்கிலாந்தில் ஒரு சினிமாப்படம் திரையிடப்பட்டது. அதில் வரும் ஒரு பயங்கரக்காட்சி, படம் பார்த்தவர்களில் பலரை மூர்ச்சையடையச் செய்தது. சிலருக்குப் பிரக்ஞையே இல்லாமற்

போய் விட்டது. இந்தப் படத்தைத் தனிமையில் பார்த்த ஒரு தியேட்டர் நிர்வாகி, தான் உட்கார்ந்திருந்த இடத்திலேயே உயிர் துறந்தார்.

அச்சம் எவ்வளவு ஆழமானதாக இருந்தால் அது மனிதனைக் கொல்லும்? இதற்குப் பொதுவான விடை கிடையாது. அது தனி மனிதர்களின் இயல்பைப் பொறுத்திருக்கிறது. ஒரே படத்தைப் பார்த்த பல்வேறு மனிதர்கள், பல விதமாகப் பாதிக்கப் பட்டிருப்பதே இதை விளக்குகிறது.

அச்சம் அதிகமானால், அது விரைவில் மயிரை நரைக்கச் செய்கிறது என்று விஞ்ஞானிகள் கண்டிருக்கிறார்கள். அச்சம் மிகவும் அதிகமாகும்போது, மயிரில் மிக நுண்ணிய காற்றுக் குமிழிகள் அதிவிரைவில் உண்டாகின்றன. இந்தக் காற்றுக் குமிழிகள் மயிரின் இயற்கையான கருப்பு நிறத்தைப் போக்கி, அதை வெள்ளை நிறமாக மாற்றுகின்றன. அச்சம் மனிதனின் பார்க்கும் சக்தியையும் கெடுக்கிறது. ஒருவன் சிறிது பயந்திருந்தாலும்கூட அது அவனுடைய பார்வையை உடனே பாதிக்கிறது. அமெரிக்காவில் உள்ள கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் நடந்த சோதனைகள் மூலம் பத்தில் ஐந்து பேருக்குப் பயத்தினால் பார்வை கெட்டிருக்கிறதென்பதைக் கண்டார்கள்.

அறியாமைதான் அச்சத்திற்குக் காரணமாக அமைகிறது. அறிவு வளர வளர, ஒரு மனிதனுடைய அச்சங்கள் குறைந்துகொண்டு வருகின்றன. அறிவுடை மனிதன் ஒரு காரியத்தில் முதலில் அஞ்சினாலும், பிறகு தன்னுடைய தெளிந்த அறிவினால் அச்சத்தின் காரணங்களை ஆராய்ந்து அதனைப் போக்கிக் கொள்ளுகிறான். அச்சத்தின் தன்மையை ஆய்ந்து தெளியும் வன்மை குறை மதியினருக்கு இல்லாத காரணத்தால், அவர்கள் என்றென்றும் அச்சத்தை விட்டொழிக்க முடியாமல் அவதிப் படுகிறார்கள். கல்வி கேள்வியற்று அநாகரிகமாய் வாழ்ந்த ஆதிகால மக்களின் அச்சங்கள் கணக்கற்றவை.

அச்சத்தை விட்டொழிப்பது எப்படி? முதலில், நம்முடைய அச்சங்களை இரகசியமாக வைத்திருப்பது கூடாது. மனத்தின் இருட்டறையிலிருந்து அவற்றை வெளிச்சத்திற்குக் கொண்டுவர வேண்டும். நம்முடைய நெருங்கிய நண்பர்களிடம் அவற்றை விவரமாகச் சொல்லிக் கலந்து ஆலோசிப்பது நல்லது. அப்படிச் செய்யும்போது, நம்முடைய அச்சங்களில் பெரும்பான்மை பரிகசிக்கத் தக்கனவாய் இருப்பதை நாம் உணர்வோம். இதயத்தை அழுத்திக் கொண்டிருக்கும் இந்த அச்சங்களைப் பிறரிடம் சொல்லும்போது நம் மனச்சுமையும் சற்றுக் குறையும். இரண்டாவதாக நாம் ஏதாவதொரு காரியத்தில் அச்சப்பட்டால், அந்த ஆபத்தான சூழ்நிலையிலிருந்து தப்பித்துக் கொண்டு, ஓடிவிட முயலக் கூடாது. அதற்குப் பதிலாக, நம்முடைய அச்சத்திற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றித் தேர்ந்து தெளிதல் வேண்டும். அஞ்சுவதற்கு ஒரு காரணமும் இல்லை என்று தெரிந்தபிறகும் அந்தக் காரியத்தைச் செய்து முடிக்கப் பலர் பயப்படுவார்கள். இந்நிலையில் அச்சத்தை ஒழிக்க ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அதாவது எமர்சன் சொல்வதைப் போல அச்சந்தரும் காரியத்தை உடனே செய்துமுடிக்க வேண்டும்; அப்போதுதான் அச்சம் இறந்தொழியும்.

கடைசியாக,

"அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்"

என்ற திருக்குறள் நினைவுகூர்தற்குரியது.

●

ஞானோதயம்

'வல்லிக்கண்ணன்'

★

அறிவுப் பசி எடுத்துத் திரிந்தான் அவன். அணு அணுவாக ஞானத்தைக் கிரகிக்க வேண்டியிருந்தது அந்த மனிதனின் நிலை.

மலர்தோறும் சென்று சென்று தேன் சேகரிக்கும் ஈயைப் போல், அவன் புத்தகம் புத்தகமாகக் கற்றாக வேண்டியிருந்தது. ஒன்றின்மேல் ஒன்றாகக் கற்களை அடுக்கிப் பலமான சுவர் எழுப்ப நேர்வது போலவே, சிறிது சிறிதாகச் சேர்த்துத்தான் அறிவைப் பலப்படுத்த வேண்டியிருந்தது. தேகத்தில் உறுத்தும் சிறு துளியின் வேதனையைச் சகித்துச் சகித்து நல் முத்தைப் பிறப்பிக்கிற சிப்பிப் புழுவைப் போல், அவன் ஞானமுத்தைப் பெறுவதற்காக எவ்வளவோ வேதனைப்பட்டாக வேண்டியிருந்தது.

முத்துக்களைச் சேகரிக்க ஆழ்கடலினுள் முக்குளிக்கத் துணிகிறவர்களைப் போலவே, அறிஞர்களும் சிந்தனையாளர்களும் ஞானிகளும் முன்னோர்களும் சிதறி விட்டிருந்த அனுபவ மணிகளைப் பெற ஞானக் கடலிலே திளைக்க வேண்டியிருந்தது. கரும்பாறைகளிடையே ஒளிக்கோடுகள் போல் நெளியும் தங்கரேகைகளைக் கண்டு அங்குப் பதுங்கிக் கிடக்கும் பொன்னைப் பெயர்த்தெடுக்கப் பாடுபடுகிற தொழிலாளிகளைப் போலத்தான், அவனும் ஞானச் சுரங்கத்திலே ஒவ்வொரு கணமும் ஓயாது உழைக்க வேண்டியிருந்தது.

ஞானக்கடல் மீது அறிவு யாத்திரை செய்யத் தவித்த அவன், எல்லையிலாக் கடலின் கரை ஓரத்திலே நின்று அலைகள் எற்றுகிற சிப்பிகளைப் பொறுக்கி வீண் காலம் கழிப்பதாக எண்ணுவான்; பெருமூச்செறிவான்.

அவன் உள்ளம் சொல்லும்: 'இப்படி அணு அணுவாக ஞானம் பெற முயன்று வெற்றி காண்பது எப்போது? சிறு சிறு அனுபவங்கள் மூலமே அறிவு பெறமுடியும் என்றிருப்பது சரியல்ல. வரி வரியாகவும், பக்கம் பக்கமாகவும் படித்துத்தான் ஒரு புத்தகத்தின் சாரத்தைக் கிரகிக்க முடிகிறது. இப்படிப் புத்தகம் புத்தகமாகப் படித்துத்தான், முன்னேற்றப் பாதையிலே வெகுதூரம் சென்றுவிட்ட மனித அறிவின் ஞானக் களஞ்சியங்களைப் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. ஒவ்வொருவனும் இவ்விதம் தனித்தனியே உழைத்துத்தான் சுயம் பிரகாசம் அடைய முடியும். அறிவொளி சட்டென ஏற்படுமானால்! மனிதமூளை ஞானம் முழுவதையும் ஒரேயடியாகக் கிரகித்துக் கொள்ள ஒரு வழி இருக்குமானால்?......'

ஞானத்தின் எல்லையைக் கண்டுவிட ஆசைப்படும் அந்த மனிதன் பெருமூச்செறிவான்.

ஒரு நாள்......

அவன் இவ்விதம் எண்ணி முடித்த போது, மென் சிரிப்பு ஒன்று காதருகிலே ஒலிக்கக் கேட்டான்.

புதுப்புது எண்ணங்களைச் சிந்தனைத் தறியிலே நெய்து பழகும் அவன், சில சமயம் எண்ணிபணைத்யே எண்ணிக்கொண்டிருப்பது இயல்பு.

எனினும், 'செவி அருகே சிறு சிரிப்பு' என்பது அவனுக்கே விளங்காத புது விஷயம்தான்.

'யாரது?... ஒருவரையும் காண வில்லையே!' என்றது மனம்.

'நீ என்னைப் பார்க்க முடியாது. நான்தான் ஞானம்' என்ற ஒலி அவன் காதருகில் ஒலித்தது.

'உன்னைப் பார்க்க முடியாவிட்டால், நீ என்னைக் கூப்பிட்டு என்ன பிரயோசனம்?' என்றான் அவன்.

'சதா நீ என்னை அடையப் பாடுபடுகிறாய். என்னை எண்ணி எண்ணி ஏங்குகிறாய். என் பூரணத்தை உணர்ந்துவிடத் தவிக்கிறாய். அதனால் உனக்கு அருள்புரிய வந்தேன்' என்றது ஞானம்.

அவன் உள்ளம் சிலிர்த்தது; உடல் புல்லரித்தது. 'நான் என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டான்.

'உன் நெஞ்சைத் தொட்டுப் பார்த்துக்கொள். உனது அறிவிலே வைரத்தன்மை பிறந்துவிட்டதா? ஞானப் பேரொளியைத் தாங்கிக் கொள்ளும் மின்சக்தி உன் உள்ளத்தில் இருக்கிறதா? உன்னையே நீ கேட்டுக்கொள்!'

அவன் சிரித்தான். 'மிரட்டுகிற செப்படி வித்தை பயின்ற ஏதோவொரு குறளிபோலும்!' என்று எண்ணினான்.

ஞானம் நகைத்தது. 'அற்ப மனிதனே! ஞானமெனும் கடலை உன் உள்ளங்கையினால் அள்ளிக் குடிக்க ஆசைப்படுகிறாய். அடிவாரத்தில் நின்றபடியே, விண் தொடும் நீள்முடி மலையின் உயரே போய்ச் சேர்ந்து விட விரும்புகிறாய்......'

'வழி தவறி வந்துவிட்ட பிரசங்கி போலும்!' என்று நினைத்தான் ஞானத்தின் பக்தன்.

'நான் ஞானம்' என்றது அப் பண்பு.

'அப்படியானால், உன்னை உணரத் துடிக்கும் எனக்கு உன் பூரணப் பண்பையும் காட்டுவாயாக!' என்று கூறி நகைத்தான் அவன். 'வேண்டுமானால் பாடுகிறேன்.

புத்தகத்துள்ளுறை மாதே!
பூவில் அமர்ந்திடும் வாழ்வே!
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்!
வேதப் பொருளுக் கிறைவி!
முத்தின் குடை உடையாளே!
மூவுலகும் தொழு தேவி!......'

அப்புறம் அவன் பேசவில்லை. செயலற்றுப் போனான்.

வானத்துச் சூரியன் அந்த அறையினுள்ளே வந்து விட்டது போல் ஒரே பிரகாசம்! ஓடி நெளிந்த விண்ணக ஒளிப்பாம்பு தன் மின் சக்தி முழுமையும் சேர்த்துக்கொண்டு அந்த அறையினுள் நழுவி, அவனது நெற்றியிலே வந்து தாக்கியது போலிருந்தது.

அவனால் சூழ்நிலையைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவனால் அவனையே புரிந்துகொள்ள இயலவில்லை. ஞான தரிசனம் காண விரும்பிய அந்த மனிதன், ஞான ஒளிவெள்ளத்தை ஏற்றுக் கொள்ளத் திறம் அற்றவனாய், விழித்த கண் விழித்தபடி, சிரித்த உதடுகள் சிரித்தபடி இருந்தான். நிரந்தரமாக அப்படியே மாறிப் போனான் அவன்.

'அதிர்ச்சி காரணமாக மூளை சிதறி விட்டது. அளவுக்கு அதிகமான வேலையினால் சித்தம் பேதலித்து, இவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது!' என்று தீர்ப்புக் கூறினார்கள் வைத்திய நிபுணர்கள்.

ஞானம் சிரித்தது. அதை அந்த மனிதன் கேட்டான். மற்றவர்கள் கேட்கவில்லை.

★

சமையலில் சஞ்சீவி

திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி

★

சஞ்சீவி, சாவு நிலையை நீக்கிக் காக்கும் நல்ல மருந்து. இது இருக்கும் இமயத்தை நாடி, அனுமன் ஆகாய மார்க்கமாய்ச் சென்றான். மலையில் மருந்து இருந்தது. மருந்தோடு மலையையே கல்லிக் கொணர்ந்தான். இறக்க இருந்தவர் இம்மருந்தால் உறக்கம் தெளிந்தவர்போல் எழுந்தனர். இராமாயணத்தில் இப்படி ஒரு மருந்து வர்ணிக்கபபட்டுள்ளது. ஆனால் இன்றைய நடைமுறையில் இருக்கின்றதா? அதைத்தான் இன்னும் திட்டவட்டமாகக் கூற முடியவில்லை. ஆனால் சஞ்சீவியே போன்ற மருந்துக் குணம் படைத்த ஒன்று, இன்று சமையலில் அன்றாடம் பயன்படுகின்றது. இவ்வளவும் பெருங்காயத்தைப்பற்றிய பீடிகை.

பெருங்காயம் என்றதும் நம்மை அறியாமலே ஒருவித மணத்தின் தன்மையை நாம் நினைக்கின்றோம். இந்தப் பெருங்காயத்தைக் கையாளும் அளவிலும் முறையிலுமே அதனுடைய சிறப்பு மிகுந்து காணப்படுகின்றது. நாவுக்குச் சுவையான உணவு என்றால் அதில் பெருங்காயத்தின் கூட்டுறவைக் காணலாம்.

பெருங்காயம் எவ்வூர்ச் சரக்கு? இந்தியர்கள் மட்டும் பெருங்காயத்தை உபயோகிக்கின்றார்களா? ஆங்கிலேயர்களோ ஏனைய அயல் நாட்டாரோ பெருங்காயத்தைப் பயன்படுத்துகின்றார்களா? இவைபோன்ற வினாக்கள் எழுவது ஆர்வமுடையவர்க்கு இயல்பு. இவை ஆராய்ச்சிக்குரியவையே. பெருங்காயம் இயற்கையாகக் கிடைக்கும் தாவரமா, கலப்புப் பொருளா, இரசாயனச் சேர்க்கையா என்பனவும் சிந்தனைக்குரியவை. பெருங்காயம் உணவா, உட்கொள்ளும் மருந்தா என்றும் எண்ணம் எழுவது இயற்கை.

பெருங்காயம் ஒரு வகைச் சிறு மரப் பிசின். இப்பிசின் கிடைக்கும் தாவரம் கிழக்குப் பர்சியா, ஆப்கானிஸ்தானம் முதலிய பகுதிகளில் வனமாக மண்டிக் கிடக்கின்றது. முதலில் பெருங்காயத்தைக் கண்டுபிடித்தவர்கள் காஷ்மீர மக்களே. ஆனால் காஷ்மீரத்தில் இந்தப் பிசின்தரும் தாவரத்தைச் சேகரிக்கவில்லை; அங்கு அகப்படாது.

முதலில் அந்தச் சிறு மரத்தின் வேரில் சிறு சிறு கீறல்கள் கத்தியால் உண்டாக்குவார்கள். அப்படிக் கீறிவிடப்பட்ட பகுதிகளி லிருந்து ரப்பர் மரத்திலிருந்து பால் வடிவதுபோல, மஞ்சள் நிறமுடைய ஒரு வாசனையுடன் கூடிய பிசின் கசியும். அவ்வாறு கசிந்து ஒன்று சேர்ந்த பிசின் பிறகு இறுகும். இறுகியதும் மஞ்சள் நிறம் கறுத்துவிடும். இதுவே பல சரக்குக் கடைகளில் கிடைக்கும் பால் பெருங்காயம். இவ்வாறு ஒவ்வொரு வேரிலும் மூன்று நாளைக்கு ஒரு முறை சிறு சிறு துண்டுகளாக வெட்டப்பட்டு பட்டை எடுக்கப்பட்ட பகுதிகளில் இருந்து பிசினைச் சேகரிப்பார்கள் சேகரித்து வியாபாரத்திற்குத் தகுதியாக்குகின்றனர். ஒரு வேர் பட்டுப்போகும்வரை இம்முறையிலேயே பெருங்காயப் பிசின் சேகரிக்கப்படுகின்றது. பெருங்காயச் செடி பத்துச் சதவீத அளவுக்கு ஆலில்(Allyl) என்னும் கந்தகம் கலந்த ஒரு எண்ணெயைக் கொடுக்கின்றது.

பெருங்காயம் மளிகைக் கடைகளில் இரண்டு வகையாகப் பிரித்து வியாபாரம் செய்யப்பட்டு வருகின்றது. ஒன்று பால் பெருங்காயம். மற்றொன்று மிஸ்கி பெருங்காயம். மிஸ்கி என்னும் சொல்லிலிருந்தே பெருங்காயத்துடன் இன்னும் கலப்படங்கள் சேர்க்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகும். பால் பெருங்காயம் துளி சேர்த்தாலும் மணம் அதிகம் உள்ளது. பால் பெருங்காயத்தை அளவு மீறி உபயோகித்தால் வேப்பெண்ணெய் போன்ற ஒரு குமட்டல் நாற்றம் கிளம்பிவிடுவதுடன் பண்டத்தையும் பாழ் செய்துவிடும். உண்டால் வயிற்றுள் இருப்பவற்றை வெளியேற்றிவிடும். மிஸ்கி பெருங்காயம் அப்படி அன்று. கொஞ்சம் அளவு தவறிக் கூடிவிட்டாலும் பெருத்த வெறுப்பைத் தராது. காரணம் அதில் சேர்க்கப்பட்டுள்ள மற்றச் சமான்கள். மிஸ்கியில் மிளகாய் பூண்டு முதலிய சரக்குகளுடன் இன்னும் சில பண்டங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்விரண்டில் எது உயர்வு என்பது உபயோகிப்போரின் விருப்பத்தைப் பொறுத்தே உள்ளது.

தமிழ் நாட்டில்தான் பெருங்காயம் தாராளமாக உபயோகிக்கப்படுகின்றதென்று எண்ணிவிடவேண்டாம். மலையாளத்திலும் உபயோகிக்கப்படுகின்றது. ஆந்திரர்கள் பெருங்காயத்தை 'இங்குவா' என்றழைக்கின்றனர். காஷ்மீர மக்கள் 'யாங்' என்று பெருங்காயத்திற்குப் பெயரிட்டுள்ளனர். வங்காள, குஜராத்திய, மராட்டியர் முதலாக, பஞ்சாபியர் ஈறாகவுள்ள வடநாட்டவர்களெல்லாம் பெருங்காயத்திற்கு 'ஹிங்' என்று பெயர் சொல்லுகின்றனர். சமஸ்கிருதத்திலும் 'ஹிங்கு' என்றே பெருங்காயம் பேசப்படுகின்றது. சிங்களவர் 'சிருங்காயம்' என்று பெருங்காயத்தைச் சொல்லுகின்றனர். பர்மீய பாஷையிலும் 'ஷிங்கா' ஷிங்ஹெட்' என்றே பெருங்காயம் பெயர் தாங்கியுள்ளது. ஆங்கிலத்தில் பெயர் அஸபோடிடா என்பது. இவ்வாறு இந்தியா முழுதுமன்றி இங்கிலாந்துவரையுள்ள ஏனைய நாட்டார் எல்லாம் பெருங்காயத்தால் பெரும் பயன் அடைகின்றார்கள்.

தன்வந்திரி முதல் தமிழ் நாட்டுச் சித்தர்கள் வரை பெருங்காயத்தைத் தங்கள் வைத்திய முறையில் கையாண்டிருக்கின்றனர். ஆயுர்வேத வைத்தியத்திலும், சித்த வைத்தியத்திலும், யூனானி வைத்தியத்திலும் மாத்திரம் பெருங்காயம் கையாளப்படும் பண்டம் அன்று. ஆங்கிலேயர்களும் பெருங்காயத்தைத் தங்கள் முறையில் கையாண்டு வருகின்றனர்.

பல நூற்றாண்டுகளாகப் பயன்பட்டு வரும் பெருங்காயத்தின் மருந்துக் குணத்தை இனி நோக்குவோம். பெருங்காயம் ஜீரணசக்தியை அதிகரிக்கச் செய்யும். நரம்பு நாடிகளின் படபடப்பைத் தணிக்கவும், ஜீரணக் குடல், வயிறு இவைகளிலுள்ள புளிப்பை அடித்து வாயுவை வெளிக் கிளப்பி, வயிற்று வலியைத் தணிக்கவும், சுவாசக் குழலில் உள்ள அடைப்பை நிவர்த்தி செய்யவும் பெருங்காயம் ஏற்ற மருந்து. தாது நரம்புகளுக்குப் பலத்தைக் கொடுப்பதும் பித்தாசயத்தின் செய்கையை அதிகப்படுத்துகிறதும், இருதயத்தைப் பலப்படுத்துகிறது பெருங்காயத்தின் மற்றக் குணங்கள். மலமிளக்கும் தன்மையும் பெருங்காயத்திற்குண்டு.

கைக்குழந்தைகளைக் கொல்லும் குணம் படைத்த கக்குவானைப் போக்கக் கைகண்ட மருந்து பெருங்காயம். முதியவர்களை மூச்சுத் திணற அடிக்கும் ஆஸ்த்துமா, பிராங்கைட்டிஸ் (Bronchitis) என்னும் சுவாச நோய்களுக்கும் பெருங்காயம் நல்ல மருந்து. இதமான சுவாசம் வரச்செய்ய இவ்வியாதிகளுக்குப் பெருங்காயத்தைப்

பொரித்துப் பொடி செய்து கொடுக்கலாம். பொரிக்காத பெருங்காயம் வாந்தியை உண்டுபண்ணும். பச்சையாகப் பெருங்காயத்தைக் கொடுக்க வேண்டுமானல் கருப்பட்டி - பனை வெல்லத்தில்-வைத்து மாத்திரை போல் செய்து கொடுக்கவும்; அல்லது பச்சையான பொரிக்காத பெருங்காயத்தை 1 பயின்டு வெந்நீரில் ஐந்து டிராம் எடையை உரைகல்லில் உறைத்துக் கலக்கித் தெளிந்தபின் குளிரவைத்துக் கொடுக்கக் குணமாகும். ஒரே தடவையில் அவ்வளவையும் கொடுத்துவிடக் கூடாது. ஒன்று அல்லது இரண்டு டேபிள் ஸ்பூன் அளவே உட்கொள்ளலாம்.

ஹிஸ்டீரியாவுக்கும் (Hysteria), வயிற்றுப்பசத்திற்கும், சுவாசத் திணறல்களுக்கும் பெருங்காயம் பெருத்த குணந்தருகின்றது. மயக்கத்தை மாற்ற, சித்த பிரேமையைப் போக்க இது ஏற்ற மருந்து.

வயிற்றுப் பொருமலால் குழந்தைகளுக்கு ஏற்படும் கணை இழுப்பு, இசிவு மாந்தக் கோளாறு முதலியவற்றிற்குப் பெருங்காயத்தைக் கரைத்த திரவத்தை எனிமா கொடுக்கிறார்கள். 1 பயிண்ட் தண்ணீரில் 2 டிராம் பெருங்காயத்தைக் கரைத்து எனிமா கொடுக்க உபயோகிக்கின்றனர். பித்த வாத ஜுரம் (Thyphoid Fever), காலரா, வலிப்புகள் முதலியவற்றிற்கும் பெருங்காய நீர் எனிமா கொடுக்கப்படுகின்றது. மாந்தம், கணைச்சூடு முதலியன பீடித்த இளைத்த குழந்தைகளுக்கு இந்தக் கரைசலில் ஒரு டீஸ்பூனேடு கொஞ்சம் ஓமத் தண்ணீரையும் கலந்து கொடுக்க நாளடைவில் நோய் நீங்குகின்றதென்று வைத்தியர்கள் கூறுகின்றார்கள். பெருங்காய நீர் எனிமா குழந்தைகளுக்குள்ள கீரைப் பூச்சி, பட்டைப் பூச்சி முதலிய பூச்சிகளை நீக்கி வயிற்றையும் மலக்குடலையும் நன்கு சுத்தம் செய்துவிடுகின்றது. கக்குவானல் சிரமப்படும் குழந்தைகளுக்கும் நெஞ்சுச் சளியாக உறைந்துகொண்டு சுவாசத்தைத் தடுக்கும் ஜலதோஷத்திறகும் பெருங்காயப் பிளாஸ்த்ரியைத் துணியில் தடவிக்கட்ட நல்ல குணம் ஏற்படுகின்றது.

பல்லில் வலி ஏற்பட்டு கஷ்டப்படுவதை பெருங்காயமும் அபினும் கலந்த கலவையைக் குமட்டில் அடக்கிக்கொண்டு போக்குகின்றார்கள். கண்ணேய் ஒன்றிற்கு ஐந்து அரிசி எடை (5 grains) பெருங்காயத்தை ஒரு டிராம் தண்ணீரில் குழம்பாகக் கரைத்து மூக்கிற்குள் ஒரு சொட்டு விட்டுக்கொள்கின்றனர். பெருங்காயம், சூடம், அபின், மிளகு முதலியன சேர்ந்த கலவை காலராவை நிறுத்தும் வல்லமையுடையது.

குழந்தை பிறந்ததும் சிலருக்கு உதிரம் காணுவது குறைந்துவிடும். அக்கெடுதலைப் போக்கப் பெருங்காயத்தைப் பொரித்து எடுத்துப் பூண்டுடன் சேர்த்து நசுக்கிப் பனைவெல்லத்திற்குள் வைத்துக் கொடுக்கின்றனர். இவ்வாறு ஒவ்வொரு நாள் காலையிலும் கொடுக்கக் குணம் காணும். வாயுப் பிடிப்பு, இருந்தாற்போல் இருந்து எங்கேயாவது ஓரிடத்தில் குத்துவலி எடுப்பது, கழுத்துப் பிடிப்பு, நரம்புக் கோளாறுகள் முதலிய நோய்களுக்கு முழு உளுந்துக் கஷாயத்தில் பெருங்காயத்தைப் பொரித்துக் கொடுக்கின்றார்கள். இவ்வாறு செய்தால் வாயு சம்பந்தமான வலிகள் தீர்ந்துவிடுவதாகச் சக்கரதத்தா என்கின்ற ஒரு வைத்திய நிபுணர் கூறுகின்றார்.

உண்ணும் உணவைச் சுவையுள்ளதாக்கி, உடலின் நோயையும், மனே வியாதியையும் தீர்க்கும் சஞ்சீவியாய் விளங்கும் பெருங்காயம்,பேருக்கேற்ற புகழ் வாய்ந்ததே. இந்தச் சஞ்சீவியைச் சமையலில் சேர்த்துவரும் நம் நாட்டவரின் அறிவுத் திறனை போற்றாது புகழாது இருத்தற்கியலுமோ?

உயிர் வாழ்வின் தோற்றம்

திரு. ப. இராமலிங்கம், B. Sc.

உயிர்த் தோற்றம் உலகில் எப்பொழுது, எங்கே ஆரம்பமாயிற்று என்ற பிரச்சினை பல ஆண்டுகளாகவே இருந்து வந்துள்ளது. விளக்க முடியாத பிரச்சினைதான். ஆனால், அதன் முக்கியத்துவத்தை நோக்குங்கால் அதைப்பற்றி ஆராயாமலும் இருக்க முடியாது. அதன்மேல் சிந்தனை செலுத்துவதும் வீண்போகாது.

முதலில் கடந்த காலத்தில் அதைப் பற்றிய ஆராய்ச்சி எப்படி இருந்தது என்று பார்ப்போம். முற்காலத்து அறிஞர்கள் பொருள்களை உருவாக்கும் சக்தி ஒன்று உண்டு என்பதை முழுவதாக நம்பி யிருந்தார்கள். ஒரு காலத்தில் உயிர்வாழ்ந்து பின் இறந்தவற்றின் சடலங்கள் காலக்கிரமத்தில் இயற்கைக்குட்பட்டுக் கல்லாகி விடும் அல்லது அவற்றின் வடிவங்கள் அப்படியே பாறைகளில் பதிந்துவிடும். அவைகளுக்குப் பாசில்கள் (Fossils) என்று பெயர். இம்மாதிரியான பாசில்களை அவர்கள், அப்போது தங்களைச் சுற்றி வாழ்ந்தவற்றோடு ஒப்பிடும்போது உருவத்தில் ஒத்திருப்பதைக் கண்டார்கள். எனவே கல்லாகி விட்டவைகள் உருவாக்கும் சக்தியிலிருந்து பாறைகளில் தோன்றி வளர்ந்திருக்க வேண்டுமென்றும், அப்படி உருவானவைகள் பாறைகளினின்றும் வெளிப்பட்டு உயிர் வாழ்வனவோடு ஒன்றி வாழாமல் பாறைகளிலேயே அடைபட்டுக் கல்லாகவே தங்கள் வளர்ச்சியைப் பெற்றன. வென்றும் அனுமானித்தார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பௌதிக விஞ்ஞானிகளான கெல்வின் (Kelvin), ஹெல்ம்ஹோல்ஸ் (Helmholtz) போன்றவர்கள் உயிரின் மூலம் ஏதாவதொரு கிரகத்திலிருந்து நமது பூமிக்கு வந்திருக்கவேண்டுமென்று ஊகித்தார்கள். அப்படி வந்த உயிரானது வானில் சிதைந்து வீழும் நட்சத்திரங்களின் வெடிப்பிலிருந்து கிளம்பி பல ஆபத்துக்களினின்றும் தப்பி வான் வழியாகப் பூமியை அடைந்திருக்கவேண்டும் அல்லது சூரிய ஒளி வழியாக வந்திருக்க வேண்டும். மேலே சொல்லப்பட்டவைகள் வெறும் அனுமானங்களே. நமது ஆராய்ச்சிக்கு நல்ல வேளையாக வேறோர் வழி இருக்கிறது. அதன் மூலம் ஆராய்வோம்.

முன்னால் குறிப்பிட்ட பாசில்களின் வரலாற்றை ஆராயுங்கால் மனித இனத்திலிருந்து பாலுண்ணிகளுக்கும், பாலுண்ணிகளிலிருந்து ஊர்வனவற்றிற்கும், ஊர்வனவற்றிலிருந்து நீர், நில வாழ்வனவற்றிற்கும், அவைகளிலிருந்து மீனினத்திற்கும், மீனினத்திலிருந்து முதுகெலும்பற்ற பிராணிகளுக்கும் நம்மைப் பின்னோக்கி இழுத்துச் செல்லும் ஓர் அட்டவணை உருவாகிறது. இவ்வட்டவணையின்படி முதலில் முதுகெலும் பற்ற பிராணிகள் தோன்றிப் பின் அவைகளிலிருந்து முறையே மீனினமும், நீர், நில வாழ்வனவும், ஊர்வனவும், பாலுண்ணிகளும், கடைசியாக மனிதனும் ஒன்றிலிருந்து மற்றொன்றாக இயற்கைக் குட்பட்டு வளர்ந்திருக்கவேண்டும். எனவேதான், இவ்வெளிய முதுகெலும்பற்ற பிராணிகளுக்கு, முதற்றோன்றிப் பிராணிகளென்று (Protozoa) பெயர் ஏற்பட்

டது. செடிகளுக்கு ஆல்காக்கள் (Algae) அல்லது கடற் பாசிகள் (Sea-weeds) என்று பெயர் ஏற்பட்டது.

மேலே சொல்லப்பட்ட முதலிற் றோன்றிய சிறு பிராணிகளும், செடிகளும் முதன் முதலில் தனித்த ஓர் உயிரணுவை உடையனவாய் அணுப் பெருக்கியின் (Microscope) உதவியின்றிக் கண்ணுக்குப் புலப்படாத அத்தகைய மிகச் சிறிய உருவத்தை உடையனவாய்த் தங்கள் வாழ்க்கையை ஆரம்பித்திருக்க வேண்டும். இதை நிரூபிக்க: உயிர்வாழ்வன எதுவானாலும் சரி, அவற்றின் அங்கக் கட்டுள்ள பொருளை (tissue) பெருக்காடியின் உதவிகொண்டு ஆராயின், அதில் உயிரணுக்கள் பல அடங்கியிருப்பதைக் காணலாம். அவ்வுயிரணுக்கள் ஒவ்வொன்றும் தனித்த ஓர் உயிரணுவை உடைய உயிர் வாழ்வனவற்றை ஒத்திருக்கும்.

இனி இந்த உயிர் வாழ்வனவற்றின் அமைப்பு எத்தகையது எனக் கவனிப்போம். ஆராய்ச்சிச் சாலையில் உயிருள்ள சிறு பிராணிகளை நாம் கவனித்து வந்தால் அவைகள் எப்படி உண்டு, வளர்ந்து தங்கள் இனத்தை உற்பத்தி செய்கின்றன என்பது தெரியவரும். ஆனால், அவைகள் எத்தகைய பொருட்களால் ஆக்கப்பட்டிருக்கின்றன என்பதை ஆராய அவைகளின் உள்நீரைச் (Protoplasm) சோதிக்க வேண்டும். அப்படிச் சோதிக்கும்போது அதனுள் ளடங்கியுள்ள பொருள்களெல்லாம் நமது ஆராய்ச்சிச் சாலையில் உண்டாக்கப் பெறும் இரசாயனப் பொருள்களைப் போல—ஆனால் மிகவும் சிக்கலான கூட்டுக் கலப்புடன் ஆக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அவைகள் முக்கியமாகக் கொழுப்புகள் (Fats), கார்போஹைட்ரேட்டுகள் (Carbolydrates,) புரோட்டீன்கள் (Proteins) ஆகும். இப்பொருள்களெல்லாம் உணவின் இன்றியமையாத மூலப் பொருள்களாகும். உணவானது பிராணிகள் உயிர்வாழ மட்டுமன்றி அவைகள் எந்த உயிரணுக்களால் ஆக்கப்பட்டிருக்கின்றனவோ அவைகளின் மூலமும் ஆகும். மேலே குறிப்பிட்ட பொருள்களெல்லாம் கரி (Carbon), நீரகம் (Hydrogen), உயிரியம் (Oxygen) இவைகள் அடங்கப்பெற்ற அங்ககப் பொருள்களாகும் (Organic substances).

உயிர் வாழ்க்கை தோன்றுவதற்கு முன்புகூடத் தற்போது காணும் கடலும், வாயுக்கள் நிறைந்த ஆகாயமும், ஒரு காலத்தில் சூடாகவிருந்து தற்போது குளிர்ந்துகொண்டிருக்கும் பூமியும், முக்கியமாகக் கரி, கால்சியம் (calcium) எரியம் (phosphorus), போன்ற இரசாயனப் பொருள்களைத் தங்களிடத்தே கொண்டிருந்தன. நிலம், திரவப் பொருளான கடல், வாயுப் பொருளான ஆகாயம் ஆகிய மூன்று சாதனங்களும் சூரியனிடத்திலிருந்து வரும் வெப்பம் அல்லது ஊதா மேற்கதிர்களின் (ultra-violet rays) ஆட்சிக்குட்படும்பொழுது இரசாயனச் சேர்க்கை ஏற்படலாமல்லவா? அப்படி ஏற்படுவதைத் துரிதமாக்க ஒரு ஊக்கி (catalyst) சமயம் வாய்த்தபோது தனது வேலையைச் செய்திருக்க வேண்டும். அதன் முடிவாக நீரில் சிறிய உருண்டையான குமிழ் ஏற்பட்டிருக்கவேண்டும். குமிழின் வெளிப்பக்கம் நொய்ம்மையாய் ஆனால் ஒரே சீராய், திரவம், காற்று, முக்கியமாகச் சூரிய ஒளி இவைகள் அதன் வழியாய ஊடுருவிச் செல்லக் கூடியதாக இருந்திருக்க வேண்டும். இவ்விதம் ஏற்பட்ட இக்குமிழிதான் உயிருள்ள குமிழியாய் வளரவும், ஒரு அளவு வளர்ந்ததும், இரண்டாகப் பிரியவுமான நிலைக்கு உட்பட்டிருக்க வேண்டும். இம்மாதிரி ஏற்பட்ட குமிழிகள்தான் காலக்கிரமத்தில் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு நாம் இன்று காணும் தனித்த ஓர் உயிரணுவையுடைய எளிய உயிர் வாழ்வனவாக விருத்தியாகி இருக்கவேண்டும்.

*

விளக்கமும் விடைகளும்

பொருட்காட்சி ஒன்றில் ஒரு சாதாரணமான பம்பரத்தைச் சுற்றிவிட்டபோது சுழன்றுகொண்டிருந்த பமபரம் நின்று மறுபடியும் சுழல் ஆரம்பிக்கிறது. கடைசியில் வழக்கம் போல ஓய்ந்து தரையில் உருண்டு விடுகிறது. இதை எவ்வாறு விளக்குவது ?

இது ஒரு கண்கட்டி வித்தை. ஏன், சினிமாவில் மின்சார விசிறி, மோட்டார் சக்கரங்கள் முதலியவை இவ்வாறு செய்வதைப் பார்த்திருக்கலாமே. தொடர்ந்ததாயில்லாமல் விநாடிக்குப் பல தடவை விட்டு விட்டு ஒளியுண்டாகும் குழாய் விளக்குப் போன்ற விளக்குகளை இந்த இடத்தில் பொருத்தி இருப்பார்கள்.

பம்பரத்தின் மேல்புறம் நன்கு தெரியும்படியாக ஒரு கோடு அல்லது புள்ளியை அடையாளமாகக் குறித்திருப்பார்கள். சுழலும் போது பம்பரம் 360 டிகிரி சுற்றினால் அது ஒரு சுற்று. ஒரு முறை ஒளி தோன்றும் போது ஒரு குறிப்பிட்ட இடத்தில் அடையாளம் இருப்பதாகக் கொள்வோம். ஒளி மறைந்து மறுபடியும் உண்டாவதற்குள் பம்பரம் 361 டிகிரி சுற்றுவதாக வைத்துக்கொண்டால் இப்போது நம் கண்கள் பார்க்கும் போது புள்ளி சற்று முன் நகர்ந்திருக்கும். அடுத்து ஒளி யுண்டாகும் போது புள்ளி இன்னும் சற்று முன்நோக்கி நகர்ந்து தெரியும். இதனால் புள்ளி முன்நோக்கிச் சுற்றுவதுபோலப் புலப்படும். பம்பரத்தின் வேகம் குறையக் குறையப் புள்ளி முன் நோக்கி நகரும் அளவும் குறைந்து அதன் வேகம் குறைவது போலத் தெரியும். ஒவ்வொரு முறையும் ஒளி படுவதற்குள் 360 டிகிரி வீதம் சுற்றும் போது புள்ளியும் அதே இடத்தில் நிலைப்பது போலத் தோன்றும். பம்பரத்தின் வேகம் 359 டிகிரி சுழலும் போது புள்ளி மறுபடியும் சுற்ற ஆரம்பிப்பது போலப் புலப்படும். பம்பரத்தின் வேகம் குறையக் குறையப் புள்ளி புலப்படும் இடமும் அதிகம் பின் தள்ளிக் கொண்டே போவதால் இப்போது புள்ளி சுற்றும் வேகம் அதிகரிப்பது போலத் தெரியும். பம்பரம் சுழலும் போது நிற்கவும் செய்யாது, மறுபடியும் சுழலாது. உண்மையில் அதன் வேகம் குறைகிறது—கடைசியில் உருண்டோடி விடுகிறது.

ஒளி பட்டபோது கண்ணில் படும் காட்சி அது மறைந்த பின்பும் ஒரு கணம் கண்ணினுள் தங்கி நிற்பதால் (persistence of vision), மறுபடியும் ஒளி படும் போது புலப்படும் காட்சியோடு தொடர்ந்து தெரிகிறது — குழாய் விளக்கின் ஒளியும் தொடர்ச்சியானது போலத் தோன்றுகிறது. இவ்வாறு ஒளி கண்ணை ஏமாற்றாமல் தொடர்ந்த வெளிச்சத்தை உண்டாக்கும் டார்ச் விளக்கு அல்லது சாதாரண மின்சார விளக்கொளியைப் பம்பரத்தின் மீது அடித்தால் நம் கண் நம்மை ஏமாற்றாது; குட்டு வெளிப்பட்டு விடும்.

*

சமையலில் மிளகாயின் உபயோகத்தை மிகவும் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இது எதனால் ?

கூடுமான வரை குறைந்த அளவில் மிளகாயைச் சேர்த்துக் கொள்வதில் கெடுதலில்லை. இதிலுள்ள முக்கியமான பொருள் கேப்ஸெய்ஸின் (capsaicin) என்பது. குறைந்த அளவில் இது ஜீரண உறுப்புகளைத் தூண்டவும் செய்யும். அளவுக்கு மிஞ்சினால் ஜீரண உறுப்புகளில் அழற்சியை உண்டாக்கும்.

தேரை

திரு. கோ. வ.

அகத்திய முனிவரின் மாணாக்கருள் தொல்காப்பியர் எவ்வண்ணம் இலக்கணத்திற் சிறந்தவரோ அதுபோல மருத்துவத்திற் சிறந்தவராய் விளங்கியவர் தேரர் என்பவராவர். அவருக்குத் தேரையார் என்ற ஒரு பெயரும் உண்டாம். இப்பெயரையொட்டி ஒரு கதை வழங்குகிறது. நெடுநாளாய் அகத்திய முனிவரிடம் ஒரு நோயாளி மருந்துண்டு வந்தார். ஆனால், அவருடைய நோய் நீங்கவில்லை. இச்செய்தி தேரருக்கு எட்டியது. உடனே அந்நோயாளியைத் தம்பால் அழைத்துத் தாம் மருந்து கொடுக்கத் தலைப்பட்டார். இவருடைய மருந்துகளும் பயனற்றுப் போகவே தேரர் மனங்கலங்கினார். திடீரென்று ஓர் எண்ணம் உதித்தது: அதன்படியே அம்மனிதனின் மண்டையோட்டைத் திறந்து அவனுடைய மூளையை ஆராய உறுதிகொண்டார். அவனுக்கு வலி உணர்ச்சி காணா வண்ணம் ஒரு மருந்தை உட்கொள்ளக் கொடுத்து, மண்டையோட்டைப் பிளந்தார். உள்ளே ஒரு தேரையிருக்கக்கண்டு வியந்தார்.

இத்துடன் நமது கதையை முடித்தோமானால், நம் நாட்டுப் பண்புக்கு விலக்காகாது. கற்றவராயினும் மற்றவராயினும் நாம் இத்தேரைக் கதையைப் போன்றவற்றை விழுங்க முன்னிற்கின்றோம். அத்தேரை நம் அறிவை விழுங்குகின்றது. எத்தனை தடவை நாம் இது போன்ற கதையை நம் வாழ்க்கையில் கேட்டிருக்கின்றோம்! ஏன்? தேரை துள்ளிக் குதித்து வந்ததைக் கண்டதாகவும், அது தம்மேல் தத்தி விழுந்ததாகவும் சொல்லியவர்கள் பலர் நம் மனக்கண்முன் தோன்றுகின்றார்கள்.

உண்மைக் கதை என்ன? தேரை ஓர் அருமையான மருத்துவக் கலைச்சொல். மூளை, கருப்பை, குடல் இவ்விடங்களில் நோயால் வளரும் 'ட்யூமர்' என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் கட்டிக்கு நேரான பொருள் கொண்ட தமிழ்ச்சொல் தேரை என்பது. 'கல்லினுட் தேரைக்கும்' என்ற முதிய சொற்றொடர் ஆழ்ந்து மனத்திற் பதிந்த நம் நாட்டு மருத்துவர்கள் இந்தச் சதை வளர்ச்சிக்குத் தேரையெனப் பெயரிட்டனர் போலும். நாமோ சொல்லின் பிறப்பையும் அழகையும் பொருட்செறிவையும் மறந்து, அறிய வழியுமின்றி, அறிவுமின்றி மடமையால் தேரை குதித்து வந்ததாகக் கதையைப் பரப்புகின்றோம்; நம்புகின்றோம். இதுவே இறைவனின் திருவிளையாடலென்றும் அவனையும் நம்மறிவிற்கு ஒப்பானவனாக்குகின்றோம்.

நம் நாடு கிளாஸ்கோ நகரத்தைப் போன்றது. அவ்வூர் தொழிற்சாலைகள் நிறைந்தது. இரவும் பகலும் அவை கரிப்புகையைக் கக்கியபடியிருக்குமாம். வானும் இச்செயற்கை மேகத்தால் எக்காலமும் மூடுண்டிருக்கும். இவ்வான் இக்கரும்பனியை இடைவிடாது வழங்கும். நகரில் ஒரு சுவர்கூட வெள்ளையாயிருக்காது. தூய உடை கால் நாழிகைகூடத் தன் வண்ணம் கொண்டிருக்காது. எல்லாம் கரிபடிந்துவிடும். அப்படித்தான் நம் நாடு . ஆனால் இங்குக் கரியாய் விளங்குவது மூடநம்பிக்கையென்பது. யாரும் இதற்கு விலக்கில்லை. அறிவியல் நூற்கலைஞன் தன் அறிவைக் கோலித் திரையிடலாம்; இறுக அடைப்புகள் போட்டிருக்கலாம்; அவ்வப்போது தட்டித் துடைத்தும் வைக்கலாம். ஆனால் தப்ப முடியாது. தேரையைக் கண்டதாகச் சொல்லாவிட்டாலும், ஒரு பெரியார் உயிர்நீத்த பொழுது வானினின்று கோள் ஒன்று வீழ்ந்ததைக் கண்டதாகச் சொல்லுவான். இதுதான் வேற்றுமை.

இதனின்று விடுதலையடையும் நாள் எந்நாளோ!

★

‘இயற்கையன்னையின் நரை’ திரு. எஸ். ஆர். ராஜகோபால்.



திரு. பி. ரங்கநாதன்.

பட்டணம் அழுகிறது......



திரு. சந்தாமியான்.

......பட்டிக்காடு சிரிக்கிறது

330 டன் நிறையுள்ள ஒரு மோட்டாரின் சுழல் (Rotor) படத்தில் காணப்படுகிறது. இதன் உதவியால் ஒரு நிமிஷத்தில் 720,000 காலன் தண்ணீர் இறைக்கலாம்.



'அவள் காட்டிய வழி' என்று கலைக்கதிரில் முன்னே ஒரு கதை வெளிவந்திருக்கிறது. அந்தக் கதையில், காசு பெரிதென்று சொல்லி, ஏழைக் கலைஞனாகிய ராமமூர்த்தியைக் கைவிட்டுப் பணத்துக்காக ஜமீன்தார் கிருஷ்ணசாமியைத் திருமணம் செய்துகொள்கிறாள், நிர்மலா. அவள் காட்டிய வழியில் உலகின் கொடுமையைக் கண்டு அனாதையாகத் திரிகிறான் கலைஞன்......... அனாதை ராமமூர்த்தி பெருஞ் செல்வனாகிறான் இந்தக் கதையில். ஆனால், எப்படி...?

மனத்தின் சமாதியிலே...

'குரு'

திரைப்பட உலகின் கனவுக் கன்னி, நடிப்புலகின் தவப்பயன், இளைஞர் உள்ளத்தைப் பிழிந்தெடுக்கும் அழகி, கிழவரைக் குமரராக்கும் காயகல்பக் கண்ணி என்றெல்லாம் அவளைப்பற்றித் திரைப்படப் பத்திரிகைகள் எழுதின. அவ்வளவு புகழுக்கும் அவள் தகுதியுடையவளா என்பதைப்பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை; ஏனென்றால், நம்மைப் பொறுத்தவரையில் இப்போதைக்குப் அதை விடப் பெரிய கவலை காத்திருக்கிறது.

புகழும் பொருளும் படைத்த அந்தச் சினிமா நட்சத்திரத்துக்குப் பொழுது போகவில்லை. ஏன் என்று என்னைக் கேட்காதீர்கள். அவளுக்குப் பொழுது போகாமல் இருந்ததால் தான் இந்தக் கதையை எழுதும்படியான நிலைமை ஏற்பட்டது. வழக்கம்போல், பொழுது போகாத திரைப்பட விசிறிகள் அவளைச் சுற்றிலும் சுழன்று கொண்டிருக்குமானால், நமக்கு இந்தக் கவலை ஏற்பட்டிருக்காது......

குயிலி—ஆமாம் அவள் பெயர் அது தான்—எப்படியோ தனித்திருந்தாள்; பொழுது போகவில்லை.

நம்மையறியாமலேயே சில சமயங்களில் பிறருக்கு உதவி செய்துவிடுகிறோம். அதுபோலத்தான் குயிலி அன்று ஒரு காரியத்தைச் செய்துவிட்டாள். போக மறுத்த பொழுதைக் கொன்று தொலைப்பதற்காக வானொலிப் பெட்டியைத் திறந்துவிட்டாள். அதனுடைய விளைவு, முன்பின் அறிமுகம் இல்லாத ஒருவன் பெரிய லட்சாதிபதியாக மாற வேண்டியதாகி விட்டது.

அவள் கேட்ட வானொலி நிகழ்ச்சி:

எங்கிருந்தோ வரும் ஒலி :

கவிஞனே, காதல் காதல் என்று ஏன்
இன்னமும் கிடந்து புலம்பிக்கொண்டு
கிடக்கிறாய்? அவள் காட்டிய உலக
வழி இன்னுமா உனக்குத் தெரியவில்லை?

கவிஞன் :

நெஞ்சத்தின் உள்ளிருந்து
கொஞ்சுகின்ற தெய்வதமே!
நஞ்சொத்த நெஞ்சத்தாள்
நானிலத்தார் ஏற்பதொரு
பொதுவழியைக் காட்டிவிட்டாள்;
புரிந்துகொண்டேன், ஆனாலும்
குதுகுதுக்கும் அமுதநெறி,
கொள்ளை கொளும் பெருஞ்சுவை,
குருடருக்கும் கண்ணொளியாய்ச்
செவிடருக்கும் தேனிசையாய்
இருக்குமொரு மோகத்தின்
இருள் மயக்கம் தீரவில்லை.

மேலும்,
ஈரத்தைத் துடைத்தெடுத்து
ஈவிரக்கம் கொன்றுவிட்டுக்
கோரத்தைப் பிறர்க்காக்கும்
குவலயத்தில் குரலெழுப்பி
உண்மைநெறி உரைப்பேனேல்
ஒருபயனு மில்லையன்றோ

இதய ஒலி :

உண்மை நெறிமாய்க்கும்
உலுத்தனுய்ப் போவதற்கோ
கலைமகள்தன் செல்வக்
கான்முளையாய்த் தோன்றினை நீ

கவிஞன் :

கலைமகளின் காவியத்தை
விலைப்பொருளாய் மதித்துவரும்
நிலவுலகில் நீதியெங்கே,
நேர்மையெங்கே? மேலும்
கலைஞனுக்கும் கும்பிக்
கொதிப்புண்டு; தின்னக்
கவிதை யுதவாது;
கலைதானும் சாலாது.
கவிதை பிறர்க்காக்கிக்
காசைத் தனக்காக்கிக்
கலையை நிறைபோட்டு
விலைமகளாய் மாறிக்
கலைமகளை அங்காடிச்
சந்தையிலே காட்டிவைத்துப்
பிழைக்கும் வழிதவிரப்
பிழையில்லா வழியில்லை

இதய ஒலி :

உழைத்துப் பிழைக்கின்ற
உயர்வாய நெறியுண்டே!
உடலைப் பிழிந்தெடுத்து
உடலை வளர்த்துவரும்
கடவுட் பெருநெறியைக்
கைக்கொள்ளக் கூடாதோ?

கவிஞன் :

பிறந்த பிறப்பாலும்
வளர்ந்த வளர்ப்பாலும்
நிறைவாம் நெறியுணர்ந்து
சிறந்த படிவாழ
உடலம் வளைத்துக்
குடலதனை நிறைத்துவிடும்
சடலப் பிறப்பெனக்குச்
சற்றும் பொருந்தமிலை

இதய ஒலி :

எவனோ உழைத்துவர
எப்படியோ வருகின்ற
புவனப் பெருஞ்செல்வப்
பொருட்பயனைத் துய்க்கின்ற
இழிதகையோர் பழிநெறிக்கோ
இச்சித்தாய் நீயும்?

கவிஞன் :

பழியில்லா வாழ்வின்
பண்பென்ன என்றெல்லாம்
வாய்ப்பந்தல் போட்டுவிடும்
வகையெனக்கும் தெரிந்ததுதான்
ஆனால்,
இதயத்தி னுள்ளிருந்து
எனைக்குத்திச் சுட்டுவரும்
இதந்தெரியாத் தெய்வதமே!
எனைநீயே முதல்கேட்ட
கேள்வியினை நினைப்பூட்டிக்
கேட்கின்றேன். விடைசொல்வாய்.
பாழ்பட்ட நெறியேகும்
பாழுலகின் மூச்செல்லாம்
பணம்பணமே இன்றேல்
பிணம்பிணமே யன்றோ?
பணம் வேண்டும் என்றன்
கொதிப்படங்கி வாழ.
பணத்தாலே நிணம்போற்றிப்
பணத்தாலே வாழ்ந்து
பணமற்ற காலத்தில்
பிணமாக ஓய்ந்து
வந்தவழி பார்த்து
வாழ்விழந்து மாய்வதென
இந்த நிலைக்காளானேன்
இதிலென்ன தவறுண்டு?

இதய ஒலி :

பணம்பணமே இன்றேல்
பிணம்பிணமே என்ற
குணமற்ற கொள்கை கொண்ட
குமரியனைக் கொன்றுவிட்டாள்.
இப்போது குரல்கொடுக்கும்
இச்சடலம் செத்த
பிணமன்றி வேறில்லை
பேதைக் கவிஞனே!
குணங்கொன்றார் வாழ்வினையும்
கொன்றவரே யாவார்கள்

கவிஞன் :

குணம்வேண்டேன் கேளாய்,
குவலயத்தில் வாழப்
பணம்வேண்டும் பணமன்றிப்
பணம்வேண்டும் மேலும்

பணம்வேண்டும். சாலப்
பணம்வேண்டும் என்றும்.
குணம்வேண்டும் என்ற
கொள்கை நிலைக்குங்கால்
கொலைக்கவிதை விட்டுக்
குணக்கவிதை சொல்வேன்.
விலைக்கேற்ற சரக்கேற்றும்
வெறும்வணிகர் போலே
விலையாகும் கலைபடைத்து
வெறும்வயிறு போற்றும்
விலைக்கலைஞன் யானாவேன்.
வீறுடைய கவிவேண்டில்
உலகத்தைத் திருத்துகின்ற
உறுபணிக்கே செல்இனிமேல்
பலவாறு குத்தியெனைப் பதம்பார்க்க
வாராதே

இதய ஒலி :

செத்த சடலத்தைச்
செகத்தில் சுமந்துவரும்
சொத்தைக் கவிஞனே!
சொல்வதனைப் புரிந்துகொண்டேன்
உனைச்சொல்லக் குற்றமில்லை;
உலகத்தை இனிக்கேட்பேன்
நினையின்னும் ஒருகேள்வி
நினைப்பறிந்து கேட்கின்றேன்

கவிஞன் :

தடையில்லை கேட்கத்
தயங்காமல் கேட்பாய்
விடையென்பால் உண்டேல்
விளக்கத் தடையில்லை.

இதய ஒலி :

சோற்றையே தந்துனக்குச்
சொர்க்கத்தைத் தந்ததுபோல்
பீற்றித் திரிகின்ற
பேருலகை ஏமாற்றச்
சாற்றும் கவிஎன்ன
சற்றே விளக்காயோ?
எற்ற வழிதெரிந்தே
ஏமாற்ற வல்லவனோ?

கவிஞன் :

பணம்பற்றிப் பேசேன்.
குணக்குன்ற மாகுமெனக்
கணம்பற்றிப் பிணமாக்கும்
காதலினைத் தெய்வமென்பேன்
என்னையிவண் ஏமாற்றி
ஏமாளி யாக்கிவிட்ட
மண்ணுலகை ஏமாற்றி
மாண்பெல்லாம் நானடைவேன்

வானொலி அறிவிப்பாளர்: நடைபெற்றது ஒலி நாடகம். எழுதியவர் ராமமூர்த்தி.

ஒலி பரப்பு முடிவதற்கும் திரைப்பட முதலாளி செல்வதுரை வந்துசேர்வதற்கும் சரியாக இருந்தது. வானொலிப் பெட்டி மூடப்பட்ட தாயினும் குயிலியின் மனம் தான் கேட்ட நாடகக் கவிதையின் கருத்திலே தோய்ந்து கிடந்தது. அவளுடைய சிந்தனை தோய்ந்த முகம் செல்வதுரைக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. இன்பமாகப் பொழுதுபோக்கி, ஏமாந்தார் கொடுத்திருக்கும் காசைக் கரியாக்கும் வித்தையைத் தெளிவாகப் பயின்றிருக்கிற செல்வதுரை இந்த 'உம்மணா மூஞ்சி'யைப் பார்க்கவா வந்தான்?

"குயிலி, என்ன ஒரே ஆழ்ந்த யோசனையில் ஆழ்ந்துவிட்டாயே? இந்த மாதிரியான போக்கு நம்முடைய உடம்புக்கு ஒத்து வராதே?" என்று செல்வதுரை தன்னுடைய தத்துவத்தை விமரிசனம் செய்யத் தொடங்கினான்.

ராமமூர்த்தியின் கவிதைத் தத்துவத்தைக் கேட்டிருந்த குயிலிக்கு இந்தச் செல்வதுரையின் தத்துவ உளறல் பிடிக்கவில்லை. ஆனாலும், அவனைப் பகைத்துக்கொள்ள முடியுமா? அவள் கேட்டாள்:

"ஏன், சிந்தனை என்பதுகூடத் தனியுடைமைதானா? நாமெல்லாம் சிந்திக்கவே கூடாதா? சிந்திக்க முடியாதா?"

"ஐயையோ, என்ன திடீரென்று சிந்தனை கிந்தனையென்று என்னென்னவோ ஆரம்பித்துவிட்டாயே?... அது கிடக்கட்டும், நேற்று ஒத்திகையின்போது பாடினாயே, அந்தக் காதல் பாட்டைப் பாடு, கேட்கலாம். இதற்காகவே என் மனைவியிடம் பொய் சொல்லிவிட்டு, ஓடோடி வந்திருக்கிறேன். எங்கே...பாடு, கேட்கலாம்...சிந்தனை கிந்தனையெல்லாம் கொஞ்சம் மூட்டை கட்டி வை."

"மிஸ்டர் செல்வம், என் மனம் சரியாக இல்லை... இன்னொரு நாளைக்குப் பாடுகிறேன்..."

"மனம் சரியாக இல்லை யென்று உன்னைத் தேடிவந்தால், உனக்கே சரியாக இல்லை யென்கிறாயே. தலை வலிக்கிறது என்று டாக்டரிடம் போனானாம் ஒருவன்; அங்கே வைத்தியரே தலைவலி என்று புரண்டு கொண்டிருந்தாராம்... என் கண்ணல்ல, எங்கே பாடு...

தன் வாழ்க்கையில் பணம் என்றால் என்ன என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண் டிருந்த குயிலிக்கு அதற்குமேல் தடை சொல்லித் தட்டிக்கழிக்க முடியவில்லை.

காதலின் உயர்வை யெல்லாம் கதம்ப இசையில் எவனோ பாடியிருந்ததை மனம்போன போக்கில் பாடி வைத்தாள்... அப்புறம்...

2

செல்வதுரை போனபின், குயிலிக்குத் தூக்கம் வரவில்லை. ராமமூர்த்தியின் கவிதையும் அவளுடைய கடந்த கால வாழ்க்கையின் கசப்பான நினைவுகளும் மனத்தை அலைக்கழித்துத் தூக்கத்தைத் துரத்திவிட்டன.

தான் கேட்டது வெறும் வானொலி நிகழ்ச்சிதான் என்று அவள் நினைக்கவில்லை. ஏதோ ஒரு குறளி அவளைத் தூக்கிக் கொண்டுபோய் ராமமூர்த்தியின் இதயத்துக்குள் அமர்த்தியது போலவும், அந்த இதயக் குகையிலே கிடந்த அவல நினைவுகளைக் காண்பது போலவுமே எண்ணினாள்.

பல ஆண்டுகளுக்கு முன் அவளுக்கும் மனச் சாட்சி என்று ஒன்று இருந்தது. கலைப்பணி செய்வதாக எண்ணிக்கொண்டு, திரைப்பட உலகில் சேர்ந்துவிட்டாள். ஆனால், நாளடைவில், கலைப்பணி என்றால் உலகத்தை ஏமாற்ற உலகமே கற்பித்துள்ள ஒரு பெரிய ஏமாற்று வித்தை என்பதைத் தெரிந்துகொண்டாள். மனச்சாட்சியைக் கொன்ற பிறகு தான் திரையுலகின் முடிசூடா அரசியாக அவள் ஆக்கப்பட்டாள்... அன்று செத்துப்போன மனச் சாட்சி, இன்றைக்கு ராமமூர்த்தியின் கவிதையின் தீண்டுதலால் உயிர்பெற்று எழுந்துவிட்டது.

எழுந்த மனச்சாட்சி சும்மா இருக்கக்கூடாதோ? தான் சும்மா இருப்பதோ பிறரைச் சும்மா இருக்கவிடுவதோ மனச்சாட்சியின் அகராதியிலேயே கிடையாதே!

"பாவம், இந்தக் கவிஞனும் நம்மைப் போலவே கலையுலகத்தால் பழிவாங்கப்பட்டவன் போல் தெரிகிறது; கலை கலை என்று சொல்வதெல்லாம் கயவர்களின் கேளிக்கைக்கு இரை தேடும் முயற்சிதானே......

"ஆனால்,......நான்தான் பெண். உடல் வெறிகொண்ட வேட்டை நாய்களுக்கு இரையானேன்..... இந்தக் கவிஞன்...? ஆணுக்குக் கலையுலகில் என்ன கேடு வந்துவிடும்........கலையின் மீதும் இந்த உலகத்தின்மீதும் எவ்வளவு கசப்பு!

"பாவம்....நல்ல இதயம். அதனால் தான் இவ்வளவு தொல்லைப்பட் டிருக்கிறான். நானும் அப்படித்தானே அல்லற்பட்டேன்! கலை கலை என்று கல்லூரி வாழ்விலேயே தவியாய்த் தவித்தேன். அம்மா ஒருத்தி பெருந்தடையாக இருந்து என்னை நடிகையாகவிடாமல் தடுத்துவந்தாள். அவளுடைய மரணம், என் நல்வாழ்வின் தொடக்கம் என்றுகூட நினைத்தேன்! அவ்வளவு கலை வெறி எனக்கு. ஆனால்,......"

"எப்படியோ சேர்ந்தேன். உதிரி நடிகையாகவே எடுத்தார்கள். எப்படி இவ்வளவு உயர்ந்த நிலைக்கு வந்தேன்....! என் உடம்பை அடகு வைக்குமுன் இருந்த மெய்யழகு...!

அது பொய்யழகாய்—மினுக்கழகாய் ஆனபின் அல்லவா கலைக்கோயிலின் பீடத்தில் எனனை ஏற்றிவைத்தது இந்த உலகம்...!

"கலையாம் கலை! கவிஞன் ராம மூர்த்தி எவ்வளவு அருமையாகச் சொல்லிவிட்டான்!

கலையை நிறைபோட்டு
விலைமகளாய் மாறிக்
கலைமகளை அங்காடிச்
சந்தையிலே காட்டிவைத்துப்
பிழைக்கும் வழி......!

ஆமாம்! இது கலையுலகம் அல்ல. சதைக்கு விலைபேசும் சழக்கர்களின் உலகம்! கலைமகளும்....!

"ஆனால்,...... இவ்வளவு கும்மாள மிட்டுக் குதிக்கிறாயே, மனச்சாட்சியே உன்னைக் கேட்கிறேன்: இன்றைக்கு எனக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது, தெரிகிறதா?... உடம்பை ஒருவர் இருவருக்கு ஒப்படைத்தேன். அதன் விலை, உலகம் வியக்கும் ஒரு நிலையமாயிற்றே! மாளிகை, மதிப்பைச் சிறைப்படுத்தும் கொள்ளைப் பணம்......எல்லாம் போக, கலையுலக அரசி என்ற புகழ்...."

மனச் சாட்சி சிறிற்று: "விலைமகளே! கலைக்கு மாசு தரும் கயமைக்கு இடந்தந்த ஏமாளி.........! கலையின் உயிரைவிட உன் சதை வாழ்வு பெரிதென்று மதித்துவிட்டாய்! அட, சதைப் பிண்டமே!..."

குயிலி குரல் கொடுத்தாள்: "உலகத்தைக் குட்டிச் சுவராக்க உன்னைப் போல் நான்கு பேர் இருந்தால் போதும்! உன் பேச்சைக் கேட்டு ஒதுங்கியவர்கள், மூலை முடுக்குகளில் முடங்கிக்கிடக்க வேண்டியதுதான்... உன்னை நசுக்கிவிட்டால் உயர்வெல்லாம் கிடைக்கிறது....மானம் என்றும் மனம் என்றும் பேசி உலகக் கண்ணின் ஏளனப் பார்வைக்கு ஏன் இரையாக வேண்டும்? அது பேதைமை! ஏன், எனக்கு என்ன குறைச்சல்! நீ என் வாழ்விலிருந்து தொலைந்த நாள் புகழின் இமயச் சிகரம் எனக்காக வளைந்து கொடுத்த நன்னாள்... மனமே! என் வாழ்விலிருந்து செத்தாயே, அப்படியே உலகிலிருந்தே விடைபெற்றுத் தொலையக்கூடாதா? எத்தனை எத்தனை பேர்களுக்கு அழிவு வழியைக் காட்டி அல்லற்படுத்துகிறாய்......மற்றவர் செயலை இடித்துக் காட்டுகிறாயே, உன் செயலை எண்ணிப் பார்க்கக்கூடாதா? பாவம், அந்தக் கவிஞனை நரகக் குழியில் தள்ளி விட்டாயே!..."

"குயிலி! நீ கேட்பது நன்றாக இருக்கிறது! அந்த ராமமூர்த்தியும் நீயும் சரியான ஆட்கள்தான. உனக்கும் அவனுக்கும் ஒரே ஒரு வேறுபாடு... நீ என்னை எளிதில தீர்த்துக்கட்டிவிட்டாய்...எழில் தேங்கிக் கிடந்த உன் உடல் அதற்கு உதவிற்று... ஆனால், அவனுக்கு அந்த வழி பயன் படவில்லை. ஆள் அழகனதான்... ஆனால், ஆணின் அழகுமட்டும் போதாது...கவிதை கவிதை என்று கட்டிப் புரண்டால் போதுமா?......"

குயிலி பேசினாள்: "போதாதுதான். அவன்தான்பாடினானே...

கலைஞனுக்கும் கும்பிக்
கொதிப்புண்டு; தின்னக்
கவிதை உதவாது
கலைதானும் சாலாது....

ஆனால், இப்படியெல்லாம் பாடுவதைப் பார்த்தால் அவனும் உன்னைக் கொன்றுவிட்டதாகத்தானே தோன்றுகிறது! நீ இன்னுமா குதியாட்டம் போடுகிறாய்?"

"அட, பயித்தியமே ஒரு நாள் பசியில் அவன் உளறின உளறல்.... இப்படி அடிக்கடி உளறுகிறான்; அதைக் கவிதை, கலை என்று கொண்டாடி இந்த உலகம் அவனுக்கு அரை வயிற்றுக் கஞ்சி ஊற்றுகிறது...... இதிலெல்லாம் என்னை அழிக்க முடியுமா?.........அதுமட்டுமா? அவன்

பாட்டை நீ கேட்டாய்......உன்னைப் பொறுத்தவரையில் செத்தொழிந்த நான் எழுந்துவிட்டேன். இனிமேல், உனக்கும் ஓய்வு ஒழிச்சல் தரமாட்டேன்..."

"ஐயையோ, நீ நாசமாய்ப் போக!"

"அம்மா, குயிலி... இதைப்போல எத்தனையோ ஏழைகள் சபித்திருக்கிறார்கள். சாபத்தால் நான் அழிவதில்லை, தெரிந்துகொள்."

"மனப் பேயே! நான் என்ன ஏழையா, என்னிடம் நீ வாலாட்ட? கொள்ளைப்பணமும் எல்லையற்ற செல்வாக்கும் இருக்கும் என் வாழ்வில் மனத்துக்கு ஏது வேலை?"

"அட, பயித்தியமே! இதுவரையில் பணம், புகழ் என்றுமட்டும் ஏங்கினாய்! இந்தக் கவிதை கேட்டதிலிருந்து...எவனோ இனந் தெரியாத ஏழையின் இதயத்துடன் உறவாட நினைக்கிறாயே! உன்னை நீயே அறியாமல் ஏற்றுக்கொண்ட இந்தப் பாசம் போதாதா...என் பாடு இனிக் கொண்டாட்டம்தான்...அவனையும் உன்னையும் பிணைத்து...ஆகாகா! ஒரே கும்மாளம்...கும்மாளம்...!!!"

"மனக் கொலையில் பழகியவள் நான்...பேய் மனமே! உன்னால்கூட ஒரு நன்மை செய்யமுடியும் என்று தெரிந்துகொண்டேன்... மனப் பிணமே, கேள்! கவிஞனையும் என்னையும் பிணைத்து நீ கொண்டாடவா! அடடா! அந்த அழகை நீதான் பார்க்கப் போகிறாயே!"

மனம் அலுத்தது; உடல் சலித்த குயிலி தூங்கிவிட்டாள்.

3

பொழுது புலர்ந்தது;உலகத்துக்கு மட்டுமல்லாமல் இருளடைந்த ராமமூர்த்தியின் வாழ்விலுமே பொழுது புலர்ந்தது.

'பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்' என்று பள்ளியெழுச்சி பாடாமலேயே கவிஞனுக்கு இனிப்பான வாழ்க்கை தொடங்கி விட்டது. அப்படிப் பாடுகிற நிலைமை ஏற்பட்டிருந்தாலும், யார் செய்த தவத்தால் பொழுது புலர்ந்தது என்று சொல்லியிருக்க முடியாது.

வானொலியாளரின் உதவியால் ராமமூர்த்தியின் இருப்பிடம் தெரிந்தது. இரண்டொரு நாட்களில் ஒலிக்கலை ஸ்டுடியோக்காரர்களின் அழைப்பு ராமமூர்த்தியின் இரவல் குடிசையைத் தேடி வந்தது. தன்னையே நம்ப முடியாத நிலையில்—கையிலிருக்கிற கடிதத்தின் வாசகத்தை மறுக்க முடியாத சாரணத்தால் அவன் படப் பிடிப்பு நிலையத்துக்குப் புறப்பட்டான்.

'தன் கையே தனக்கு உதவி' என்ற பழமொழியை அவன் தன் வாழ்க்கையில் பின்பற்றுகிறவன். பணம் இல்லையென்றால், எல்லோருமே இந்த உயர்ந்த தத்துவத்தைப் பின்பற்ற வேண்டியதுதானே! நம் ராமமூர்த்தி அந்தத் தத்துவத்தைக் கையளவோடு நிறுத்தாமல் காலளவுக்கும் நீட்டியிருந்தான். தன் கைப்படத் துவைத்த ஒரு மாதிரியான மாஜிச் சட்டையை அணிந்துகொண்டு தன் கால்பட நடந்துசென்றான். மற்றவன் தயவை எதிர்பாராமல் வாழ்கிற ஏழையின் வாழ்வே வாழ்வு!......

வேண்டுகோள் வடிவில் குயிலி வெளியிட்ட கட்டளைக்குக் காது கொடுத்த ஸ்டுடியோ முதலாளி செல்வதுரை—ராமமூர்த்திக்கு வேலை கொடுத்தான். கதையும் உரையாடலும் எழுதும் தொழில் கிடைத்துவிட்டது.

எப்படி இந்த நல்ல காலம் தன்னைத் தேடி வந்தது என்பது புரியாமல் நாற்காலியில் கிடந்த அவனை முதலாளியின் பேச்சு எழுப்பிவிட்டது.

"சார், நம்ம கதைகளி லெல்லாம் இந்தக் காதல் விவகாரம் நிறைய வர வேண்டும். அது இல்லையோ, நாம் போடுகிற பணமெல்லாம் போச்சு... உங்களுக்குக் காதல் வருமோ?...... ஆளைப் பார்த்தால் அப்படித் தெரி யலையே...!"

இந்தக் கேள்வி ராமமூர்த்திக்கு ஓர் அதிர்ச்சியைக் கொடுத்துவிட் டது. 'ஐயையோ, கைக்கெட்டியது வாய்க்கு எட்டாதோ! தேடாமல் வந்த திருமகள் தலையைத் தடவி விட்டுச் சொல்லாமல் போய்விடுவாள் போல் தெரிகிறதே......'

அதிர்ச்சியைச் சமாளித்துக் கொண்டான்.........

"காதலா...... அது இல்லாமல் என்ன, சார்? காதல்தானே எல்லாம்! சினிமாவில் மட்டுமா, எங்குமே காத லுக்குத்தான் முதலிடம்......நானும் காதல பாட்டெலலாம் நிரம்பப் பாடி யிருக்கிறேன்......."

"பாட்டெல்லாம் வேண்டாம், சார்...... இனிமேல் நம்ம படத்தி லெல்லாம் இந்திப் பாட்டையேதான் சேர்க்கப் போகிறேன்...... சும்மா... வசனத்திலேயே சொல்லுங்கள், கேட்கிறேன்...... காதல் என்றால் என்ன?......"

"காதல்...... காதலா? அது குளிர் உறைப்பு மாறாமல் கனன்றெரியும் நெருப்பு; தோல்விக்குச் சளைக்காமல் வளர்கின்ற வெற்றி......"

"பேஷ், பேஷ்......"

"இன்னும் கேளுங்கள், சார். காதல் என்பது ஒரு நாளும் சாகாத நிரந்தர நோய். அது மட்டுமா? நிலை பெற்ற பொய்யாகி நின்றுவளர் பேருண்மை...... மேலும், எதுவு மில்லாப் பாழாகி எல்லாம் ஆன பெரும் பொருள்......"

"பிரமாதம், சார். மிஸ்டர் ராம மூர்த்தி! வசனம் எழுதுவதற்குச் சரியான ஆள் நீங்கள்தான். நம்ம குயிலி சொன்னால், சும்மாவா சொல் வாள்!......

"யார், சார்...குயிலி..."

"தெரியாதா! அட கர்நாடகமே! திரையுலகின் முடிசூட்டிய ராணியா உமக்குத் தெரியாது!...... குயிலி தானையா உம்மைச் சிபாரிசு பண்ணி னாள்! ரேடியோவிலே உம் கவிதை யைக் கேட்டாளாம்...... அவ்வளவு தான்...... உமக்கு நல்ல காலம் வழி திறந்துவிட்டது......"

இந்தச் சமயத்தில் முதலாளி அறையின் வழி உண்மையாகவே திறந்தது. வந்தது வேறு யாருமில்லை. ராமமூர்த்தி வந்திருப்பான் என்று தெரிந்தே, குயிலி வந்தாள்.

"குயிலி, உனக்கு ஆயுசு நூறு...... உன் பேரைச் சொன்னேன், நீயும் வந்துவிட்டாய்......"

"நூறு ஆயுசா! நாசமாய்ப் போச்சு! நான் என்ன ஆவது!"

"அது சரிதான்......." — இந்தக் குரல் செல்வதுரையின் தொண்டைக் குள்ளேயே செத்துவிட்டது......

குயிலியின் தோற்றம், மறையாத மின்னலை ராமமூர்த்திக்கு நினைவூட்டி யது. பணத்துக்காகத் தன்னை உலக வழியைப் பார்த்து உணரத் துரத்திய நிர்மலாவை நினைத்துக்கொண்டான்.

"அவள்தான் பணம் இல்லாதவன் என்று நம்மைத் துரத்திவிட்டாள். இவள் எதற்காக எனக்கு வலிய வேலை தேடித் தந்திருக்கிறாள்! இவள் யார், நான் யார்! அட, தெய்வமே! இந்த உலகத்தில்தான் எத்தனை எத்தனை வேடிக்கைகளை மறைத்து வைத்திருக்கிறாய்!......"

சிந்தனையைக் கலைத்தது குயிலின் குரல். "நம்ம கதைகளிலே ஏழை எளியவர்களின் தொல்லைகளைப் பார்க்கவே முடிவதில்லை என்று ஒரு பத்திரிகையில் மதிப்புரை எழுதியிருந்தார்களே, அதை சாருக்குச் சொன்னீர்களோ......"

"அவன் கிடக்கிறான் சரித்திரப் பிடுங்கல்... காதலின் இயல்பெல்லாம் தெரிந்தால் அப்படி உளறுவானா..."

"மிஸ்டர் செல்வதுரை, அந்த மதிப்புரையை அப்படி ஒதுக்கிவிடக்கூடாது. இப்போது அப்படி வருகிற படங்களுக்கு ஒரு மதிப்பு ஏற்பட்டிருக்கிறது......"

"அது சரிதான்...... மிஸ்டர் ராமமூர்த்தி. நம்ம ஸ்டுடியோவிலே அம்மாவின் குரலுக்கு எதிர்க்குரல் கிடையாது. காதலையும் சரித்திரத்தையும் கட்டிப் புரள வைக்கவேண்டும், நீர் எழுதும் கதையிலே......"

'எண்சாண் உடம்புக்கு வயிறே பிரதானம்' என்ற புது மொழியை உருவாக்கியது ராமமூர்த்தியின் வாழ்க்கை. இப்போது வயிற்றுக்குச் சோறு தரும் வேலை கிடைத்திருக்கிறது. அது எவ்வளவு இடைஞ்சல் தருவதாக இருந்தாலும், விடத் தயாராக இல்லை. அதனால் சொன்னான்: "வறுமையும் காதலும் தானே? ஆகா, ஈடு இணையற்ற ஜோடிதான்... அப்படியே வெளுத்து வாங்கிவிடுவோம்......"

"சரி, மிஸ்டர் ராமமூர்த்தி, நீங்கள் போகலாம்......எங்களுக்கு வேறு வேலை இருக்கிறது...... அடே, பையா, ஐயாவைக் கூட்டிக்கொண்டுபோய் அவர் மேசையைக் காட்டு...."

4

அன்று இரவு.

குயிலி வெற்றிக் களிப்போடு படுக்கப் போனாள்; மனச்சாட்சி அவளைத் தொடர்ந்தது.

"பேதைக் குயிலி! ஏன் இந்த எக்களிப்பு!"

"அட மனப் பிணமே! கொண்டாட்டத்துக்கு என்ன குறைச்சல்? கலையுலகம் என்னைப் பலிகொண்டது. அது இன்னொருவரையும் பலி கொள்ளப் பார்த்தது. அதற்குமுன் அவரைக் காப்பாற்றிவிட்டேனே!"

"காப்பாற்றிவிட்டாயா! ஐயோ பாவம்...... நான் இருப்பதை மறந்துவிட்டாயே! அவனைச் சும்மா விடுவேனா நான்...... அவனுக்கு எப்படி வேலை கிடைத்தது? இன்னொரு பிள்ளை குட்டிக்காரனைத் துரத்திவிட்டுத்தானே உங்கள் முதலாளி ராமமூர்த்திக்கு இடம் கொடுத்திருக்கிறான்...... இது போதாதா...... ராமமூர்த்தியை நான் ஆட்டிப் படைக்க......"

"அட, இனி உன் திருவிளையாடல் அங்கே பலிக்காது தெரியுமா? உன்னால் என்னதான் செய்யமுடியும்!..."

"பேதைப் பெண்ணே! ராமமூர்த்தி தனிக்கட்டை. வெற்று வயிற்றுப் பாட்டுக்கே வேலை ஏற்றான். ஆனால், கலை இன்னமும் அவனைவிட்டு அடியோடு நீங்கவில்லை; போதாக் குறைக்கு நான் இருக்கிறேன். எம்மையும் கலையும் எனக்குத் துணை செய்யும். வேலையை விட்டுப்போன எழுத்தாளனின் நிலையை ராமமூர்த்தி தெரிந்தவுடன் என் திருவிளையாடல் தொடங்கும்...... இனி என்னைக் கொல்ல உன்னால் முடியாது......"

"அரக்க மனமே! இரக்கமில்லாத உன்னோடு போராடிய பழக்கம் எனக்கு உண்டு...... பார்க்கலாம், வெற்றி உனக்கா எனக்கா என்று..."

எண்ணச் சுழலிலே சிந்தனையைப் பறக்கவிட்டு குயிலி தூங்கிவிட்டாள்.

5

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. ராமமூர்த்தியின் முதற்படம் வெளிவந்தது......

படம் எளிதில் வெளிவந்ததா? மற்றோர் ஏழைக் குடும்பத்தின் தொல்லையை—கும்பிக் கொதிப்பை அஸ்திவாரமாக வைத்துத் தன் வயிற்றுப் பாட்டைச் சரிசெய்துகொள்ள அவன் தயங்கினான்; மறுத்தான்...... மனச்சாட்சி எக்களிப்போடு கூத்தாடிற்று. ஆனால், பணத்தால் பகட்டும் குயிலி இருக்கும்போது மனச்சாட்சி என்ன செய்யும்! வேலை யற்றுத் தவித்த அந்தப் பழைய எழுத்தாளனுக்குக் குமாஸ்தா வேலை வாங்கிவைத்தாள்.

தன் கலைக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டு 'ஒன்று இரண்டு மூன்று' என்று எண்களை எழுதிக் கூட்டிக் கழித்துப் பெருக்கி வகுத்து, கண்ணால் காணமுடியாத ரூபாய் அணாப் பைசாக்களை வரிவடிவிலாவது காணும் இயந்திரமாக மாறிவிட்டான் அந்தப் பழைய கலைஞன். எப்படியாவது நாலு காசு கிடைத்தால் சரி. கலையோ, கழுதையோ எதையாவது கட்டியழவேண்டும் — காசுக்காக.

ராமமூர்த்தியின் மனச் சாட்சி தளர்ந்தது; படம் வளர்ந்தது; வெளியிடப்பட்டது......

'மனச்சாட்சி' என்பது படத்தின் பெயர்.

6

முதற் காதலின் மோக வெறி, பணத்தின் ஆற்றலால் பரிதவிக்கும் கலைஞனின் மனச்சாட்சி, ஏழையின் அல்லல், பணத்தின் செழிப்பு, காதலின் மேன்மை... எல்லாவற்றையும் பிணைத்துத் தன் கடந்த கால வாழ்வையே கதையாக்கிவிட்டான் ராமமூர்த்தி. படம் அவனுக்குப் புகழைத் தேடித் தந்தது; பணம் வரும் வழியைக் காட்டிற்று...

படங்கள் பல வெளிவந்தன: ஒன்று, இரண்டு, மூன்று...... பணம் திரண்டது; ராமமூர்த்தி பழைய ஆள் இல்லை.

பணத்தின் பசை கண்டான். பணக்காரன் ஆகிவிட்டான். நிர்மலா காட்டிய வழியை நினைவில் இருத்தினான்...

பணம் அவனுக்கு இருந்த மனத்தைச் சாகடித்தது; எங்கும் பற்றே இல்லாத அவனுக்குப் பணம் மட்டும் போதுமானதாக இருந்தது. கேட்டது கிடைக்கும் செல்வச் செழிப்பு, மனச் சாட்சியைப் புதைத்த ஊத்திலே வளர்ந்தது......

மனம் செத்தபோது கலை மட்டும் இருக்குமா? கலை செத்தது. 'கலைஞன்' செத்தான். 'அவன்' செத்ததுபற்றி ஒரு துளிக் கண்ணீர் விட ஆள் இல்லை.

இப்போது—

ராமமூர்த்தி பெருஞ் செல்வன்; முன்னொரு காலத்தில் கலைஞன்.

குயிலி பெருஞ் செல்வி; முன்னாள் நடிகை.

முதலில் மனம் செத்தது; பிறகு கலை செத்தது; ஏழ்மை தானே செத்துவிட்டது.

அங்கே—மனம், கலை இவற்றின் சமாதிகளிலே பணம் பயிராயிற்று.

கண்டுமுதல் கணிசமாக இருந்தது.

குயிலி வென்றுவிட்டாள்.

★

பெண் மகள்

பண்டிதர் திரு. அ. கிருஷ்ணசாமி நாயுடு.

★

அன்பின் அவதாரம் பெண்ணின் பிறப்பென்று
முன்பின் அறிந்தே மொழிகின்றேன் — இன்பம்
நிறையிடமும் காம நிழலிடமும் காதல்
உறையிடமும் பெண்ணெனன் றுணர்.

ஆவுறுஞ்சு கல்லென் றணங்கைக் கருதாமல்
நாவுறுஞ்சு நன்னீர் நதியென்க — பூவில்
நியாயம் அடக்கம் நிறைகுணம் திண்மை
தியாகம் திரள்வடிவு பெண்

பல்குக என்று பகவன் படைத்தலால்
அல்குக என்றியற்றி யானல்லன் — சொல்புகழார்
பெண்டிர் தரும்பேற்றில் பேருலகம் நிற்பதெனக்
கண்டீர் தெருளீர் கருத்து

பெண்ணென்னும் தூய பெருநிலந்தா னில்லாயின்
மண்ணென்னும் ஈண்டுமொரு வானத்தும் — எண்ணில்
கடைக்கண்ணும் நிற்கும் கடவுளுக்கும் ஆமோ
படைப்பென்னும் தெய்வப் பயிர்

பெண்பிறவி பாவமெனில் பெண்ணினுள் தோன்றிய
மண்பிறவி ஆண்மகனும் மாபாவி — எண்பிறவித்
தாயைப் பழித்துரைக்கில் பூத்தாயும் தாங்குவளோ
வாயைக் கிழித்திடுவள் வந்து

உணவளிக்கும் பூமி உடையளிக்கும் செல்வம்
குணமளிக்கும் கல்வியைக் கூறுங்கால் — மணமளிக்கும்
மண்மகளும் பொன்மகளும் கல்வி மகளுமென்பீர்
பெண்மகளைத் தாழ்த்துவதேன் பேசு

"பெண்ணில் பெருந்தக்க யாவுள" என்று குறள்
பெண்ணின் பெருமைமிகப் பேசியதை — எண்ணுமின்
மைந்தர் பிறவியினும் மாதருயர் தோற்றமெனில்
முந்துபரி ணும முறை

ஊட்டலில் அன்னையாய்; ஒப்புரவில் நண்பனாய்
வாட்ட மிகு நோயில் மருத்துவனாய்த் — தேட்டமுறும்
ஒப்பனையில் தோழியாய் ஓரன்பில் ஐம்புலனாய்
அப்பனும் அன்பினில் பெண்

தொடர் கதை

காதல் படும் பாடு

திரு. தா. ஏ. ஞானமூர்த்தி M.A

8. பிரிவு.

துன்பத்திற்குப் பின் அமைதி ஏற்படுவது உண்டு. இந்த அமைதி திடமான மனதுடையவர்க்கே வாய்க்கும். சிவாராமன் நீலகண்டனின் சூழ்ச்சி வலையில் சிக்குண்டு தவித்தது சொல்லில் அடங்குமோ? அவன் அதனின்றும் தப்ப முயன்றான். ஆனால் முடியவில்லை. இனி அவனை எதிர்நோக்கி இருக்கும் இன்னல்களை அமைதியாக ஏற்பதென உறுதி கொண்டான். இவ்வுறுதியோடு மெள்ள தன் அறையினின்று இறங்கி வந்தான்; கீழே வரதன் கடையில் நீலகண்டன் நிற்பதைக் கண்டான். அவன் முகத்தில் வெற்றிப் பெருமிதம் தாண்டவமாடியது. அவன் சிவாராமனை மிக்க வெறுப்போடு நோக்கினான்.

வரதன் சிவாராமனைக் கண்டதும், அவன் கையை அன்போடு பிடித்துக் கொண்டு "ஐயோ, உனக்கு இந்நிலை நேர்ந்ததைக் குறித்து என் உள்ளம் மிகவும் வருந்துகிறது. உனக்கு எங்கிருந்தாவது பணம் கடன் வாங்கித் தருவதாக நேற்றிரவு சொன்னேன். ஆனால் நீ........"

"ஆமாம், வரதா. தாங்கள் எனக்குத் தங்களால் இயன்ற உதவியைச் செய்தீர்கள். இதற்கு நான் என்றும் கடமைப்பட்டவனாவேன்" என்றான் சிவாராமன். வரதன்மேல் அவனுக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை. சிவராமன் உள்ளம் பெரிய உள்ளம்; களங்கமற்றது. களங்கமற்ற உள்ளம் எப்போதும் யாரையுமே சந்தேகிக்காது.

"சிவாராமா, சீக்கிரம் வா. நேரமாகி விட்டது. நீ உளறியது போதும். உன் பிதற்றலுக்கெல்லாம் இப்போது நேரமில்லை. உம், புறப்படு" என்று நீலகண்டன் உறுமினான்.

சிவாராமன் தன் துன்ப மிகுதியால் உதட்டைக் கடித்தான். அவன் முகம் வெளுத்துத் தோன்றியது.

அங்கிருந்தவர்களில் பலர் அவன் நிலையைக் கண்டு நெஞ்சுருகினர். அவர்களை யெல்லாம் சிவராமன் அன்போடு நோக்கினன். பிறகு அவன் மிகவும் சோர்வுடன் நீலகண்டனோடு பரசுராமநாயக்கர் மாளிகையை நோக்கி நடந்தான்.

வழியில் பொன்னம்பலம் வீடு நெருங்கிற்று. முன்போல அவ்வீட்டினை நோக்க அவனுக்குத் துணிவு வரவில்லை. அவன் நிலைமைச் சிவகாமி உணர்வாளானுல், ஐயோ, அவள் உள்ளம் எவ்வளவு பதைக்கும்! திடீரென அவ்வீட்டின் வாயிற் கதவு திறந்தது. ஒரு பாவையின் உருவம் வெளிவந்தது. ஆம், அவள் சிவகாமியேதான்!

"என் அன்பே, அன்பே!" என்று கதறிக் கொண்டே சிவகாமி, சிவராமனை நோக்கி ஓடிவந்தாள். "என்ன இது! இன்னுமா இவன் வலையிலே சிக்குண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே அருகே இருந்த நீலகண்டனை அச்சத்தோடு பார்த்தாள்.

"என் இன்னுயிர்ச் சிவகாமி, நீ பணம் அனுப்பவில்லையே......!"

"ஐயோ! நான் அனுப்பவில்லையா? யாரோ நம்மை வஞ்சித்திருக்கிறார்கள். தாங்கள் நேற்றுமாலை சோலைக்கு வரவில்லை".

"ஆம். என்னால் வர இயலவில்லை. நான் சிறைப்படுத்தப்பட்டிருந்தேன்."

"ஆனல் கமலம் நான் அனுப்பிய உறையைத் தங்கள் வீட்டில் கொண்டு வந்து கொடுத்துவிட்டு வந்தாளே!"

"அப்படியா? இப்பொழுதுதான் உண்மை புலப்படுகிறது, சிவகாமி. அந்த வரதன் என்னை வஞ்சித்துவிட்டான்".

"அவனிடத்தில்தான் அந்த உறையைக் கொடுத்துவிட்டு வந்ததாகக் கமலம் சொன்னாள்".

"வரதன் இவ்வளவு பெரிய துரோகம் செய்வான் என்று நான் கனவிலும் கருதவில்லை. ஐயோ! அநியாயம்! கொடுமை!" இவ்வுரைகளைக் கேட்ட சிவகாமி மயங்கித் தன் காதலன் மீது சாய்ந்தாள்.

"சிவராமா, எவ்வளவு நேரம் உனக்காகக் காத்திருப்பது? இவ்வளவு நேரம் உனக்காகக் காத்திருந்தது என் அன்பின் மிகுதியைக் காட்டும்." என்ருன் நீலகண்டன். உண்மையில் சிவராமனிடம் கொண்ட பரிவினால் அவன் காத்திருக்கவில்லை. அவன் சிவகாமியின் எழிலுருவத்தைக் கண்டதும் மதிமயங்கிவிட்டான். பேச நா எழவில்லை.

இங்ஙனம் நீலகண்டன் சொல்லி முடிவதற்குள் பொன்னம்பலம் தம் வீட்டிலிருந்து விரைந்து ஓடிவந்தார். சீற்றமே ஓர் உருவெடுத்து வந்தது போலத் தோன்றினர். அவர் சிவகாமியைச் சிவராமனிடமிருந்து பற்றி இழுத்துக் கீழே தள்ளினர். சிவகாமி உணர்ச்சி இழந்து வீழ்ந்தாள்.

வெறுப்போடும் சீற்றத்தோடும் அவர் சிவராமனை நோக்கி "மானங்கெட்ட கயவனே!" என்று தம் தொண்டை கிழியக் கத்தினர். பின்பு தம் மகளைப் பற்றி இழுத்துக் கொண்டே வீட்டில் நுழைந்தார்.

தன் காதலியைப் பின்தொடர்ந்து இறுதியாக அவளுடன் உரையாடி விடைபெற்று வரவேண்டுமென்று சிவராமன் உள்ளம் துடித்தது. சிறிது நேரம் அதைப்பற்றிச் சிந்தித்தான். தான் போவதை நீலகண்டன் தடுப்பான் என்று அவன் அஞ்சவில்லை. அப்போது நீலகண்டன் அவனைத் தடுத்திருப்பானுனல் பின்வரும் விளைவுகளுக்கு அஞ்சாமல் ஒரே அடியில் அவனைக் கீழே வீழ்த்தியிருப்பான். அவன் தயக்கத்திற்குக் காரணம் மற்றொன்று. அவன் மீண்டும் சிவகாமியைச் சந்தித்துப்

பேசுவானுனல், அவளுடைய தந்தையின் சீற்றம் இன்னும் அதிகரிக்கும். அதனுல் சிவகாமி மற்றும் பல கொடுமைகளுக்கு உள்ளாக நேருமே என்று அஞ்சியே சிவராமன் தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டான்.

பின்பு சிவராமனும் நீலகண்டனும் பரசுராம நாயக்கர் மாளிகையை நோக்கி நடந்தனர், வழியில் நீலகண்டன் ஒரு சொல் கூட பேசவில்லை. அப்போது அவன் பேசினுல் சிவராமன் செவிகளில் அவன் மொழிகள் ஒன்றுகூட விழாது என்பது அவனுக்குத் தெரியும். சிவராமன் மனம் முழுவதும் தனக்கிழைக்கப் பட்ட நம்பிக்கைத் துரோகத்தையே எண்ணி எண்ணி ஏங்கியதை நீலகண்டன் நன்கு உணர்ந்தான்.

இருவரும் பரசுராம நாயக்கர் மாளிகையை அடைந்து அவர் முன்னிலையில் சென்று நின்றுர்கள். பரசுராம நாயக்கர் சிவராமனை மிக்க செருக்கோடு சற்றுநேரம் உறுத்து நோக்கினுர். அவருடைய செருக்கும், தனக்கிழைக்கப்பட்ட துரோகமும் ஒன்று சேர்ந்து அவன் உள்ளத்தை வாட்டின. பரசுராம நாயக்கர் சில முக்கியமான போர்விதிகளைச் சிவராமனுக்குப் படித்தார். பின்பு பிரமாணம் செய்யும்படியாக அவனுக்கு ஆணையிட்டார். ஆணைப்படி சிவராமன் பிரமாணம் செய்தான். உணர்வோடு அவன் அதைச் செய்தான் என்று கூறமுடியாது. அது எப்படி அவனுல் முடியும்? கொலைத் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவன் எப்படிச் சோர்ந்து உணர்ச்சியின்றி மெலிவானே, அதைப் போல சிவராமன் வாடித் தளர்ந்தான்.

"எப்போது இவன் இவ்வூரை விட்டு ஒழிவான் என்று எண்ணியிருந்தேன். இனி இவ்வூர் சீர்படும்" என்று பரசுராம நாயக்கர் மிகத் தருக்கோடு பேசினுர். சிவராமன் ஒன்றும் பேசாமல் அவ்விடத்தை விட்டு அகன்றுன்.

சிவராமன் திரும்பும்போது அம் மாளிகையின் முன்னிடத்துப் பரசுராம நாயக்கரின் தங்கை குணவதி நின்று கொண்டிருந்தாள். அவள் சிவராமனை உற்று நோக்கினுள். அவள் பார்வை அவனுக்குப் பெருவியப்பைத் தந்தது. அது எத்தகைய பார்வை என்பதை அவனுல் புரிந்துகொள்ள முடியவில்லை. அதன்கண் வெறுப்பும் இல்லை; செருக்குமில்லை; அது அருட் பார்வையா என்பதும் அவனுக்குத் தெரியவில்லை. பிற்காலத்தில் அப் பார்வை அடிக்கடி அவன் மனக்கண் முன் தோன்றுவதுண்டு. அவள் கணநேரத்தில் அவன் பார்வையினின்றும் அகன்றுள். சிவராமன் நீலகண்டனேடு அம்மாளிகையினின்றும் வெளி வந்தான். அவன் மனம் தன் நிலையை நினைந்து நினைந்து நொந்தது.

சிறிது தூரம் சென்றதும் நீலகண்டன் தன் வாயைத் திறந்து வசை மாரி பொழியத் தொடங்கினுன். 'ஏ, நாயே, என்னிடமிருந்து தப்பலாம் என்று கனவு கண்டாயே, என்ன ஆயிற்று? இனி என்னிடமிருந்து தப்பமுடியாது? நீ என் அதிகாரத்திற்கு உட்பட்டவன். எனக்கு நீ எவ்வளவு தொந்தரவு கொடுத்தாய்! உன்னைப் பழி வாங்காமல் விடுவேன் என்று நினைக்காதே. போர்வீரன் வாழ்க்கை எப்படிப்பட்டது என்பதை இனி நீ நன்றாக உணர்வாய். அது இவ்வுலகத்தில் காணும் ஒரு பெரு நரகம் என்பதை நீ விரைவில் தெரிந்துகொள்வாய்."

இங்ஙனம் நீலகண்டன் வெந்த புண்ணில் வேலை நுழைப்பது போல சிவராமன் மனம் மேலும் புண்ணுகும் படிப் பேசிக்கொண்டே சென்றுன். சிவராமன் பதில் உரைக்கவே இல்லை. பொன்னம்பலம் வீடு நெருங்கியது. கடைசியாகத் தன் காதலியின் காட்சி கிடைக்குமா என்று மிக ஆவலோடு சிவராமன் அவ்வீட்டை நோக்கினுன். ஜன்னல் திறந்தது. அவன் ஆருயிர்ப்

பாவையின் அழகுருவம் அங்கே தோன்றியது. அவள் கண்களினின்றும் நீர் ஆறாகப் பெருக்கெடுத்தது. அவள் மிக்க சோர்வுடன் ஜன்னலுக்கு வெளியே தன் கையை நீட்டி அசைத்தாள். சிவராமனும் தன் கையை அசைத்தான். அவன் மூளை குழம்பியது. தன் காதலி முரட்டுத் தனமுடைய அவள் தந்தையிடத்தில் என்ன பாடுபடுவாளோ என்று ஏங்கினான். அவளுடைய கை அசைப்பு அவனுக்கு ஒரு வகையில் ஆறுதலும் தந்தது. அவளுடைய உறுதிப்பாட்டை அது அவனுக்கு நன்கு உணர்த்திற்று. மேலும் அது, அவர்களிருவருக்கும் நல்லகாலம் கிட்டும் என்றும், அப்போது அவர்கள் ஒன்றுபட்டு இன்பவாழ்வு வாழலாம் என்றும் அறிவிப்பது போல் இருந்தது. எனினும் அவனுக்கு இந்த அரிய காலம் கிட்டும் என்ற நம்பிக்கை இல்லை. இந் நம்பிக்கை யிழப்பிற்குக் காரணம் அவன் அப்போது கொண்டிருந்த ஆறாத் துயரமே யாகும்.

இருவரும் கடைவீதியை அணுகினர். சிவராமன் தன் இருப்பிடத்தை நோக்கி நடந்தான். அங்குச் சென்றதும் வரதன் தனக்குச் செய்த துரோகத்தைக் குறித்து அவனை ஏசவேண்டும் என்று கருதினான். இங்ஙனம் ஏசியிருந்தால் அவன் மனச்சுமை ஓரளவு குறைந்திருக்கும். ஆனால் நீலகண்டன் இதற்கும் இடந்தரவில்லை. அவனைப் பெருமாள் விடுதிக்குச் செல்லும்படியாகக் கட்டளையிட்டான். படையதிகாரியின் கட்டளைக்குச் சிவராமன் கீழ்ப்படிந்துதானே ஆகவேண்டும். அவன் பெருமாள் உணவு விடுதிக்குள் நுழைந்தான். அங்கே ஓர் அறைக்குள் அவன் சிறை செய்யப்பட்டான். அவனோடு படையில் சேர்ந்த மற்றவர்கள் தத்தம் வீடுகளுக்குச் சென்று குறித்த நேரத்திற்குள் திரும்பும்படியாக அனுமதிக்கப்பட்டனர். ஆனால் இவ்வனுமதி சிவராமனுக்கு மட்டும் இல்லை. சிவராமன் அந்த அறையில் இருந்த ஒரு பலகையின் மீது அமர்ந்து தன தலைமீது கை வைத்துத் தன் விதியை நினைந்து நெஞ்சுருகினான். அவன் அடைந்த வேதனையைச் சொல்லால் சொல்ல முடியாது.

சிறிது நேரத்திற்குள் அவ்வறையின் கதவு திறக்கப்பட்டது. நீலகண்டன் உள்ளே நுழைந்தான். தன் கையிலுள்ள மூட்டை ஒன்றைச் சிவராமனிடத்தில் வீசி எறிந்தான். 'இதோ, இம்மூட்டையில் உன்னுடைய பொருள்கள் எல்லாம் இருக்கின்றன. உனக்காக வரதன் உன் அறையிலிருந்த பொருள்களையெல்லாம் மூட்டையாகக் கட்டிக் கொடுத்தனுப்பினான். இதற்கு நீ அவனுக்கு நன்றி செலுத்தவேண்டும்' என்றான். பிறகு தன் சட்டைப் பையிலிருந்து ஓர் உறையைக் கையிலெடுத்துச் சிவராமனுக்குக் காட்டி, 'இதுதான் உனக்குக் கொடுக்கத் தவறிய உறை. இப்போது எடுத்துக் கொள்' என்று கேலிச் சிரிப்போடு அதைச் சிவராமனிடம் எறிந்தான். பிறகு கதவை மூடிக்கொண்டு வெளியேறினான்.

சிவராமன் மிக்க ஆவலோடு அந்த உறையை எடுத்தான். அவன் ஆவலோடு அதை எடுத்தது அதனுள்ளிருந்த பணத்திற்காக அல்ல. அப்பணம் அவனுக்கு இப்போது எதற்கு? அது பயனற்றதாகிவிட்டதே! தன் இன்னுயிர்ச் செல்வியின் அன்புக் கடிதம் அவ்வுறையினுள் இருக்கும் என்ற எண்ணம்தான் அவன் ஆவலை எழுப்பியது. எனவே அவன் உறையை எடுத்துப் பிரித்தான். அதனுள்ளிருந்து பணம் விழுந்தது. அதை அவன் சற்றும் பொருட்படுத்தவில்லை. தான் எதிர்பார்த்தபடி தன் காதலியின் கடிதத்தை அதனுள் கண்டான். ஆர்வத்தோடு அதை எடுத்துப் படித்தான்.

"என் அன்பின் சிகரமே,

நேற்றுமாலை நான் தங்களைச் சோலையில் சந்தித்ததை என் தகப்பனுர் தெரிந்துகொள்ளவில்லை என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆனுல் அவர் என்னைக் கடுமையான காவலில் வைத்திருக்கிறுர். ஆகையால் நான் இன்று மாலைச் சோலையில் தங்களைச் சந்திக்க இயலாது. எனினும் கமலம் தங்களை அங்கே சந்திப்பாள். அவள் அன்புள்ளம் படைத்தவள். அவள்மேல் எனக்கு முழு நம்பிக்கை உண்டு. நம் ஏற்பாட்டின்படி தாங்கள் சோலைக்கு வர இயலாமற்போனுல், கமலம தங்களுக்காக அங்கு அரைமணி நேரம் காத்திருந்துவிட்டு, பிறகு தங்கள் இருப்பிடத்திற்குச் சென்று உறையைத் தங்களிடம் சேர்ப்பிப்பாள். இந்த ஏற்பாடு இனிதே நிறைவேறும் என்பதில் ஐயமில்லை. பணத்தைத் தாங்கள் உடனே செலுத்தி விடுதலை பெறலாம். என் அனபே, தாங்கள் விடுதலை பெற்றதும் என் உள்ளம் எவ்வளவு பூரிக்கும் என்று கூறவேண்டுமா? இன்று இரவு சுமார் ஒன்பது மணிக்கு, 'என் இன்னுயிர்க் காதலர் இந்த நேரத்திற்குள் விடுதலை பெற்றிருப்பார். அவர் அடிமை வாழ்வு மாண்டது; இன்ப வாழ்வு மீண்டது' என்று களிப்படைவேன்".

"இனி, மாலை தோறும் தாங்கள் சோலைக்குத் தவருமல் வரவேண்டும். எனக்கு வாய்ப்புக் கிடைக்கும்போது நான் தங்களை அங்குச் சந்திப்பேன். அச் சந்திப்புக்குப் பிறகு பிரிவு இல்லை. பின்பு இன்பம்! இன்பம்! என் இன்னுயிரே, என் உள்ளத்தில் இன்பம் பொங்குகிறது. அவ்வினிய உணர்ச்சி அனைத்தையும் எழுத்தால் எழுத முடியவில்லை. என் உள்ளத்தில் தாங்கள் நிலைத்துவிட்டீர்கள். உலகமே அழிந்தாலும் என் உள்ளத்தினின்று தங்களை நீக்க முடியாது.

சிவகாமி."

சிவராமன் கண்களினின்றும் நீர் பெருக்கெடுத்தது. அவன் குழந்தை போல அழுதான். இல்லை, இந்த ஒப்புமை பொருந்தாது. எந்தக் குழந்தையும் எவ்வளவு துன்பமுற்றுலும் சிவராமன் உள்ளம் அப்போது குமுறி அழுதது போல அழுதே இருக்காது. ஆண்டவனே, ஒரு நொடியில் எவ்வளவு பெரிய இன்பம் அழிந்தொழிந்தது! சிவகாமி தன் கடிதத்தில் குறித்திருந்த இன்பம் களங்கமற்றதல்லவா? தூய்மை யானதாயிற்றே! அந்தோ, அவ்வின்பம் முழுதும் ஒரு கணத்தில் அழிந்ததே! சிவகாமி மிக மெல்லியள். அவள் உள்ளம் இக்கொடிய துன்பத்தைத் தாங்குமா? ஓ, இறைவனே! இவ்வளவு பெரிய கொடுமையைக் கண்டும் நீ சும்மா இருப்பதா? உன்னுடைய அரிய சக்தியை ஏவி இப்பாழுங் கொடுமைக்குக் காரணமாயிருந்த அரக்கர்களை அழிக்க வேண்டாமா? அநீதியை நீ இப்படிப் பொறுத்துக்கொண்டே இருந்தால் சிவராமன் போன்ற நல்லவர்களுக்கு உன்மீது எப்படி நம்பிக்கைப் பிறக்கும்?

சிவராமன் இருந்த அறைக்குள் ஒருவன் நுழைந்து அவன் அருகே உணவை வைத்துவிட்டுச் சென்றுன். உணவைக் கொண்டுவந்தவன் யார் என்பதைக்கூட சிவராமன் உணரவில்லை. அவ்வுணவைச் சிவராமன் தொடவே இல்லை. உள்ளம் குழம்பியுள்ளபோது உணவின்மீது எப்படி நாட்டம் செல்லும்? சிறிது நேரங் கழித்து அவன் அறைக் கதவு மீண்டும் திறக்கப்பட்டது. இன்னும் சில நிமிஷங்களுக்குள் அவன் புறப்படச் சித்தமாக யிருக்கவேண்டும் என்ற அறிவிப்பு அவன் காதில் விழுந்தது. இச் செய்தி அவனைத் திடுக்கிடச் செய்தது. தன் காதலிக்கு இரண்டொரு வரிகளாவது எழுத வேண்டும் என்று அவன் விரும்பினுன். இவ்வெண்ணம் அவனுக்குச்

சிறிது ஆறுதல் அளித்தது. எழுதுதற்கு வேண்டிய பொருள்களை அவன் விரைவில் தருவித்தான். துன்பங் கலந்த தன் அன்புள்ளத்தை அக்கடிதத்தில் கொட்டினான். அவ்வுணவு விடுதியின் பணியாளன் ஒருவனிடம் அக்கடிதத்தைக் கொடுத்து யாருக்கும் தெரியாமல் அதைச் சிவகாமியிடம் சேர்க்கும்படியாக வேண்டினான். அவனுக்குக் கைநிறைய காசும் கொடுத்தான். அவனுக்குக் கொடுத்த பணம் சிவகாமி அனுப்பியதே. அப்பணியாளனுக்குச் சிவராமன் நன்கு தெரியும். சிவராமன் நிலையைக் கண்டு அவன் நெஞ்சுருகினான். தான் எப்படியாவது அக்கடிதத்தைச் சிவகாமியிடம் சேர்ப்பிப்பதாக அவன் உறுதியளித்தான்.

பெருமாள் உணவு விடுதிக்குமுன் ஒரு வண்டி வந்து நின்றது. அதில் சிவராமனும் அவனோடு அவ்வூரிலிருந்து படையில் சேர்ந்த மற்றவர்களும் ஏறி அமர்ந்தனர். அவர்களைக் காண அங்குப் பலர் சூழ்ந்து கொண்டனர். அவர்கள் நிலையைக் குறித்துச் சிலர் இரங்கினர். அவர்களுக்கு மிக நெருங்கிய உறவினர்கள் கண்ணீர் விட்டுக் கதறினர். அங்கிருந்தவர்கள் எல்லோரிடமிருந்து அவர்கள் விடை பெற்றுக்கொண்டனர். வரதன் அங்குத் தலைகாட்டவேவில்லை. இறுதியாக நீலகண்டன் வண்டியில் ஏறி உட்கார்ந்தான். வண்டி புறப்பட்டது. அவ்வூர் மருத்துவர் வீடு, தையற்காரன் கடை, வரதன் பலசரக்குக் கடை, அப்பக்கடை முதலியவைகளை

ஒன்றன்பின் ஒன்றாக வண்டி கடந்து சென்றது. வழியில் பொன்னம்பலம் வீடு நெருங்கியது. சிவராமன் அதனையே உற்று நோக்கினான். அதுவும் சற்று நேரத்தில் மறைந்தது. பிறகு அவ்வூரே மறைந்தது.

வண்டி பரங்கிமலை போர்வீரர் நிலையத்தில் சென்று நின்றது. அப்போது இருட்டும் நேரம் ஆகிவிட்டது. வண்டியிலிருந்தவர்கள் அங்கு ஓர் அறைக்குள் அனுப்பப்பட்டார்கள். அவ்வறையில் பல ஊர்களிலிருந்து புதிதாகச் சேர்க்கப்பட்ட போர் வீரர்கள் பலர் இருந்தனர். அடுத்த நாள் உடல் சோதனைக்காக அவர்கள் ஒவ்வொருவராக மருத்துவரிடம் சென்றனர். நீலகண்டன் உடல் சோதனை மிக விரைவில் நிகழ்ந்து விட்டது. அவன் உடல் அமைப்பில் யார்தான் குறை காண முடியும்? இரண்டு நாட்கள் கழித்து, சிவராமன் சேர்ந்திருந்த படையானது சென்னைக்கு அனுப்பப்பட்டது.

(தொடரும்)

தமிழ் வளர!

மணிவண்ணன்

*

தமிழ் வாழ்க, முத்தமிழ் முழங்குக, எனும் முழக்கங்களைச் சில ஆண்டுகளாக மூலை முடுக்குகளில் யாங்கணும் கேட்கிறோம். தமிழ் வீழ்க என்று யாரும் சொல்வதில்லை. எந்த நாட்டிலும், எவனும் தன் தாய் மொழி வளர்ந்து சிறப்பெய்த வேண்டுமென்றெண்ணுவானேயன்றி அழியவேண்டுமென எண்ண மாட்டான். எனவே, தமிழரின் விழிப்புணர்ச்சி ஓரளவு தெரிகிறது. தமிழ் வளரும் என்ற நம்பிக்கையும் பிறக்கிறது.

தமிழ் எப்படி வளரும்!

"எளிய நடையில் தமிழ் நூல்
எழுதிடவும் வேண்டும்
இலக்கண நூல் புதிதாக
இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில், சிந்தனையில்
புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும்
பெயர்களெல்லாங் கண்டு
தெளியுறுத்தும் படங்களொடு
சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செந்தமிழாய்ச்
செய்திடலும் வேண்டும்"

என்று 'தமிழ் வளர்ச்சி' என்ற தலைப்பிலே தந்திருக்கிறார். மற்றும்,

"பிறநாட்டு நல்லறிஞர்
சாத்திரங்கள் தமிழ்மொழியில்
பெயர்த்தல் வேண்டும்"

என்று பாரதியார் அவர்கள் பாடினார்.

இந்த நாளில் முக்கியமாகச் செய்ய வேண்டுவது, மேல் நாட்டு விஞ்ஞான, அறிவியல், நூல்களையும் தமிழில் ஆக்கவேண்டும். அங்ஙனம் தமிழாக்குங்கால், கலைச் சொற்களை அப்படியே கொள்வதா, தமிழில் மொழி பெயர்த்துக் கொள்வதா எனும் இருவேறுபட்ட கருத்துக்கள் அறிஞரிடையே நிலவுகின்றன. தமிழ் வளர்ச்சியில் இம்முறை பெரும் பகுதியைச் சார்ந்ததேயாகும். இது நிற்க, புதுச் சொற்கள் ஆக்கம் தமிழ்வளர்ச்சிக்குத் துணையாகும் எனினும், தமிழில் வழங்கி வந்த சொற்களில் எவ்வளவோ வழக்கிழந்து மறைந்தன. அவற்றில் பெரும்பாலானவற்றை வழக்கிற்குக் கொண்டு வரவும் தமிழ் வளர்ச்சியின் பாற்படும் என்றும் கொள்ளலாம். ஆனால், வழக்கிழந்த சொற்களை மீண்டும் வழக்குப்படுத்துவது, உயிரிழந்த உடலுக்கு உயிரளிப்பது போலும் என்றும் பலர் கருதுகின்றனர். வழக்கழிய காரணம், அச்சொற்களினிடங்களை வேற்று மொழிச் சொற்கள் பற்றிக்கொண்டன, என்பதையும் காண்கிறோம். இங்ஙனம் தமிழ்மொழி இழந்த சொற்கள் பல. இப்பொழுது அவ்வேற்றுமொழிச் சொற்களுக்கு நேரிய தமிழ்ச் சொற்கள் இல்லையென்றும் சொல்லவேண்டியிருக்கிறது. இந்தச் சொற்களேயன்றி வட்டளவில் இருக்கும் சொற்களும் உள்ளன. தமிழ் வளரவேண்டும், முத்தமிழ் முழங்கவேண்டும், எனும் ஆர்வமுடையோர் முயன்றால், முடியாததன்று. சில ஆண்டுகளாக, இத்துறையிலே தமிழ் ஒரு சிறிது வளர்ந்துள்ளது என்று கூறத்தான் வேண்டும். அதாவது, வருஷம், வந்தனம், நமஸ்காரம, சபா நாயகர், ஜலம், உப அத்தியக்ஷகர், சர்வகலாசாலை போன்ற பல சொற்கள் நீக்கப்பட்டு

முறையே, ஆண்டு, நன்றி, வணக்கம், அவைத்தலைவர், சோறு, தண்ணீர், துணைத்தலைவர், பல்கலைக் கழகம் என்னும் சொற்கள் மக்களிடையே, சிறப்பாக மாணவ உலகிலே வழங்கப் பட்டு வருகின்றன. சோறு வணக்கம் போன்ற சொற்களைப் பயன் படுத்தத் தொடங்கிய போது ஏதோ ஒரு இகழ்ச்சியாகக் கருதியவரும் உண்டு. ஆனால், இப்பொழுது நமஸ்காரம் என்ற சொல் நீக்கப்பட்டு, பெரும்பாலும் வணக்கம் என்ற சொல்லே வழக்கில் நுழைந்து விட்டது என்று கூறின் மிகையாகாது. இங்ஙனமே வழக்கற்ற சொற்களையும் வழக்குப் படுத்துதலாம்.

தமிழில் சில சொற்கள் வழக்கிழப்பதற்குக் காரணம் பல உள. அவற்றில் ஒன்று, சிறு சிறு பொருள் வேறுபாடுகளைக் கொண்ட பல சொற்களின் இடத்தில் ஒரே சொல்லைப் பயன்படுத்தலாம். எடுத்துக் காட்டாக, ஆங்கிலத்தில், way, path, road, route எனும் சொற்கள் பெரும்பாலும் வழி யென்ற பொருளில் இருந்தாலும் ஒவ்வொன்றிற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. ஒரு சொல்லைக்கூற வேண்டிய யிடத்தில் வேறு சொல்லைக் கூறமுடியாது. கூறின் பொருள் பொருத்த மிருக்காது. அதே போன்று தமிழிலும் உண்டு. ஆனால் இப்பொழுது பல சொற்களைப் பல இடங்களில் கூற வேண்டியிருக்க, எல்லா சொற்களுக்கும் ஒரே சொல்லைக் கூறி மற்ற சொற்களை மறந்துவிடுகின்றனர். எடுத்துக் காட்டாக ஈண்டு மூன்று சொற்களை எடுத்துக்கொள்ளலாம். அவை, கஷ்டம், விஷயம், அவசியம் ஆகியவை. இம்மூன்று சொற்களும், வழக்கில் நுழைந்துகொண்டு பல தமிழ்ச் சொற்களை அகற்றிவிட்டன. இப்பொழுது இம்மூன்று சொற்களும் மக்களிடையே யன்றி தமிழ்ப் புலவரிடையேயும் பெரிதும் பேசப்பட்டு வருகின்றன. 'கஷ்டம்' என்ற சொல்லை நீக்கிப் பேசமுடியுமோ என்று கேட்டால் "அது ஒரு பெரிய கஷ்டமாகத்தானிருக்கிறது" என்று சொல்லும் அளவிற்கு வழக்கில் ஊன்றிநிற்கிறது அச்சொல்.

'கஷ்டம்' என்ற சொல் எவ்வெவ் வழிகளில் பயன்படுத்தப்படுகிறதெனப் பார்ப்போம். 'மனவருத்தம்' என்று கூறுமிடத்து 'மனக்கஷ்டம்' என்றும்; 'இன்னல் நிறைந்த வாழ்க்கை' என்னுமிடத்து 'கஷ்டமான வாழ்க்கை என்றும்; 'இம்மலையேறுதற்குத் துன்பம்' எனுமிடத்து 'இம்மலை யேறுதற்குக் கஷ்டம்' என்றும்; 'இப்பொருள் கடிப்பதற்குக் கடினமாயிருக்கிறது' என்ற விடத்து 'இப்பொருள் கடிப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது' என்றும், 'இடுக்கண் வருங்கால் நகுக' எனுமிடத்து, 'கஷ்டம் வரும்பொழுது சகித்துக் கொள்ளவேண்டும்' என்றும்; மக்கள் பேசுவதைக் காண்கிறோம்.

மக்களின் மனப்பண்பு நாளுக்கு நாள் எளிய வழிகளையே நாடிச் செல்லுகிறது. உடலுழைப்பினை எவ்வளவுக்கெவ்வளவு குறைக்க வழிசெய்ய முடியுமோ அவ்வழியினை ஆய்ந்து செல்லுகிறது. ஐந்து மைலானாலும் நடந்தே செல்லும் கிராம மக்களும், இன்று ஒரு மைல் செல்ல பஸ்ஸுக்காகக் காத்திருப்பதைப் பார்க்கிறோம்; என்றால், பட்டணத்து மக்களைப்பற்றிக் கூறவே வேண்டாம். நூறு வியாதிகளைக் கண்டிக்கக்கூடிய ஒரு மருந்தைக் கண்டுபிடித்து அதற்குச் 'சகல ரோக சஞ்சீவினி' என்று பெயரிட்டு விற்றால், மக்களின் மனம் அம்மருந்தையே நாடும். இதைப் போலவே சொற்களைப் பயன்படுத்தும் முறையிலும் மக்கள் மனம் சென்றுள்ளது. இதைப்பற்றி ஒருநாள் என் நண்பரொருவரிடம் பேசியபோது, "கஷ்டம் என்ற சொல்லை நீக்குவதென்பது கஷ்டம் தான் சார்" என்று கூறினார். அவர் கூறிய வாக்கியத்திலும் இரண்டாவதாகக் கூறிய கஷ்டம்

என்ற சொல்லைப் பயன்படுத்தாமல், முடியாது, அல்லது அரிது என்ற சொற்களைப் பயன்படுத்தி யிருக்கலாம். இவ்வாறாகக் 'கஷ்டம்' என்ற ஒரு சொல்லானது துன்பம், இன்னல், இடும்மை, இடுக்கண், புன்கண், வருத்தம், அரிது, போன்ற சொற்களினிடங்களில் பயன்படுவதைக் காண்கிறோம். இடும்மை, இடுக்கண், புன்கண் எனும் சொற்கள் பேச்சு வழக்கிலின்றி இலக்கிய வழக்கிலேயும், துன்பம், இன்னல் அரிது போன்ற சொற்கள் ஓரளவு பேச்சு வழக்கிலேயும் காணப்படுகின்றன. இப்போதுள்ள நிலையே நீடிக்குமானால் மேற்குறித்த சொற்களும் பேச்சு வழக்கினை யிழந்துவிடும். எங்கும் கஷ்டமாகவே காட்சியளிக்கும்.

அடுத்தது 'விஷயம்' என்ற சொல்லை யெடுத்துக்கொள்வோம். 'விஷயம்' 'கஷ்டத்தை' விட ஒருபடி மேலேறி நிற்கக் காண்கிறோம். இச்சொல்லே, படித்தோரிடையேயும் நீக்கவொண்ணாத நிலையை எய்தியுள்ளது. இச்சொல் யாங்ஙனம் வழங்கப்படுகிற தென்பதைக் காண்போம்.

'என்ன காரியமாய் வந்தீர்கள்' அல்லது 'எதன் பொருட்டு வந்தீர்' எனுமிடத்தில், 'என்ன விஷயமாய் வந்தீர்கள்' என்றும்; 'கூட்டத்தில் நான் எதைப்பற்றி அல்லது எப்பொருளைப்பற்றிப் பேசவேண்டும்' என்று கேட்க வேண்டிய இடத்தில், 'நான் என்ன விஷயமாய்ப் பேசவேண்டும்' என்றும்; 'எல்லாவற்றையும் அல்லது எல்லா செய்திகளையும் அறிந்தவர் போல் பேசுகிறீரே' யென்று கூறவேண்டிய இடத்தில், 'எல்லா விஷயமும் தெரிந்தவர் போல் பேசுகிறீரே' யென்றும்; 'பள்ளியின் அலுவலாகச் சென்றேன்' எனுமிடத்து; 'பள்ளிக்கூட விஷயமாய்ச் சென்றேன்' என்றும்; 'இக்காரியத்தில் அல்லது இச்செயலில் தலையிடவேண்டாம்' என்று கூறுமிடத்தில், 'இவ்விஷயத்தில் தலையிடவேண்டாம்' என்றும்; பலவிடங்களிலும் பேசப்பட்டு வருகிறது.

எனவே, காரியம், அலுவல், செய்தி, செயல், பொருள், ஆகிய இடங்களிலும் தேவையற்ற சிலவிடங்களிலும் விஷயம் எனும் சொல் பெரிதும் வழக்கிலிருந்து வருகிறது.

மூன்றாவதாக, அவஸ்யம் என்ற சொல்லைக் காண்போம். 'மக்கட்குக் கல்வி மிகமிக இன்றியமையாதது', 'திருமணத்திற்கு நீங்கள் கண்டிப்பாய் வரவேண்டும்,' 'நீங்கள் எல்லோரும் வரவேண்டுமென்ற தேவையில்லை' என்று கூறவேண்டிய இடங்களில், முறையே, 'மக்கட்குக் கல்வி மிகமிக அவஸ்யம்,' 'திருமணத்திற்கு நீங்கள் அவஸ்யம் வரவேண்டும்,' 'நீங்கள் எல்லோரும் வரவேண்டும் என்ற அவஸ்யமில்லை,' எனும் வாக்கியங்களைப் பயன்படுத்துகிறோம். எனவே, அவஸ்யம் என்ற சொல், இன்றியமையாமை, கண்டிப்பு, தேவை, என்ற சொற்களின் இடங்களைப் பற்றிக்கொண்டது.

இவைபோன்ற பலசொற்கள் தமிழ் பேசும் தமிழ் மக்களால் பேசப்படுகின்றன. (கஷ்டம், விஷயம், அவஸ்யம், என்ற சொற்களின்றிப் பேசமுடியாத நிலையில் தமிழ் மக்கள் இருக்கின்றனர் என்பதைக் கூர்ந்து கவனிப்போர் அறிவர்.) இச்சொற்களை நீக்கி, அவ்விடத்தில் உயிர் நீங்கும் நிலையிலுள்ள சொற்களைப் பயன்படுத்தவேண்டும். இப்படிச் செய்தால் பலசொற்கள் பிழைக்கும். இயலுமா? இயலாதென்பதே பலருடைய விடையாயிருக்கும். அப்படி நினைப்போர், வணக்கம், நன்றி, பல்கலைக்கழகம், போன்ற சொற்கள் வழக்குப்பெற்ற வகையைப் பார்க்கவேண்டும். இதற்கு வேண்டியது முயேற்சியே. இம்முயற்சி பலர்க்கும் வேண்டும். ஆனால், சிறப்பாக, பெற்றோர், ஆசிரியர், பத்திரிகையாளர் எனும் மூவர்க்குக் கண்டிப்பாய் வேண்டும். ●

சூரியன்

திரு. D. சுப்பிரமணிய ரெட்டியார், B. Sc. (Hons.)

இவ்வுலகத்தில் மக்களின் வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது சூரியனும் அதன் சக்தியும். சூரியன் இல்லையெனில் மனிதர்கள் பூமியில் வசிப்பது மிகவும் கடினம். இச்சூரியனைப்பற்றிச் சில உண்மைகளைத் தெரிந்து கொள்வது மிகவும் அவசியம். சென்ற பன்னிரெண்டு ஆண்டுகளில் சூரியனைப்பற்றி முக்கிய விவரங்கள் சில கிடைத்துள்ளன. இவை இதற்கு முன் கொண்ட கருத்துக்களுக்கு முற்றிலும் மாறானவை. சூரியன் பூமியிலிருந்து 93 மிலியன் மைலுக் கப்பால் உள்ளது. சூரியன், காலம் செல்லச் செல்லக் குளிர்ந்து கொண்டே வருவதாகவும், அது மிகவும் கடினமான திடப் பொருளால் ஆனது என்பதாகவும் இதுகாறும் எண்ணப்பட்டு வந்தன. ஆனால் அதற்கு மாறாக இப்பொழுது அது உஷ்ண மடைந்துகொண்டே வருவதாகவும் அதில் பெரும்பாலும் ஹைட்ரஜனும் ஹீலியம் என்ற வாயுவும் இருப்பதாகவும் கருதப்படுகிறது. பூமிக்கு மேலுள்ள பரந்த வெளியில் சூரியன் மணிக்கு 6,53,000 மைல் வேகத்தில் சுற்றுகிறது. அவ்வாறு செல்லும் பொழுது பரந்த வெளியிலுள்ள ஹைட்ரஜன் வாயுவைச் சேர்த்துக்கொண்டு இன்னும் உஷ்ணப் படுத்திக்கொள்ள வசதி செய்து கொள்கிறது.

சூரியன் 8,65,000 மைல்கள் விட்டமுள்ள பெரிய வட்டம். இது திடப் பொருளல்ல. ஆனால் ஹைட்ரஜன் போன்ற வாயுக்களால் ஆன பந்து போன்ற பொருளாகும். ஆனால் நடுவில் உள்ள இடம் 1 கன அடிக்கு $3\frac{1}{2}$ டன் எடை உள்ளதாக இருக்கும். அவ்விடத்தில் 1 சதுர அங்குலத்திற்கு 1 பிலியன் டன் அமுக்கம் (pressure) இருக்கும். அவ்விடத்தில் வெப்ப நிலை 20 மிலியன் சென்டிகிரேட் டிகிரி இருக்கும்.

சூரியனின் நடுப் பாகத்திலிருந்து மேற் பரப்பிற்குச் செல்லச் செல்ல வெப்பநிலையும் கனபரிமாணமும் அமுக்கமும் குறைந்து கொண்டே போகும். சூரியனின் மேற்பரப்பில் உஷ்ணநிலை 6000°C-க்கு வந்து விடும். சூரியனைச் சுற்றி 200 மைல் வரை ஒரு வாயுமண்டலம் இருக்கிறது. இதற்குப் போடோஸ்பியர் (photosphere) எனப்படும். அவ்வாயுவின் சக்தி கடல் மட்டத்திலுள்ள காற்றின் சக்தியைவிடக் குறைந்திருக்கும்.

சூரியன் எடை இரண்டேகால்* பிலியன் பிலியன் பிலியன் டன் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அதாவது நாம் வசிக்கும் இப் பூமியின் எடையைவிட 3,30,000 மடங்கு பெரியது. சூரியனை அடுத்து இருக்கும் 200 மைல் உயரமுள்ள போடோஸ்பியரின் மேல் பரப்பில் வெப்பநிலை 5000°C-க்கு குறைந்து விடுகிறது. வாயுவின் சக்தியும் மிகமிகக் குறைந்து விடுகிறது. பூமியைச் சுற்றிப் பெரும் அளவில் உள்ள வாயுமண்டலம் கதிர்கள் நுழையக் கூடியதாக (Transparant) கண்ணாடி போல் இருக்கிறது. ஆனால் சூரியனைச் சுற்றியுள்ள வாயுமண்டலம் சிறு அளவாக

*ஒரு பில்லியன் என்பது மில்லியன்மில்லியன். ஒரு மில்லியனாவது பத்து லட்சம்.

இருப்பினும் கதிர்கள் நுழைவதற்கு இடைஞ்சலாக (opaque) இருக்கிறது. இதைப்பற்றி விஞ்ஞானிகள் வெகு காலம் வரை ஒன்றும் கூறுவதற்கில்லாமல் இருந்தனர். ஆனால் சமீபத்தில் அதற்குக் காரணம் போடோஸ்பியரில் உள்ள நெகடிவ் ஹைட்ரஜன் துகள்கள் எனக் கண்டு பிடித்திருக்கின்றனர். ஹைட்ராஜன் அணுவுடன் இயற்கையாயுள்ள ஒரு எல்கட்ரானோடு மற்றொரு எலெக்ட்ரானும் சேர்ந்திருப்பதை நெகடிவ் ஹைட்ரஜன் துகள் (Negative Hydrogen ion) எனப்படும். பூமியில் இவ்விதத் துகள்கள் கிடையாது. ஆனால் இவ்விதத் துகள் சூரியனை அடுத்துள்ள போடோஸ்பியரில் இருப்பதால், வெளிச்சம் சூரியனிடத்திலிருந்து நேரே வருவதற்குப் பதிலாகப் போடோஸ்பியரிலிருந்து சிதறி வருவதாகத் தெரிகிறது.

இவ்வித போடோஸ்பியரின் மேல் பரப்பில் தான் சூரியனின் கரும்புள்ளிகள் (sun spots) உண்டாகின்றன. அவைகளைப் பற்றிய உண்மைகள் இன்னும் எவ்வளவோ தெரியவேண்டியிருக்கின்றன. அவைகள் சூரியனை அடுத்துள்ள வாயு மண்டலத்தின் கோளாறினால் ஏற்படுகின்றன எனக் கருதப்படுகின்றது. போடோஸ்பியரின் மற்ற பாகத்தைக் காட்டிலும் சற்றுக் கறுப்பாயிருந்தால் அது கரும்புள்ளி எனப்படும். அவைகளின் உஷ்ணநிலை 1000°C லிருந்து 1500°C வரை இருக்கும். அவைகள் வெளிவிடும் சக்தி, போடோஸ்பியரில் அதே பரப்புள்ள பாகத்திலிருந்து வெளிவிடும் சக்தியில் பத்தில் ஒரு பாகம் இருக்கும். இக்கரும் புள்ளிகள் வெவ்வேறு அளவில் தோன்றும். இவைகள் இருக்கும் காலமும் வேறுபடும். சிறு கரும் புள்ளிகள் 500 மைல் விட்டமிருக்கும். பெரும் கரும்புள்ளிகள் பல லட்சக்கணக்கான சதுர மைல்கள் பரப்புடையதாக விருக்கும். சில கரும்புள்ளிகள் சில நாட்கள் மட்டுமே தோன்றி நின்று பிறகு மறைந்து விடும். பெரிய கரும்புள்ளிகள் பல மாதங்களாகத் தோன்றி விளங்குவதாகவும் தெரிகிறது.

இக்கரும் புள்ளிகள் சூரியனின் துருவங்களில் தோன்றுவதில்லை. பெரும்பாலும் சூரிய அக்ஷரேகை (Solar Equator) யில் தான் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் என்னவென்று இன்னும் தெரியவில்லை.

கரும்புள்ளி மிகப் பெருங் காந்த சக்தியுடையது. பூமியின் காந்த சக்தியைப் போல் 500 மடங்கு பெரியது. இக்கரும்புள்ளி பெரிய மின் காந்தமாகவும் கருதப்படுகின்றது. இப்பெரிய மின் காந்தத்தை உண்டாக்கச் சாதாரணமாக ஆயிரம் பிலியன்* ஆம்பியர்கள் தேவைப்படும். ரேடியோ அஞ்சலி செய்யப்படுவது இக்கரும் புள்ளியால் மிகவும் பாதிக்கப்படுகிறது. சாதாரணமாக கரும்புள்ளி ஒன்று தோன்றிய எட்டு நிமிடத்திற்குப் பிறகு குறு அலை (Short wave) ரேடியோ அஞ்சலி செய்வது கடினமாகி விடுகிறது.

ஆனால் 1947ம் ஆண்டு எப்ரல் மாதம் சுமார் 6 மிலியன் சதுர மைல் பரப்புள்ள பெரிய கரும்புள்ளி தோன்றிய பொழுது ரேடியோ செய்திப் போக்குவரத்துக்கு ஒருவிதத் தடையும் ஏற்படவில்லை. இது எல்லோருக்கும் வியப்பை அளித்தது. ஆனால் இதன் காரணம் அறிய முடியவில்லை. இக்கரும்புள்ளிகளைப் பற்றி மக்கள் பலவாறாக எண்ணி வருகிறார்கள். போர், சமாதானம், தொழில், முன்னேற்றம், வெப்பதட்ப நிலை முதலியவை கரும்புள்ளிகளால் ஏற்படுவதாகக் கருதப்படுகிறது. இன்னும் மக்கள் உணர்ச்சியும்கூட இவைகளால் உண்டாவதாகக் கருதுகிறார்கள். ஆனால் இவைகள் எவ்வளவு தூரம்

*ஆம்பியர் என்பது ஒரு மின்சக்தி அளவு.

உண்மை என்பது இன்னும் தெரியவில்லை. வான நூலாசிரியர்கள் கடந்த இருநூறு ஆண்டுகளாக இக்கரும் புள்ளிகள் தோன்றும் இடம், காலம் மற்றும் இத்தகைய குறிப்புகளை மிகவும் சிரமப்பட்டுச் சேகரித்துள்ளனர். கரும்புள்ளிகளினால் மற்றொரு முக்கிய விவரமும் தெரிகிறது. அது யாதெனில், சூரியன் திடப்பொருளாக மாறிக்கொண்டுவரவில்லை என்பதேயாம். சூரியன் அக்ஷரேகைப் பக்கம் ஒருதடவை சுற்றுவதற்கு $25\frac{1}{2}$ நாட்கள் ஆகின்றன, ஆனால் துருவங்களின் பக்கம் ஒருதடவை சுற்றுவதற்கு 27 நாட்களும் ஆகின்றன. இதற்கும் காரணம் தெரியவில்லை.

சூரியனிடம் ஒளி வீச்சுகள் (Solor prominences) தோன்றுவதுண்டு. இவை மிகவும் வியத்தற்குரியவை. இவை போடாஸ்பியரின் மேல்பாகத்திலிருந்து பல உருவங்களிலும், வகைகளிலும் கிளம்பும் நெருப்புப் போன்ற ஒளி வீச்சாகும். இவை சில காலங்களில் வெகுநேரம் தென்படும். இவைகளில் சில, பல ஆயிரம் மைல்கள் உயரம் வரை செல்லும். மற்றவை சூரியனின் மேல்பாகத்திலிருந்து கால மில்லியன் மைல்கள் உயரம் வரை செல்லும். அவ்வாறு அவை உயரக் கிளம்பும் போது, செகண்டிற்கு 100 மைல் வேகத்தில் செல்லும். சில ஒளி வீச்சுகள் அவ்வளவு உயரத்திலிருந்து மறுபடியும் சீக்கிரமே விழுந்துவிடும். அப்படி விழும்போது, மில்லியன் டன் எடையுள்ள ஒரு கனமான பொருள் சூரிய கவர்ச்சியினால் இழுக்கப்பட்டு எவ்வாறு விழுமோ அவ்வாறே இவ்வொளி வீச்சுகளும் விழும். சில ஒளி வீச்சுகள் ஒருமணி நேரம் மட்டுமே இருக்கும். நாட்கணக்கில் இருக்கும் ஒளிவீச்சுகளும் உள்ளன.

சூரியனைச் சுற்றி போடோஸ்பியரோடு இன்னும் இரு வாயுவெளி (Atmosphear) கள் உள்ளன. போடோஸ்பியருக்கு மேல் அதைச் சுற்றி ஒரு வர்ணமண்டலம் உண்டு. அதற்குக் க்ரோமோஸ்பியர் (Chromosphere) என்பது பெயர். முழு சூரிய கிரகணத்தின்போது இம்மண்டலம் ஒரு வர்ணத்துடன் தோன்றுவதால் இவ்வாறு பெயர் வந்தது. இவ்வர்ண மண்டலத்தில் நகரும் எரி கம்பிகள் (moving filaments) நிறைந்துள்ளதாகக் காணப்படும் அதைக் குறுக்களவில் பார்த்தால், நீண்டும் குறுகியதாகவும் வளர்ந்திருக்கும் புல் வெளியைப்போல் இருக்கும். இவ்வெரிகம்பிகளில் சில 5000 மைல் வரையிலும் மற்றும் சில 10,000 மைல் வரையிலும் கூட நீண்டிருக்கும் இவ்வர்ண மண்டலத்தைப் பற்றி ஆச்சரியப் படத்தக்க செய்தி ஒன்று கிடைத்திருக்கிறது. போடோஸ்பியரை அடுத்துள்ள இவ்வர்ணமண்டலத்தின் உஷ்ணநிலை 5000°C வெப்பநிலையை விட குறைவாயிருக்கும் என்று எல்லோரும் எதிர்பார்ப்பார்கள், ஆனால் அதற்கு மாறாக வான நூலாசிரியர்கள் வாண மண்டலத்தின் வெப்பநிலை 20,000°Cக்கு குறைவில்லாமல் இருப்பதாக எண்ணுகின்றனர். இதற்கும் காரணம் கூறுவதற்கு விஞ்ஞானிகளால் இயலவில்லை.

வர்ணமண்டலத்தைச் சுற்றி ஒரு வாயுவெளி இருக்கிறது. அதற்குக் கொரோனா (corona) என்று பெயர். அது முழு சூரிய கிரஹணத்தின் பொழுது தான் நன்றாகத் தெரியும். கொரோனாவில் என்ன இருக்கிறது என்பதைக் குறித்து இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் இதன் வெப்பநிலை மட்டும் வர்ண மண்டலத்தின் வெப்ப நிலையை விட அதிகமாக இருப்பதாகத் தெரிகிறது.

சூரியனுடைய சக்தியானது அணு சக்தி முறைகளைக் கொண்டுதான் உண்டாகிறது என்பது நன்கு தெரிந்த விஷயமே. இது எப்படி

நடைபெறுகிற தென்பதைச் சுருக்க மாகப் பார்ப்போம். சூரியனின் நான்கு (Hydrogen) அணுக்கள், ஒரு ஹீலிய (Helium) அணுவாக மாற்றப் படுகின்றது. ஆனால் நான்கு நீரக வாயுவின் அணுக்களின் மொத்த நிறை ஒரு ஹீலிய அணுவின் நிறையைவிட சற்று அதிகம். ஆகவே மேற்கூறிய மாறுதல் ஏற்படும் போது ஏஞ்சி நிற்கும் மிகச்சிறிய நிறை யானது காமாக் கதிர்களாக (gamma-rays) மாற்றப்படுகின்றது.

பொதுவாக விநாடிக்கு 564 மில்லியன் டன்கள் நிறையுள்ள நீரகவாயு, 560 மில்லியன் டன்கள் நிறையுள்ள ஹீலியமாக மாற்றப்படுகின்றது. இந்த மாறுதலில் எஞ்சிநிற்கும் 4 டன்கள் நிறையும் சக்தியாக மாற்றப் படுகின்றது. ஆகவே சூரியன் பரந்த வெளியில் நினைக்கவொண்ணாத சக்தியை வெளிவிடுவதை நாம் காண் கிறோம்.

இவ்வாறு சூரியன் தனது சக்தியை உண்டாக்கிக் கொள்வது நமக்கு இரண்டு விதங்களில் வியப்பை உண் டாக்குகின்றது. அவையாவன: ஒன்று, சூரியன் எப்படி இவ்வளவு மிகுதியான சக்தியைப் பெற்றிருக் கிறான் என்பது. மற்றொன்று, சூரிய னின் சக்திக்குக் காரணமான அணு சக்தி மாறுதல்கள் மிக மெதுவாக நடைபெறுகிற தென்பது.

உதாரணமாக ஒரு மில்லியன் ஆண்டுகளில் சூரியனுள்ளே இருக்கும் மொத்த நீரகவாயுவில் ஒரு சதவீதம் தான் ஹீலியமாக மாற்றப்படுகின்றது. சூரியனுக்கு வயது சுமார் 2 மில்லியன் ஆண்டுகள் எனக் கணக்கிடப்பட் டிருக்கின்றது. அப்படியாயின் கணக் குப்படி சூரியனுள் இருக்கும் 2 சதவீத நீரகவாயுதான் ஹீலியமாக மாற்றப்பட்டிருக்கவேண்டும். ஆகவே சூரியன் நினைக்கவொண்ணாத அளவு சக்தியை உடைய ஒரு பொக்கிஷம் எனக் கருத வேண்டும்.

சூரியனுள் அணுசக்தி மாறுதல்கள் ஏற்படும்போது காமாக்கதிர்கள் உண்டாகின்றன எனக் கூறினோம். அப்படியாயின் ஏன் அக்கதிர்கள் அனேகமாக வெளியிடப்படுவதில்லை? இக்கதிர்கள் குறைந்த அளவில் பூமி யின்மேல் பட்டாலே பூமியில் ஓர் உயிரும் வாழ முடியாது. அப்படியா யின் சூரியனுள் உண்டாகும் எல்லா காமக்கதிர்களும் வெளியிடப்பட்டு பூமியின்மேல்பட்டால் என்ன ஆவது! நல்லவேளையாக சூரியன் போட்டாஸ் பியரே இக்கதிர்களின் பெரும்பாகத் தைத் தடுத்துவிடுகின்றது.

சூரியனின் உள்ளகத்தேயிருந்து புறப்படும்போது இக்கதிர்களின் அதிர்வு எண் (Frequency) மிக மிக அதிகமாக இருக்கும், ஆனால் இவை புறப்பட்டதிலிருந்து சூரியனின் மேல் பாகத்தை அடைவதற்கு வழி யில் பல தடைகள் கடந்து வர வேண்டியிருக்கும். அப்படி அவை சூரியனின் மேல் பாகத்தை அடை வதற்குச் சுமார் 10,000 ஆண்டுகள் பிடிக்கும். ஆகவே அவை சூரியனின் மேல்பாகத்திற்கு வருவதற்குள் தங்கள் வீரியத்தில் பெரும் பகுதியை இழந்துவிடுகின்றன. அவை களின் அதிர்வு எண்ணும் பெரு அளவில் குறைந்துவிடுகின்றது. இவ் வாறு காமாக்கதிர்களின் பெரும் பகுதி தவிர்க்கப்படுகின்றது. அப் படியே இல்லாமல் கேட்டை விளை விக்கக் கூடிய ஒரு சிறு பகுதி வெளி யிடப் பட்டாலும், அவைகளைச் சூரி யனின் கோரோனாவில் இருக்கும் அணுக்களும், நம் பூமியின் காற்று மண்டிலத்திலிருக்கும் பரமாணுக் களும் தடுத்து விடுகின்றன.

எகிப்தில் இராணுவப் புரட்சி

‘ஹொராடாடஸ்’

1952ம் ஆண்டு ஜூலை மாதம் 23ம் தேதி, எகிப்திய இராணுவத்தினர், ஜெனரல் முகம்மது நாகிப் தலைமையில் எகிப்திய அரசாங்கத்தைக் கைப்பற்றினர். எகிப்தின் கப்பற்படை, விமானப்படை, தரைப்படை, டாங்கிப்படை ஆகிய இராணுவத்தின் எல்லாப் பகுதியினரும் இந்தப் புரட்சியில் கலந்துகொண்டார்கள். ஒரு சொட்டு இரத்தம்கூடச் சிந்தாமல், புரட்சியை வெற்றிபெறச் செய்தது, இராணுவத்தினரின் அரிய, பெரிய செய்கை. புரட்சி பற்றிய செய்தியை ராணுவத்தாரால் கைப்பற்றப்பட்ட எகிப்து நாட்டு ரேடியோ அன்று காலை $7\frac{1}{4}$ மணிக்கு அறிவித்தது. ஒலிப்பரப்பைக் கேட்ட எகிப்திய மக்கள் மகிழ்ச்சியில் திளைத்தார்கள்; வெளி நாட்டார்கள் இச்செய்தி கேட்டு வியப்புற்றார்கள்.

ஜூலை மாதம் 26-ம்தேதி யன்று மன்னர் பரூக் முடிதுறந்து, ஆறு மணி நேரத்தில் நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென்று முகம்மது நாகிப் கட்டளையிட்டார். வேறு வழியின்றி, மன்னர் பரூக் தம் சேனாதிபதியின் கட்டளைக்குத் தலை தாழ்த்தித் தன் ஏழு மாதக் குழந்தை அகம்மது பாடுவின் சார்பாக முடிதுறந்தார். அன்று சாயுங்காலமே, அவர் இத்தாலிக்குப் புறப்பட்டார். அவருடன்கூட அவர் மனைவி, ராணி நாரிமனும், குழந்தை மன்னன் அகம்மது பாடுவும் சென்றனர்.

எகிப்து நாட்டை, முகம்மது அலியின் வம்சத்தினர் ஆண்டு வருகிறார்கள். இவர்கள், முதலில் துருக்கியின் கீழும், பிறகு பிரிட்டிஷாரின் பாதுகாப்பிலும் எகிப்தை ஆட்சி செய்தார்கள். இந்த முகம்மது அலியின் வம்சத்தில் இப்போதிருக்கும் ஒரே நேரடியான வாரிசு, மன்னர் பரூக்கின் ஏழு மாதக் குழந்தை அகம்மது பாடு தான். ஆகவே, அக்குழந்தையை எகிப்திற்கும், சூடானுக்கும் மன்னனாகப் பிரகடனம் செய்திருக்கிறார்கள். குழந்தை மன்னன், வாலிபனாகும் வரை, நாட்டை ஐந்து பேர் கொண்ட ஒரு குழுவினர் ஆண்டு வருவார்கள். 1923ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட எகிப்து நாட்டின் அரசியல் சட்டத்தில், மன்னர் முடிதுறப்பதற்கு எதும் வகை செய்யப்படவில்லை என்பது இங்குக் கவனிக்கத்தக்கது.

உலக சரித்திரத்தில், 1936 ஆண்டு முதல் இதுவரை பத்து மன்னர்கள் முடிதுறந்தார்கள். இங்கிலாந்தின் எட்டாவது எட்வர்டு மன்னர் 1936ல் முடிதுறந்தார். பெல்ஜிய நாட்டின், மன்னர் லியோ பால்டு 1941ல் முடிதுறந்தார். ஹாலண்டு தேசத்து அரசி வில்ஹெல்மினா 1948ல் முடிதுறந்தாள். மற்றும், ருமேனியா தேசத்து அரசர் ஜாக், யூகோஸ்லாவியா நாட்டு மன்னர் இரண்டாவது பீட்டர், பல்கேரியா மன்னர் இரண்டாவது சைமன், இத்தாலி தேசத்து மன்னன் மூன்றாவது விக்டர் இமானுவல், அவருடைய மகன் உம்பர்டோ ஆகிய ஆறுபேரும் 1939க்குப் பிறகு முடிதுறந்த தென்கிழக்கு ஐரோப்பிய மன்னர்கள். எகிப்திய நாட்டு மன்னர் பரூக் அண்மையில் முடிதுறந்த பத்தாவது அரசர்.

மன்னர் பரூக் முடிதுறக்க வேண்டிய நிலைமை எவ்வாறு ஏற்பட்டது? இந்த நிலைமைக்கு மன்னர் பரூக்தான் காரணம். பரூக் மன்னனின் சூதாட்டங்கள், காதல் விளையாட்டுகள் எல்லாம், அரண்மனையின் கற்சுவர்களையும் தாண்டி மக்களின் காதுகளை எட்டின. கொடுங்கோலின் உருவம் பரூக்; ஊழல்களின் இருப்பிடம் பரூக்; நிலப்பிரபுத்துவத்தின் நெடும் பிண்டம் —இவ்வாறு மக்கள் மன்னனை மதிப்பிட்டார்கள்.

பரூக்கின் ஏதேச்சாதிகாரமும், ரகஸ்ய போலீஸ் ஆட்சியும் மக்களின் ஆத்திரத்தைத் தூண்டின. 1948ம் ஆண்டிலிருந்தே பரூக் மன்னனின் உயிருக்கு உலை வைக்க அநேகர் சூழ்ச்சி செய்தனர். ஆனால் அரசரின் ஒற்றர்கள் அவற்றைத தக்க சமயத்தில் கண்டுபிடித்து அரசரைக் காப்பாற்றினார்கள்.

ஜனவரி 27ம் தேதி, கெய்ரோவில் நடந்த கலவரங்களையும், கொள்ளைகளையும் எகிப்திய மக்கள் மறக்கவில்லை. அக்கலகங்களில் உயிரிழந்த அந்நியர்களையும், சூறையாடப்பட்ட சொத்துக்களையும் அவர்கள் மறக்கவில்லை. மன்னர் பரூக்தான் இக்கலகங்களைத் தூண்டிவிட்டார் என்று அவர்கள் நம்புகிறார்கள். பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்ற வாப்த் (wafd) மந்திரி சபையைக் கவிழ்க்கும் நோக்குடன், பரூக் இக்கலகங்களைத் தூண்டிவிட்டார் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

வாப்த் அரசாங்கத்தைக் கலைத்ததும், மன்னர் ஊரடங்கு சட்டத்தைப் (Martial Law) பிறப்பித்தார். அது முதல் மன்னர் சர்வாதிகாரமாக ஆட்சி செய்யத் தொடங்கினார். மன்னன் விருப்பப்படி அநேக மந்திரிசபைகள் கூடின; கலைந்தன. இந்தச் சர்வாதிகார ஆட்சியைப் பொதுமக்கள் எதிர்த்தார்கள். நாடெங்கும் ஊரடங்கு சட்டத்தை நீக்கக் கிளர்ச்சிகள் வலுத்தன. இராணுவத்தைச் சேர்ந்த 50 அதிகாரிகள், இந்தச் சட்டத்தை உடனே நீக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்தார்கள். இராணுவத்தினரிடையே நிலவும் அதிருப்தியின் எதிரொலியே இந்த விண்ணப்பம்.

1948ம் ஆண்டில் நடைபெற்ற, பாலஸ்தீனப் போரில் எகிப்திய இராணுவப் படுதோல்வி படைந்தது. இத்தோல்விக்குப் போர் இலாகாவின் திறமைக் குறைவே காரணம் என்று இராணுவத்தினர் நினைத்தார்கள். பரூக் மன்னர், திறமையற்றவர்களுக்கெல்லாம், இராணுவத்தில் பெரிய, பெரிய பதவிகளைக் கொடுத்ததும், முகம்மது ஹைதர் பாஷாவை ராணுவத்தின் சேனாதிபதியாக நியமித்ததும்தான் இத்தோல்விக்குக் காரணம் என்று அவர்கள் கருதினார்கள்.

எகிப்திய இராணுவத்திற்குப் போர்க் கருவிகளை விற்றவர்கள், குறைபாடுடைய சாமான்களைக் கொடுத்துக் கொள்ளை இலாபம் பெற்றார்கள் என்பது இராணுவ அதிகாரிகளுக்குத் தெரியவந்தது. சரியான முறையில் தயாரிக்கப்படாத குண்டுகளையே, எகிப்திய சிப்பாய்கள் உபயோகிக்க நேர்ந்தது. இதன் பலனாய்க் குண்டுகள் குறிப்பிட்டக் காலத்தில் வெடிக்காமல், முன்னதாகவே வெடித்ததால், எதிரிகள் இறப்பதற்குப் பதிலாக, குண்டுகளை உபயோகித்தவர்களே இறந்தார்கள். இப்படிக் குறைபாடுடைய கருவிகளைக் கொடுத்து 180,000 எகிப்திய பவுன்களைக் கொள்ளையடித்தார்கள் என்ற செய்தி எங்கும் பரவியது. சிப்பாய்கள் சினந்தார்கள். இந்தப் பாலஸ்தீனப் போர்க்கருவிகளின் ஊழலைக் கண்டுபிடித்து, குற்றம் செய்தவர்களைக் கொடுந்தண்டனைக்கு ஆளாக்குவார் மன்னர் பரூக் என்று இராணுவ அதிகாரிகள் நினைத்தார்கள். ஆனால், பரூக் குற்றவாளிகளைத் தண்டிக்காமல அவர்களுக்கு ஆதரவு கொடுத்துக் காப்பாற்றினார்.

நாளுக்கு நாள் அரசாங்கத்தில் லஞ்ச ஊழல் அதிகரித்தது; வறுமை மிகுந்தது. எகிப்தின் பொருளாதாரம் விரைவில் நிலைகுலைந்து அழிவுறும் என்று பலர் நம்பினார்கள். விளைந்த பருத்தி விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்தது. இந்த நிலைமை நீடித்தால் இன்னும் சில மாதங்களில், அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கக்கூட அரசாங்கத்திடம் பணம் இருக்காது என்ற வதந்தி நாடெங்கும் பரவியது. விவசாயிகள் குத்தகையும், வரியும் கொடுக்க முடியாமல் இன்னலுற்றார்கள்.

இந்தச் சூழ்நிலையை, முகம்மது நாகிப் தம் சூழ்ச்சிகளுக்கு வெற்றிகரமாகப் பயன்படுத்திக் கொண்டார். இதற்கு முன்பே மன்னர் பரூக்கிற்கும், முகம்மது நாகிப்பிற்குமிடையே மனக்கசப்பு வளர்ந்திருந்தது. முன்பு பிரதம மந்திரியாக இருந்த சிர்ரி பாஷா, முகம்மது நாகிபைப் போர் மந்திரியாகச் செய்வது நலமென்று மன்னர் பரூக்கிடம் தெரிவித்திருந்தார். ஆனால் பரூக் இந்த வேண்டுகோளை நிராகரித்துத் திறமையற்ற தம் மைத்துனரைப் போர் மந்திரியாக்கினார். மன்னரின் இந்தச் செய்கை ஜெனரல் நாகிப்பின் கோபத்தைத் தூண்டியது. அந்தச் சினத்தில் விளைந்ததுதான் இந்தப் புரட்சி. சூழ்நிலை உதவி செய்ததால் புரட்சி வெற்றி பெற்றது.

இந்தப் புரட்சி, முடியாட்சியை எதிர்த்துச் செய்யப்பட்டதன்று. மன்னர் பரூக்கின் குழந்தை அகம்மது பாடுவை அரசராக்கியிருப்பது இதைத் தெளிவாக்குகிறது.

இந்தப் புரட்சி, இப்போதிருக்கும் சமுதாய அமைப்பையோ அல்லது பொருளாதார அமைப்பையோ மாற்றி அமைக்கும் நோக்குடனும் செய்யப்படவில்லை. புரட்சித் தலைவரான முகம்மது நாகிப்பின் அறிக்கை இதைத் தெளிவாக்குகிறது. இப்போதிருக்கும் அரசியல் சட்டத்தின் விதிகளுக்குப் புறம்பாக ஒரு காரியமும் செய்வதில்லை என்று அவர் சொல்லியிருக்கிறார்.

எகிப்திய மக்களின் விருப்பப்படி பிரிட்டிஷ் துருப்புக்களைச் சூயஸ்கால்வாய்ப் பகுதியிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்ற நோக்கமும் இப்புரட்சித் தலைவருக்கு இல்லை.

நைல் நதிப் பள்ளத்தாக்கைச், சூடானுடன் இணைத்து அவற்றை எகிப்திய அரசாங்கத்தின்கீழ்க் கொண்டு வரவேண்டுமென்ற எண்ணமும் இவருக்கில்லை.

பிறகு, எதற்காக இந்த ராணுவப் புரட்சி செய்யப்பட்டது? புரட்சியின் நோக்கங்களை முகம்மது நாகிப் விளக்கிக் கூறியிருக்கிறார். சுருங்கக் கூறின், இராணுவத்தில் போதிய மாறுதல்களைச் செய்து அதைத் திறம்பட அமைக்கவும், அரசாங்க அலுவல்களில் இன்று மலிந்துள்ள ஊழல்களைப் போக்கி ஒழுங்குபடுத்தவும், ஜனநாயக முறைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளைப் போக்கவும், அரசியல் சட்டத்தின்வழி நடந்து நடைமுறை வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதும் தான் புரட்சியின் நோக்கங்கள்.

புரட்சிக்காரர்கள் வெற்றிப் பாதையில் காலெடுத்து வைத்துவிட்டார்கள். இதற்குப் பொதுமக்களின் ஒருமித்த ஆதரவுதான் முக்கிய காரணம். இந்த வலிமை வாய்ந்த ஆதரவை இழக்கா வண்ணம் ஜெனரல் முகம்மது நாகிப் நடந்து கொள்வாரா? இதற்குப் பதில் இப்போது அறுதியிட்டுக் கூறமுடியாது. இப்போதிருக்கும் நிலைமையில் நமக்குக் கிடைப்பதெல்லாம் அவருடைய அறிக்கைகள்தான். அவருடைய சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள தொடர்பைக் காலம்தான் தீர்மானிக்க வேண்டும்.

★

பறவைகளின் இல்வாழ்வு

திரு. ம. ச. ஆனந்தன்

தாழ்ந்த உயிரினங்க ளிடையே இல்வாழ்வு என்பது பறவைகளைத் தவிர மற்றவைகளுள் போற்றத்தக்க வகையில் அமையவில்லை.

பூச்சிகள் உலகத்தில் தேன் கூட்டினை ஓர் 'இல்லம்' என உறுதியாகக் கூற முடியாதெனினும், அது 'இல்லத்தை' ஒரு வகையில் ஒத்து நிற்கும். தேனீக்களில் அரசி-ஈக்களாலும் சிறு தேனீக்களை கவனிப்பது இல்லை. ஆண்-ஈ இனப் பெருக்கில் தனது வினை முடிந்ததும் இறந்து விடுகிறது; அரசி-ஈயின் வினை முட்டை இடுவது ஒன்றே. சிறு தேனீக்களை வளர்த்தல் வேலையாள் ஈக்களின் கடமை. குழந்தைகளைப் பேணும் செவிலிகள் போன்றவைகளே இவை. சிறு-ஈக்களுக்கும் பெற்ற ஈக்களுக்கும் இடையே அன்புப் பிணிப்பு ஒன்றும் இல்லை. ஆகையால் தேன்கூட்டை 'இல்லம்' என்பது பொருந்தாது; "குழந்தைகளின் வளர்ப்பு இல்லம்" (nursery) என்றே இதைக் கருதவேண்டும்.

இனி, குளவிகளின் வாழ்வைப் பார்ப்போம். இவை சிறுசிறு களிமண் அறைகள் அமைத்து அவை ஒவ்வொன்றிலும் ஒரு முட்டை இட்டு, அம்முட்டை பொரிந்து புழுவாகி இறகைப் பெற்று சிறு குளவியாக வெளிவரும் வரையில் அதற்கு வேண்டிய உணவையும் அவ்வவ் வறைகளிலேயே வைத்து அவற்றை மூடிவிடுகின்றன. சிறு குளவிகளைக் காணவோ, கண்டு உடன்வைத்து வளர்க்கவோ பெற்ற குளவி அவாவுவதில்லை. சிறு குளவிகள் தாமாகவே வளருகின்றன.

சிலவகை மீன்களும் கூடுகட்டித் தம் குஞ்சுகளைப் பேணி வளர்க்கின்றன. இங்கே, பெற்றோரின் அன்புப் பிணிப்பு உள்ளதாகக் கொள்ளலாம்; ஆயினும் இதை 'இலவாழ்வு' என்றும் இவை 'இல்லத்தில்' வாழ்கின்றன என்றும் கூறுதல் பொருத்தமாகாது.

பாலூட்டிகளின் (mammals) வாழ்வை ஆராயின், அவற்றிடையே தாய்மையின் பண்புகள் பல இயற்கையாகவே அமைந்துள்ளதைக் காண்கிறோம். தாய் தன் குட்டிகளைக் காத்து வளர்ப்பதில் வியக்கத்தக்க விழிப்பும் வீரமும் கடமை யுணர்ச்சியும் காட்டுகிறது.* ஆயினும் இப்பிராணிகள் இல்லமமைத்துக் குடும்ப வாழ்வு நடத்துகின்றன எனக் கூறுவதற்கில்லை. குட்டிகளுக்கு ஆண் உணவு தந்து வளர்க்க அவாவுவதே இல்லை; பெண்ணே இவ்வேலையைச் செய்கின்றது. மேலும், இவை தங்களுக்கென ஒரு பெண் பிராணியையோ அல்லது ஒரு ஆண் பிராணியையோ நிலையான வாழ்க்கைத் துணையாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டு வாழ்வதில்லை.

பிராணிகளுள் ஒரு வகைக் குடும்ப வாழ்வு நடத்துவன சிங்கமும் 'பீவர்' (beaver) எனனும் ஒருவகை அணை கட்டி நீர்நாயுமே. சிங்கங்களுள் தோன்றும் ஆண் பெண் உறவு அவற்றின் ஆயுள் முழுவதும் நிலைத்திருப்பதாகக் கூறுகின்றனர். 'பீவர்'களும்

---

*"கல்லயற் கலித்த கருங்கால் வேங்கை
அலங்கலந் தொடலை அன்ன குருளை
வயப்புனிற் றிடும்பிணப் பசித்தென வயப்புலி
புகர்முகஞ் சிதையத் தாக்கிக் களிறட்(டு)
வருமிசை உராறும் உட்குவரு நடுநாள்"

என வரும் நற்றிணை வரிகள் (நற்றிணை 383) புலியின் போற்றத்தக்க காப்புத் தன்மையை விளக்கும்.

குடும்பம் குடும்பமாகக் கூடி வாழ்கின்றன. இக்குடும்பங்களின் தலைவர்கள் எனக் கருதக்கூடிய 'பீவர்கள்' தத்தம் சுறுசுறுப்பாலும் வினையாற்றலாலும் ஓடைகளைத் தடுத்து மண்ணாலும் மரத் துண்டுகளாலும் கட்டிய அறைகளில் இவை வசிக்கின்றன.

புள்ளினத்தில் இல்வாழ்வு பரந்து காணப்படுகிறது, அவைகளுக்குக் கூடு உண்டு; அன்புப் பிணிப்பு உண்டு. பறவைகள் முட்டையிடும் ஒவ்வொரு பருவத்திலும் துணை தேடி அத்துணையுடன் வாள்கின்றன. இத்தொடர்பு வாழ்நாள் முழுவதும் இல்லையாயினும் ஒவ்வொரு தரமும் கூடுகட்டி அதில் இட்ட முட்டைகளைப் பொரித்து வளர்த்துப்பின் குஞ்சுகளை விட்டுப் பிரியும் வரையேனும் நிலைத்து இருக்கிறது. இவ்வகையான குடும்ப வாழ்வு உடையனவற்றிற்குத் தவிட்டுக்குருவி (babbler), சிட்டுக்குருவி (sparrow), தேன்சிட்டு (sun-bird), அயோரா (iora); நாகணவாய்ப்புள் (myna-மைனா), தையற்காரக்குருவி (tailor bird), தூக்கணாங்குருவி (weaver bird) போன்றவைகளை உதாரணங்களாகக் கூறலாம். சில வகைப் பருந்துகளும், காட்டு வாத்துக்களும் நிலையாக ஒரே வாழ்க்கைத் துணையுடன் கூடி இருக்கின்றனவாம். ஆர்தர் ஆலன் (Arthur Allen) என்பவர், கனடாவில் உள்ள காட்டு வாத்துக்கள், தத்தம் துணைகளை விட்டுப் பிரித்து வைக்கப்பட்டாலும் அவை மீண்டும் வேறு துணைகளை நாடுவதில்லை என்று கூறுகிறார். உயிரினங்களுள் மிக உயர்ந்த வகை எனக் கருதப்படும் மனிதர்களே இவ்வாறு வாழமுடியாத போது, பறவைகளுள் இக்குணம் தோன்றுவது வியக்கத்தக்கதே. சில இனப்பறவைகள் நான்கு அல்லது மூன்று முறை முட்டையிட்டுக் குஞ்சு பொரித்துக் குஞ்சுகளை வளர்த்துவிட்டுப் பின் பிரிந்துவிடுகின்றன.

ஆயினும் பறவைகளிடையே பலதார வாழ்க்கையைக் காண்பது அரிதெனக் கூறுவதற்கில்லை. காட்டுக் கோழி யினங்களிடையே பலதார வாழ்வு காணப்படுகிறது. ஆண் இப்பறவை ஒருவகைக் கூடுகட்டி, அதில் தன்னுடைய பலபேடைகளை முட்டையிட வைத்து, அத்தனை முட்டைகளையும் தானே அடைகாத்துப் பொரித்து வளர்க்கிறது.

பல ஆண்களைக் கூடும் வழக்கம் சார்பு வாழ்வுடைய(parasitic) குயில் போன்ற இனங்களில் காணப்படுகிறது. அவ்வினங்களில் ஆண்பறவைகள் பேடைகளைக் காட்டிலும் எண்ணிக்கையில் அதிகரித் துள்ளதாலேயே இவ்வழக்கம் ஏற்பட்டு நிலைக்கின்றது போலும். இவை தங்கள் முட்டைகளை மற்ற பறவைகளின் கூட்டில் இட்டுவிடுவதால் ஆண்களும் பேடைகளும் கவலையின்றித் தம்மிச்சையாகத் திரிகின்றன.

மனிதரில் பெண்களே அதிகமாக வீட்டு வேலைகளைச் செய்வதுபோல பறவைகளில் கூடுகட்டும் தொழிலை அதிகமாகப் பேடைகளே செய்கின்றன. கூடு கட்டுதற்கு வேண்டிய பொருள்களை ஆணும் சேர்ந்து கொண்டுவரும். இதற்காக, கூட்டைத் தன் அலகாலேயே அமைக்காவிடினும் தன் பேடை செல்லுமிடமெல்லாம் இணைபிரியாது ஆணும் பறந்து சென்றுகொண்டே இருக்கும். சில ஆண் பறவைகள் அவ்வப்பொழுது இசையெழுப்பிப் பாடியும் பேடைக்குக் களிப்பூட்டும்,

ஆகவே பறவைகளுள் குடும்ப வாழ்வே இல்லையென்று கூறமுடியாது. பொதுவில் அவற்றுள் குடும்ப வாழ்வு ஒரு வகையில் அமைந்திருப்பதால், பறவையினம் உயிரினங்களுள் உயர்ந்த மனித இனத்திற்கு அடுத்து நிற்கும்.

பறவைகளுள் ஆணோ பெண்ணோ முட்டையை அடை காக்கும். அனேகமாகப் பெண்பறவை அடைகாத்தலே

வழக்கம். காட்டுக் கோழிகளுள் ஒரு வகையில் (Argus pheasants) ஆண் கோழி, ஒரு சிறு அளவு நிலத்தைத் தேர்ந்தெடுத்து அதைச் சுத்தம் செய்யும். இச்சுத்தமான இடத்தில் குடிப் பெருக்கில் தனது வினை முடிந்ததும் அது வந்து தங்கும். பேடை முட்டையிட்டு அடைகாத்துக் குஞ்சு பொரித்துவிடும். இவ்வாறு, பேடைக்கோ அடைகாக்கும் வேலை உரியதாய் உள்ள இனங்களின் ஆண் பறவைகள் மிகுந்த அழகுடைய இறகுப் போர்வையைப் பெற்றிருக்கும்; பேடை மங்கலான நிறமுடைய இறகுகளை உடையதாகும்.

உள்ளானினத்தில், செங்கழுத்து உள்ளான் (red-necked phalarope) பலவண்ண உள்ளான் (painted snipe) என்பவைகளில் ஆணைவிடப் பேடையே மிகுந்த நிறமுடையது; விரைவாகக் கட்டப்பட்ட கூட்டில் முட்டையிட்ட பின், ஆணுக்கு அடைகாக்கும் வேலையைக் கொடுத்துவிட்டுப் பெண் பறவை அவ்விடம் விட்டகல்கின்றது.

ஆஸ்டிரேலியாவில், அழுகும் பொருள்களைச் சேர்த்துக் குவித்து மண்ணால் மூடிய கூட்டில் (mound) மூன்னிலையில் ஒரு வகைப் பறவைகள், ஊர்வன (reptile) இனத்தைப் போல் தம் முட்டைகளை மண்ணில் புதைக்கின்றன. இத்தகைய குவியல்களிலுள்ள அழுகும் பொருள்களிலிருந்து எழும் சூடே முட்டைகளைப் பொரிக்கின்றது. குஞ்சுகள் பொரிந்த உடனேயே நன்றாக ஓடுகின்றன. இக்குஞ்சுகளின் பெற்றோர்கள் குயிலினத்தைப் போன்று குஞ்சுகளைக் கவனியாது விட்டுவிடுவதில்லை. இப்பறவைகள் தங்கள் கூட்டுக் குவியலின் வெப்பத்தைக் குறைக்கவோ ஏற்றவோ, அழுகல் பொருள்களை அவ்வப்பொழுது வெளிப்படுத்தியும் கூட்டியும் செய்கின்றது. மேலும், இவை தங்களுக்கென ஒரு பெண் பிராணியையோ நிலையான வாழ்க்கைத் துணையாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டு வாழ்வதில்லை.

ஆசியா முழுவதிலும் பரவியுள்ள இருவாயக் குருவிகள் (horn-bills) ஒரு வியக்கத்தக்க இல்வாழ்வை நடத்துகின்றன. பேடை, மரப்பொந்து ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதைத்தன் கூடாக்கி விடுகிறது. பேடையை உள்ளே வைத்துக் கூட்டின் வாயை ஆண் குருவி மண்ணால் மூடிவிடுகின்றது. பேடை, அலகை வெளியே நீட்டி உணவை வாங்கக்கூடிய துளை ஒன்று மட்டும்தான் அவ்வாயில் இருக்கும். பேடை முட்டையைப் பொரிக்கும் வரை ஆண் அதற்கு உணவு அளித்து வருகிறது. பேடை எங்கே தன் வினையைச் செய்யாமல் ஓடிவிடுமோ என்று அஞ்சியே ஆண் அதை இவ்வாறு சிறைப்படுத்துகிறது என்று சிலர் கருதுகின்றனர். ஆயினும், அவ்வாறு கருதுதல் பொருந்தாது; ஏனென்றால், பெண்ணும் மரப்பொந்தின் வாயை மண்ணால் அடைக்க உதவுகின்றது. மேலும், இப்பறவைகள் பருந்தை விடப் பெரியவைகளாய் இருப்பதாலும் அவற்றின் அலகுகள் வன்மையாக உள்ளதாலும் அவை அம் மண்மூடியை எளிதில் உடைத்துவிட முடியும். ஆகையால், இத்தகைய சிறைவாழ்க்கை தம் இச்சையாகவே மேற்கொள்ளப்படுவதாகும். கூட்டின் வாயை இவ்விதம் மூடிவைத்தால் பாம்புகளினின்று முட்டைகளைக் காக்க உதவும். இப்பறவைகளில் பேடைகளின் இறகு உதிர்காலமும் (moulting-season) அடைகாக்குங் காலமும் ஒரே காலமாக இருத்தலின் அச்சிறை வாழ்வு அவற்றிற்குப் பாதுகாப் பளிக்கின்றது. பேடைக்கும் குஞ்சுகளுக்கும் ஓயாது உணவளித்து வருவதால் அவற்றின் ஆண் மெலிவடைந்து இறக்கவும் நேரிடுவதுண்டு. குஞ்சுகள் பறக்கக் கூடிய வன்மை பெற்றவுடன்

ஆண்பறவை பேடையையும் குஞ்சுகளையும் கூட்டை உடைத்து வெளிப்படுத்துகிறது.

நம்நாட்டு எழுத்தாணிப்புள், கூக்குப்புறு, மண்கொத்தி, கொண்டலாட்டி (Hoopoe) எனப்படும் பறவை வகையுள் பேடை அடைகாக்கும்வரை ஆண் அதற்கு உணவு அளித்து வருகிறது. இவற்றின் கூடும் ஒரு மரப்பொந்கே; ஆயினும் அதன் வாய் எப்பொழுதும் திறந்தே உள்ளது.

எனினும், ஆணும் பெண்ணும் மாறிமாறி முட்டையை அடைகாக்கும் வழக்கத்தை நாம் பறவையினங்களில் பெரும்பாலும் காண்கிறோம். பேடை அடைகாக்கும் போது ஆணும் அதற்கு உதவிசெய்து கொண்டே இருக்கும். இதற்கு எடுத்துக் காட்டாக, புறுவினத்தைக் கூறலாம்.*

அடைகாக்கும்போது பல பறவைகளுள் ஆணும் பெண்ணும் பிரிவதே கிடையாது. சிலவற்றுள் ஆண் தன் இனிய இசையைப் பேடைக்கு அளிக்கும். இதற்கு எடுத்துக் காட்டாகத் தேன்சிட்டு (sun-bird), கருப்புக் குருவி (black-bird), 'நைட்டிங்கேல்' (Nightingale), 'அயோரா' (iora) போன்றவைகளைக் கூறலாம்.

பொதுவில், பறவைகளில் ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து முட்டையைப் பொரித்து வளப்பதோடு குஞ்சுகளுக்கு உணவைப் பக்குவப்படுத்தியும் தருகின்றன. சில, தங்களால் பாதி செரிக்கப்பட்ட உணவைத் தருகின்றன. பறக்கக் கற்றுக் கொண்ட குஞ்சுகளும் தம் அன்பான பெற்றோர்களின் அலகுகளினின்று தங்கள் தொண்டைக்குள் உணவை வாங்க விருப்பங்கொண்டு அவைகளுடனேயே சிறிது காலம் திரிந்து கொண்டிருக்கின்றன.

இவ்வாறாக, நாம் பறவைகளினத்தில் 'குடும்ப வாழ்வினை' அத்தொடரின் உண்மைப் பொருளில் பல வகையில் கண்கூடாகக் காண்கிறோம். பெற்றோர் மனப் பான்மையுடன் மிளிரும் இயற்கை வாழ்வுடையன அவை. அப்புள்ளினங்களில் சில சிறியவையாயினும் தத்தம் கூடுகளினருகே எதிரிகள் (புள்ளின எதிரிகள்) வாராமல் காப்பது வியக்கத்தக்கதே. சார்வு வாழ்வுடைய குயிலினத்தின் குஞ்சுகளைக் காக்கும் புட்களும் தங்கள் குஞ்சுகளைப் போலவே அவைகளையும் காக்கின்றன.

புள்ளினத்தில் ஆணும் பெண்ணும், குறைந்தது ஒரு முறையேனும் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து அவைகளை வளர்த்தல் வரை சேர்ந்து வாழ்கின்றன. இவ்வாறாகப் புள்ளினத்தில் அன்பும் கடமை உணர்ச்சியும் மிகுந்த இல் வாழ்க்கை அமைந்துள்ளது.

●

*ஆண் பேடைக்கு எப்படி உதவுகின்றது என்பது,

'வண்புறப் புறவின் செங்காற் சேவல்
களரி ஓங்கிய கவைமுட் கள்ளி
முளியங் குடம்பை ஈன்றிளைப் பட்ட
வயவுநடைப் பேடை உணீஇய மன்னர்
முனைகவர் முதுபாழ் உகுநெற் பெறூஉம்'

என்னும் நற்றிணைப் பாட்டில் (384) விளக்கப் பெறுகிறது.

தமிழ்நாடு ... வணக காப்ப...
21726
சென்னை-600 008

பல சரக்கு

'செயற்குரிய செய்வார்
சிறியர்; பெரியர்
செயற்கரிய செய்விப்
பவர்'

○

குருடனுக்கு ஓவியம் செல்வமாகாது; செவிடனுக்கு இசை செல்வமாகாது. கற்பனையில் ஆழும் மனமற்றவனுக்கு இலக்கியம் செல்வமாகாது.

○

'உயிரியல் முன்னேற்றத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி ஏற்பட்டுவிட்டது. ஆனால், மனித முன்னேற்றம் இப்போது தான் தொடங்குகிறது'

— ஜூலியன் ஹக்ஸ்லி

○

கோழி போதிய அளவு நீர் குடிக்கவில்லையென்றால் முட்டையிடுவது குறைந்து விடும் ஏன் தெரியுமா? முட்டையில் 65% தண்ணீர்தான்.

○

பேலைாட்டு இசைக்கருவியாகிய பாண்டு (Band) வாசிக்கும் பொழுதும் ஏனைய இன்னிய அரங்கின் (வாத்திய கோஷ்டி) போதும் இசைவல்ல ஒருவன் கையில் ஒரு குறுங்கோல் வைத்து ஆட்டி, நீட்டி, நிறுத்தி, சுழற்றிப் பல வகை இயக்கங்களால் இசை நிகழ்ச்சியை நடத்துவதைப் பார்த்திருக்கிறோம்.

இந்த முறை நம் நாட்டுக் கூத்து (Dance) முறைகளில் இருந்திருக்கிறது. ஒழிவிலொடுக்கம் என்பது தமிழிலுள்ள தத்துவ நூல்களில் ஒன்று. அதன் குருவணக்கச் செய்யுளில், 'வேதாகமப் பவுரி வீசும் களாச நிலை' என்ற தொடர் காணப்படுகிறது. 'வேதாகமங்களின் பவுரிக் கூத்தினைப் பிரம்போடுங் கைவாரங்கொண்டு வீசி நிறுத்தும் நிலை' என்பது அதன் பொருள். பவுரிக் கூத்து என்பது, வலப்புற மிருந்து இடப்புறமாகச் சுற்றி ஆடும் ஒரு கூத்து. 'கைவாரங் கொள்ளுதல்—கூத்தை நிறுத்தற் பொருட்டு ஓகோ என்னும் அடுக்கு மொழி கூறிக் கரம் உயர எடுத்து வீசுதல்.'

○

நரம்புகளிலும் திசுக்களிலும் (Tissues) கூட ஆண் பெண் வேற்றுமை உண்டு. ஆணா, பெண்ணா என்ற ஐயம் ஏற்படும்போது இந்த விதியை வைத்து முடிவு செய்யலாம். ஒரு சிறு தோல் துணுக்கைப் பெருக்காடி (மைக்ராஸ்கோப்) வழியாக ஆராய்ந்தால் பால்—வேற்றுமை கண்டுபிடிக்கலாம் என்று மேற்கு ஒன்ட்டாரியோ பல்கலைக் கழகத்தார் தெரிவிக்கிறார்கள்.

○

Estd. 1933. Telegram: { VENKATESA, Udamalpat,

திரு

ஸ்ரீ வெங்கடேசா மில்ஸ் லிமிடெட்,

வெங்கடேசா மில்ஸ் போஸ்ட்,
உடுமலைப்பேட்டை.

○ ● ○

100 நெ. வரை மெல்லிய ரக பருத்தி நூல்கள் நூற்பதில் பிரசித்தி பெற்றது.

○ ● ○

எங்கள் புதிய தறிகளிலிருந்து வெளிவந்த தரத்தில் சிறந்த துணி ரகங்கள் புகழ்பெற்று விளங்குகின்றன.

○ ● ○

சலவை மில்லும் தயாராகிறது.

○ ● ○

மானேஜிங் ஏஜண்டுகள்:

ஜி. வி. கோவிந்தசாமி நாயுடு
அண்டு கம்பெனி.

குமரன் மில்ஸ் லிமிடெட்,

புதுப்பாளையம், கோயமுத்தூர்.

(மேட்டுப்பாளையம் ரோட்)

1935-ல் ஸ்தாபிக்கப்பெற்றது.

★

மூலதனம், மானேஜ்மெண்டு, தொழிலாளர்

ஆக எல்லாம் நம் இந்திய மயம்

முதல்தரமான இந்த மில்லில் தயாராகும்

சுதேசி நூலையே வாங்குங்கள்

20, 40, 60 நெ. நூல் தயாரிக்கப்படுகிறது

குணம் நிறைந்த சரக்கை உற்பத்தி செய்வதே

நிர்வாகஸ்தர்களது நோக்கம்.

★

கோவையில் சிறப்பாக விளங்கும் மில்களின் வரிசையில்

இந்த மில்லும் சேர்ந்திருக்கிறது.

கல்வி, தொழில் அனுபவம் நிறைந்தவர்களால்

நிர்வகிக்கப் பெற்று வருகின்றது.

வருடா வருடம் பங்குதாரர்கள் நல்ல

டிவிடெண்டு பெற்று வருகிறார்கள்

★

Managing Agents:—

N. APPUSWAMY NAIDU & CO,

Managing Director :—

G. V. MUTHUSWAMY, B. Sc.,

நல்ல விதைப் பருத்தி விதையும், மாட்டுத் தீவனத்திற்குப் பருத்தி விதையும், குடியானவர்களுக்கும், வியாபாரிகளுக்கும் நியாயமான விலைகளில் சப்ளை செய்கிறோம்.

உரத்திற்கும், மாட்டு உணவிற்கும் ஏற்றஎக்ஸ்பெல்லர் கடலைப் புண்ணாக்கு சரசமான விலைக்கு விவசாயிகளுக்கும் தாராளமாய்க் கொடுக்கப்படும்.

நவீன முறையில் தயார் செய்து சுத்தம் செய்யப்பட்ட தரமான கடலெண்ணெய் நம் தேசம் பூராவிற்கும் சப்ளை செய்வதுமல்லாமல், அயல் நாடுகளின் தேவைக்கும் கணிசமான முறையில் குறித்த காலத்தில் ஏற்றுமதி செய்கிறோம். இதர விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

உணவு தானியம், கரும்பு, பருத்தி ஆகியவைகளின் உற்பத்திப் பெருக்கத்திற்கு மிக அத்யாவசியமாய் வேண்டப்படும் ரசாயன உரங்களாகிய அம்மோனியம் சல்பேட், அம்மோனியம் பாஸ்பேட், சூபர்பாஸ்பேட், ஆகியவை எல்லா முக்ய இடங்களிலும் டிபோக்கள் ஏற்படுத்தி சர்க்காரின் நிர்ணய விலைக்கு சப்ளை செய்கிறோம்.



ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜின்னிங் & ஆயில் மில்ஸ்

பாப்பநாய்க்கன்பாளையம்

போன் நெ. 51 தந்தி "ஆயில்மில்ஸ்"

தபால் பெட்டி நெ. 151 கோயமுத்தூர்

Telegrams: PIONEER Telephone: 16

THE

Coimbatore Pioneer Mills, Ltd.

PEELAMEDU. COIMBATORE. SOUTH INDIA.

SPINDLES 19,700

SPINNERS OF HIGH QUALITY

YARN - 40s to 100s.

MANAGING DIRECTOR:

G. R. GOVINDARAJULU NAIDU

Printed at Kasthuri Printing Press, Jail Road, Coimbatore.